# கலையருவி

# 1995

கல்விக் கழக வெளியீடு

பதினாறாவது ஆண்டுமலர்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

அரசினர் ஆசிரியர் கலாசாலை

யதன்சைட்,

கொட்டகலை.

# அருவியின் ஜீவ அரும்புகள்.


கலாசாலை சின்னம்

01 கலாசாலை கீதம்.

02 தமிழ்த் தாய் வாழ்த்து.

03 தமிழ்மொழி வாழ்த்து.

04 மாண்புமிகு கல்வி அமைச்சரின் ஆசிச்செய்தி

05 மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் அவர்களின் ஆசிச்செய்தி.

06 மாண்புமிகு பிரதி அமைச்சர் சந்திரசேகரன் அவர்களின் ஆசிச்செய்தி

07 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆணையாளரின் ஆசிச் செய்தி.

08 உதவி கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி.

09 கலாசாலை முதல்வரின் ஆசிச்செய்தி.

10 கலாசாலை உபமுதல்வரின் ஆசிச்செய்தி.

11 ஆலோசகரின் இதயத்திலிருந்து ..

12 தலைவரிடமிருந்து

13 செயலாளர் மனம் திறந்து சில நிமிடங்கள்.

14 அருவியின் ஊற்றுக்களை ஜீவநதியாக்கிய பத்திராபதிபர்.

15 கல்விக் கழகம்

16 கல்விக்கழக பணிப்புக் குழு.

17 கலாசாலை பணிப்புக் குழு.

18 மாணவர் பேரவை.

19 முத்தமிழ் கலாமன்றம்

20 விளையாட்டுக் கழகம்

21 இந்து மாமன்றம்.

22 விவசாய கழகம்.

23 மனையியல் மன்றம்

24 ஆரம்ப வகுப்புகளில் புதிய கற்பித்தல் முறைகளில் அறிஞரின் சேவை.

25 ,, ,, ,, ,, ,, ,,

26 கல்வியைப் போற்றுவோம்

27 யாசிப்புகள் வேண்டாம்.

28 பாடசாலையும் சமூக ஒற்றுமையும்.

29 நண்பன்

30 பாடசாலைகளில் முரண்பாடுகளால் தேக்கமடையும் கல்வி வளர்ச்சி.

31 ,, ,, ,, ,, ,,

32 ,, ,, ,, ,, ,,

33 புதிய காவியம்

34 தமிழ்மொழிமூல கல்வி வளர்ச்சியில் மொனராகலைப் பிரதேசம்

35 ,, ,, ,, ,,

36 விஞ்ஞானயுகம் மிஞ்சுமா

37 வேண்டாம் ஓர் உள்ளம் / உழைப்பு.

38 பிள்ளைகளின் நினைவாற்றல்.

39 ,, ,,

40 வகுப்பறையில் மாணவர்களை கட்டுப்பாடுடன் பேண சில வழிகள்,

41 உன்னை நீ நேசி.

42 திரைப்படங்களும் சமுதாய மாற்றமும்.

43 ,, ,, ,,

44 இலங்கையில் மலையக தமிழர்களின் வரலாற்று பின்புலம்.

45 ,, ,, ,,

46 பாடசாலை மாணவரின் தலைமைத்துவம்.
47 வாழ்வே எதிர் நீச்சல்.
48 திகதிகள் முன்னே தெரிவதில்லை.
49 உன் நினைவுடன் என் பயணம்.
முதலாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின் படம்.
50 முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம் ஆரம்ப கல்வி.
51 முதலாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம் விவசாய விஞ்ஞானம்.
52 இன்றைய நிலையும் இருபத்தொராம் நூற்றாண்டில் மலையகமும்.
53 சிரிக்க சிந்திக்க / உயிர்ப்புக்கள்
54 கட்டிட இளைஞரின் மனவெழுச்சி பிரச்சனைகளை தீர்ப்பதில் பாடசாலையின்.
55 மலையக மக்களையா
56 1980இன் பின் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
57 மலைநாட்டின் வனப்பு / உண்மை இதுதான்.
58 சமுதாயத்தில் பாலர் கல்வியின் முக்கியத்துவம்.
59 பிரிவுகள் ஆட்கொண்டாலும்
60 தமிழும் சமயமும்
61 நிலையான செயற்பாடுகள்
62 நமது இளைஞரின் பிரச்சினைகள்
63 ,, ,, ,,
64 இலக்கியத்தில் என்னைக் கவர்ந்தவர்.
65 குரலிருந்தும் ஊமைகள், அறிவாய் ஆசானே.
66 இன்றுவரை புகைப்பட கலை
67 ,, ,,
விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களின் படம்.
68 இலங்கையில் விவசாயக் கல்வி ஒரு நோக்கு
69 ,, ,, ,,
70 தமிழிசை இன்பம்
71 ஒற்றுமை எனும் பலத்தாலே
72 விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம் விவசாய பிரிவு
73 விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம் இந்து சமயம்
74 மக்களும் பண்பாடும்
75 ,, ,,
76 வாழ்வின் குறிக்கோள்
77 ,, ,,
78 கலையும் ரசனையும்
79 ,, ,,
80 பதினாறு ஆண்டுகள் பரிணமித்த மாணவ தலைவர்கள்
81 விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம் ஆரம்பக் கல்வி
82 மீண்டும் உங்களுடன்.

# கலாசாலைக் கீதம்

மலையக மதனில் மகிழ்வுடன் மலர்ந்த
கலையகத் தாயே வாழ்க - எங்கள்
கலையகத் தாயே வாழ்க
மலையக மக்கள் நிலையுயர்ந்திடவே
தலை சிறந்த பணிபுரிக.

- மலையக -

எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கருதி
உண்ணியே பயின்றிடுவோம் - நாம்
பயிற்சியின் பின்னர் பள்ளிச் சிறாரை
முயற்சியால் உயர்த்திடுவோம்.

- மலையக -

இன்றைய மாணவர் நாளைய பிரஜை
என்பதை உணர்ந்திடுவோம் - நாம்
நெறிமுறை காட்டி கலைகள் உணர்த்தி
அறிவை வளர்த்திடுவோம்

- மலையக -

ஆயகலைகள் அறுபத்து நான்கும்
நேயமுடன் பயின்று - நாம்
தமிழர்கள் என்று தலைகள் நிமிர்ந்து
பெருமையுடன் இங்கு வாழ

- மலையக -

பாரி போல் எங்கும் பள்ளிகள் அமைத்து
வாரி வழங்கிடும் அரசு என்றும்
பரிவுடன் பயிற்சிகள் அளித்திடும் அதிபர்
விரிவுரையாளர்கள் வாழ்க.

- மலையக -

# தமிழ்த்தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க
கைக்குவளை யாபதி கொள்
கன்னிகையாள் வாழ்க !

மேதகு மென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க !

சீதமலர்ப் பாதமொளிர்
சிலம்புடையாள் வாழ்க
சேர சோழபாண்டியர் தஞ்
செல்வ மகள் வாழ்க !

நீதியுறுஞ் செங்கோலாய்த்
தூயகுறள் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ் தாய்
நீடுழி வாழ்க !

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !

வாழ்க தமிழ்மொழி ! வாழ்க தமிழ்மொழி !
வாழ்க தமிழ் மொழியே !

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

மாண்புமிகு

# றிச்சர்ட் பத்திரன அவர்கள் வழங்கிய ஆசியுரை...



வருடா வருடம் கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களால் வெளிவரும் " கலையருவி " நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பொறுப்புமிக்க அதிபர், விரிவுரையாளர்களின் துணை கொண்டு இம்மலர் வெளிவருவது அதன் சிறப்பை மேலும் வலுவூட்டுகின்றது. நாட்டின் நாளைய சந்ததியினை உருவாக்கும் பணி ஆசிரியரை சார்ந்ததாக இருக்கின்றது. அதனை உருவாக்கும் ஆசிரியர்களின் பணி பாராட்டத் தக்கது.

இந்நூலில் வரும் ஆக்கங்கள், ஆழமான படைப்புக்கள். எல்லாம் பயன்படத்தக்க விதத்தில் அமைய வேண்டும். கலையருவி இனிவரும் காலங்களிலும் நல்ல, நல்ல விடயங்களை சாதிக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

சகல மாணவர்களையும் நல்ல புரிந்துணர்வையும் தேசிய ஒருமைப் பாட்டையும் வளர்க்கக் கூடிய வகையில் ஆசிரிய பணி அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

றிச்சர்ட் பத்திரன
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கல்வி உயர் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.



## மாண்புமிகு அமைச்சர்

# சௌ. தொண்டமான்

## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

மலையகத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாக விளங்கும் யதன்சைட் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மலையகத்தில் கல்வி வளர்ச்சிக்கு அளித்து வரும் பங்களிப்பு பாராட்டுக்குரியது.

கல்வியில் பின்தங்கியிருந்த மலையக சமுதாயம் முன்னேற இ. தொ. கா. கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் பெருமளவை கல்வி முன்னேற்றத்திற்கே ஒதுக்கி வருகிறேன்.

எதிர்காலத்தில் கல்விமான்களும், டாக்டர்களும், பொறியியலாளரும், சட்டத்தரணிகளும், மலையகத்தில் உருவாக நாம் எடுத்துவரும் முயற்சிக்கு யதன்சைட் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஒத்துழைப்பு நல்க வழி கிடைக்க ஆசி வழங்குகின்றேன்.

**சௌ. தொண்டமான்**
கால்நடை, கிராமிய அபிவிருத்தி அமைச்சர்
தலைவர் இ. தொ. கா.

**MESSAGE FROM THE**

## CHIEF COMMISSIONER OF

Colleges of Education & Teacher's Colleges.

*It is with great pleasure that I issue this message to "Kalaiaruvi" College Magazine of Ythanside Teacher College. I am glad to note that although the student teachers who are undergoing training in this College enjoy relatively few facilities and comforts their thoughts and ambitions are equally compatible with that of their brothers and sisters in other teacher's colleges.*

*It is my fervant wish that their performance in the teaching profession, while portraying their total development in every desirable field, would also contribute to the welfare of children, particularly of the plantation community around them. I understand that this is their 16th anniversary of the college and I wish them and their institution a very bright and hopeful future.*


*D. S. Mettananda*

*Chief Commissioner of Teacher's Colleg*

Ministry of Education, and
Higher Education,
" Isurupaya "
Battaramulla.


உ
திகள்

### உதவி கல்விப் பணிப்பாளர்

## உமறு லெப்பை அவர்களின்

# ஆசியுரை...

*ஆசிரியர் கல்வி நிர்வாகக்கிளை பிரதிக் கல்விப் பணியாளரின் ஆசிச் செய்தி.*

கடந்த வருடங்களைப் போன்று இவ்வருடமும் யதன்சைட் ஆசிரியர் கலாசாலை வெளியீடான ''கலையருவி'' சஞ்சிகை வெளி வருவது பெரிதும் மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இலங்கையிலுள்ள ஏனைய ஆசிரியக் கலாசாலைகளோடு சமதை யாக தமது செயற்பாடுகளூடாக கலாசாலையின் கீர்த்தியைப் பரப் புவதில் ஆசிரிய மாணவர்கள் முன்னிற்பது பாராட்டுவதற்குரியது. இதனைப் போலவே இக்கலாசாலையில் இருந்து பயிற்சி பெற்று வெளியேறி பாடசாலைகளில் பணியை தொடரும் போது உற்சாகம் மிகுந்தவர்களாக செயற்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பெருந்தோட்ட பகுதியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் தன்னலமற்ற பணி பெரிதும் வேண்டப்படுமொன்றாக இருப்பது யாவரும் அறிந்ததே. அத்தகைய சமுதாயத்துக்காக தம்மை அர்ப் பணித்து பணியாற்றும் ஆசிரியர்களாக இக்கலாசாலையில் இருந்து வெளியேறும் ஆசிரியர்கள் மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**எம். ஏ. உமறு லெப்பை**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை,
கல்வி - உயர்கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

# கலாசாலை

# முதல்வரிடமிருந்து..



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்பது எமது ஆசிரிய கலா சாலையின் குறிக்கோளாகும். அவ்வுயர் இலட்சியத்துடன் கல்வியில் மாத்திரமன்றிப் பல்வேறு துறைகளிலும் போதிய பயிற்சிபெறும் பேறு இங்கு கல்வி பயிலும் ஆசிரியர்களுக்கு உண்டு. 17 வருடங்களாக அத்தகைய பணியைச் சிறப்புற ஆற்றி, இக்கலாசாலையின் வெளியீடாகிய இக்கலை அருவி இவ்வாண்டும் வெளிவருவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பலரது கட்டுரைகளும், விரிவுரையாளர்களின் சிந்தனைச் செல்வங்களும், கவிதைகளும், சிறு கதைகளும் இக்கலை அருவியை அணி செய்கின்றன. வளர்ந்து வரும் இக்கலாசாலையின் பிரதிபலிப்பாக இக்கலை அருவியும் வளர்ந்து வருகின்றது. எதிர்காலத்திலும் மேன்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகின்றேன்.

காலத்துக்குக் காலம் கல்வி வளர்ச்சியில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப எமது கலாசாலையிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறுகின்ற ஆசிரியர்கள் தனக்கும் தனது சமூகத்துக்கும் பயன்படத் தக்க வகையில் பணியாற்றி நல்லதொரு சேவையைச் செய்து சுடர் விட்டுப் பிரகாசிப்பார்கள் என்பது எனது அசையாத நம்பிக்கை.

மீண்டும் எத்தகைய கஷ்டங்கள் இடர்பாடுகள் ஏற்பட்டாலும் கூட இக்கலை அருவி ஆண்டுதோறும் வெளிவர வேண்டும் என்று எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனை வேண்டுவதோடு எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்

க. பரமேஸ்வரி
அதிபர் Trd. B. A.

# கலாசாலை பிரதி முதல்வரிடமிருந்து.

ஆசிரிய மாணவர்கள் பல்வேறு வகைகளில் தாம் வாழும் சமுதாயத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதை அவர்களின் சிந்தனையாலும் செயலாலும் உணர்த்த முயன்றிருக்கின்றார்கள் என்பதை இக் கலையருவி உங்கள் கைகளை அடையும் போது உணரக் கூடியதாக இருக்கும்.

தனி மனித நடத்தையை விட கூட்டு மனித ஆற்றல் அபரிதமான சாதனை புரிய வைக்கும் உன்னதம் கொண்டதென்பதை நாம் வாழும் சமுதாயத்தில் உணர்த்துவதற்கான வாய்ப்புக்கள் அருகிப் போய்க் கொண்டிருக்கின்றன. நிர்மூலத்திற்கான அடித்தளமாகவே இளைஞர்கள் கரங்களை இணைத்துக் கொள்கின்றார்கள் என்ற தவறான எடுகோளை மாற்றிக் கொள்வதற்கு அடிக்கடி சமுதாயத்திற்கு பாடம் புகட்ட வேண்டியதான தேவைப்பாடு இளைஞர்களுக்கு இருக்கின்றது. அவ்வாறான படிப்பினையூட்டும் செயற்பாட்டுடன் அறுவடைக்கு ஆதாரமான அம்சங்களைக் கொண்டதாக 'கலையருவி அமைந்திருக்கின்றது. அதற்காக இந்த ஆசிரிய இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வரப்போகும் தலைமுறை வணக்கம் சொல்ல வேண்டியிருக்கும்

கலையருவி கலாசாலையின் ஜீவ ஊற்று இதன் பிரவாகம் களங்கங்களைக் கழுவி கீர்த்தியின் திசை நோக்கி எப் போதும் பாய்வதாக இருக்கட்டும்.

ஈ. முரளிதரன்

# ஆலோசகரின் உள்ளக் கமல மலர்வில்

எமது ஆசிரிய கலாசாலை வெளியீடான கலையருவி இம் முறை வெளிக் கொண்டு வருவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். ஆசிரிய மாணவ மாணவிகளின் படைப்புக்களை தாங்கி புதிய மெருகுடன் வெளிவருகின்றது. கலாசாலையில் எத்தனையோ பிரச்சினைகள் வசதியீனங்கள் இருந்தும் அதனையும் மீறி இந்நூல் வெளிவருகின்றது. ஆசிரிய மாணவர்களின் விடா முயற்சியும் துடிப்பும் இந்நூல் அமைவதற்கான காரணங்களாகும். இதில் வரும் ஆக்கங்கள் உண்மையில் பயன்படதக்க விடயங்களை கொண்டிருக்கின்றன. இதனைப் படிக்கும் போது அதனைக்காணக்கூடியதாக இருக்கும் மலை நாட்டில் இக்கல்லூரி அமைந்திருந்தாலும் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. எனவே இதில் வரும் ஆக்கங்களும் அப்படியே அமைந்திருக்கின்றன இந் நூல் வெளிவருவதற்கு துணை நின்ற அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

செ. ஜெயகுமார்
பொறுப்பு விரிவுரையாளர்
கல்விக்கழகம்.

# தலைவரின் உள்ள வெளிப்பாடு...

வழமைபோல் இல்வாண்டும் கலையருவி நூல் வெளிவருகின்றது. எங்களது ஆசிரிய கலாசாலையின் புறகீர்த்தி செயற்பாடுகளில் ஒரு அம்சமாக இந்நூல் வெளிவருகின்றது. ஆசிரிய, மாணவ, மாணவி-களின் எண்ணத் துளிகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது ஆசிரியரது பணி வெறுமனே கற்பித்தல் பணியை மட்டும் அடிப்படையாக கொண்டவை அல்ல. மாணவர்களது இலக்கிய செயற்பாடுகளையும் ஊக்குவிக்க வேண்டியது ஆசிரியரது அத்தியாவசிய செயற்பாடாக அமைகின்றது. இந்நூலில் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் துணுக்குகள் போன்றபல அம்சங்களை கொண்டதாக அமைகின்றது ஆழமான விடயங்களை உள்ளடக்கியதாக இல்லாவிட்டாலும் நல்லவையாக இருக்கின்றன. சமூகமாற்றத்தை விரும்பும் எண்ணங்கள் போதியளவு உள்ளடக்கப்படாததால் அதனை ஏற்றுக் கொள்ள கூடாது என்ற அளவு கோளை வைக்க முடியாது. அந்த வகையிலும் இந்நூலினை அணுக வேண்டியது முக்கியமானது. இந்நூல் சிறப்புறுவதற்கு பொறுப்பு விரிவுரையாளர். மற்றும் செயலாளரின் பணியும் மிக துடிப்பான செயற்பாடுகளாக அமைந்திருந்தமை குறிப்பிடத்-தக்கதாகும்.

**ஜெ. சற்குருநாதன்**
தலைவர்
கல்விக் கழகம்

## செயலாளரின் செவியுணர் செய்திகள்

ஏறத்தாழ 17 வருடங்களாக சிறப்பான வரலாற்றைக் கொண்ட கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் கலாசாலை யின் ஆசிரிய மாணவர்களின் உள்ளத்தில் ஊறும் கலை இலக் கிய எண்ணங்களை வெளிப்படுத்தும் பதிவுச் சாதனமான கலையருவி நூல் இவ்வருடமும் புது மெருகுடன் வெளிவரு வதில் நாம் பெறும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

ஈழத்திருநாட்டின் மணிமுடியாய்த்திகழும் மத்தியமலை நாட்டில் இயற்கை எழில்மிக்க கொட்டகலை நகருக்கண்மை யில் அமைந்துள்ளது பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தி யிலும் வெகுசிறப்பான முறையில் ஆசிரியர்களை ஒளிவீசும் மாணிக்கங்களாக மிளிரவைக்கும் அதே வேளையில் அவர் களின் கலை இலக்கிய திறன்களை வெளிக்கொணறும் வகை யில் ஆசிரியர் மாணவர்களின் கவிதை, கட்டுரை, சிறுகதை துணுக்குகள் போன்ற துணையூற்றுகளாக உருவெடுத்து அருவியாக உங்களை ஆறத்தழுவ தவழ்ந்துவருகிறது. குறு கிய கால இடை வெளிக்குள் குதித்து வருவதற்கு ஆசிரிய மாணவர்களின் அரிய பணியும், கல்விக்கழக கண்மணிகளின் களைப்புறா உழைப்பும் பொறுப்பு விரிவுரையாளரின் பொன்னான போதனையும் போற்றுதற்குரியது.

'' வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வளர்க தமிழ்ப்பணி '' - என வாழ்த்தும் -

வேலு இரத்தினவேல்
கல்விக்கழக செயலாளர்

# அருவியின் ஊற்றுக்களை ஜீவநதியாக்கிய பத்திராதிபர்

வரலாறு என்பது கடந்து வந்த பாதை ! தனித்தனி மனிதர்களின் வரலாறுகள் பதிவாவது என்பது சாத்தியமல்ல ஆனால் மனிதர்கள் கூட்டாக இயங்கும் ஸ்தாபனங்களின் வரலாறு என்பது திரட்சியான மனிதர்களின் வரலாறுதான்.

கல்விக்கென தம்மை அர்பணித்துக் கொண்ட மனிதர்-கள் ஆசிரியர்கள், அவர்களின் சங்கமத்தில் நிமிர்ந்திருக்கும் எமது ஆசிரியர் கலாசாலையும் தனித்துவமான வரலாற்றுப் பதிவுகளைத் தாங்கியுள்ளது.

இந்த வரலாற்றின் பதிவு ஆவணங்களாக கடந்த காலங்களில் கலையருவி மிளிர்ந்திருக்கின்றது அந்த வழிவகையில் இந்தக் கலையருவியும் உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

ஆசிரியர்கள் தமது சுய அனுபவங்களினின்று இதயத்-திற்குச் சொல்ல வேண்டியது எத்தனையோ ? ஆனால் அவைகளை எல்லாம் சொல்வது என்பது இன்னும் இங்கு சாத்தியமில்லை ஆனால் கலையருவி அவர்கள் சொல்ல வேண்டியவற்றுக்கு ஒரு வடிகாலாக அமைகின்றது என்பது உண்மை.

யதன்சைட் ஆசிரிய கலாசாலை தனியே மலையகத்தின் குரலாக மட்டுமல்லாமல் பல் வேறு மாவட்டங்களின் ஒன்று கூடிய ஆசிரியர்களையும் கொண்டிருப்பதனால் இங்கிருந்து உதயமாகும் சிந்தனைகளெல்லாம் தேசிய மட்டத்திற்கு பொருத்தமானதாகும். அவற்றையெல்லாம் பதிவுகளாக்கி கலையருவி உங்கள் முன்னே வைக்கின்றது. காலங்கடந்தும் இவை நிலைத்திருக்கும் என எண்ணி விடைபெறுகின்றேன்.

கே. சந்திரவதனி
(பத்திராதிபர்)

# கல்விக் கழகம்

**காப்பாளர்:**

செல்வி. கே. பரமேஸ்வரி அதிபர் (Trd B. A.)

ஆலோசகர்கள்:

திரு. . ஜெயகுமார் (B. Ed,)

திரு. சு. முரளிதரன் உபஅதிபர் B. Sc. S.L.E.A.S, (Dip in Edu)

திரு. சீ. ஞானப்பிரகாசம் (Trd. PE)

தலைவர்:

திரு. ஜெ. சற்குருநாதன்

செயலாளர்:

திரு. வி. இரத்தினவேல்

உப தலைவர்:

திரு. ஏ. கருணாநிதி

இணைச் செயலாளர்:

செல்வி. எஸ். வத்சலா

பொருளாளர்:

செல்வி. ஆர். இராஜம்மா

பத்திராதிபர்:

செல்வி. கே சந்திரவதனி


**கழக உறுப்பினர்கள்:**

திரு. பீ. கணேசமூர்த்தி
திரு. கே. யோகேஸ்வரன்
திரு. பீ. டபிள்யு. ரூபஸ்
திரு. எஸ். கே. ஆனந்தராஜா
திரு. எம். நீலமேகம்
திரு. பீ. பாரிநேசன்
திரு. ஜீ. பத்மநாதன்
திரு. கே. கலைச்செல்வன்
திரு. டி. சுந்தரமூர்த்தி
திரு. எம். பன்னீர்செல்வம்
திரு. எஸ். யோகராஜா
திரு. ஏ. ஆனந்தன்
ஜனாப். எம். கபீர்

திருமதி. எம். கோவிந்தராஜா
செல்வி. எஸ், கோகிலவாணி
செல்வி. ஜீ, பி. எம், கொறற்றி
செல்வி. வீ. புஸ்பவதி
செல்வி. ஆர். கண்ணகி
செல்வி. ஜீ. சரஸ்பே
திருமதி. எஸ். வாசுகி
செல்வி. பீ. கலையரசி
திருமதி. என். தமிழரசி
திருமதி. எஸ். அஜந்தா
திருமதி. வீ. மாதேவி
திருமதி. கே. கலையரசி
திருமதி. கே. இராஜேஸ்வரி

**செயற்பாடுகள்**

★ மறைந்த இலக்கியவாதிகளுக்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தியமை.
★ கலையருவி நூல் வெளியீடும், விழாவும்.



# கல்விக் கழக உறுப்பினர்கள்

### முன் வரிசை (இடமிருந்து வலமாக)


செல்வி. கலையரசி ,திருமதி. எஸ். அஜந்தா. திருமதி. கே. கலையரசி, திருமதி. எஸ். வாசுகி, செல்வி, எஸ். கோகிலவாணி, திரு. வீ. இரத்தினவேல், (செயலாளர்) திரு. எஸ். முரளிதரன், (ஆலோசகர்) திரு. எஸ். ஜெயகுமார், (ஆலோசகர்) செல்வி. கே. பரமேஸ்வரி, (போசகர்) திரு. பி. கணேசமூர்த்தி, திரு. வீ. ஆனந்தன், திரு. ரீ. சுந்தரமூர்த்தி, திரு. பீ. டபள்யூ.ரூபஸ்

### இரண்டாம் வரிசை (இடமிருந்து வலமாக)

திரு. கே. யோகேஸ்வரன், திரு. பி. பாரிநேசன், திரு. எஸ். யோகராஜா,
திருமதி. வி. மாதேவி, செல்வி. ஜீ. பி. எம். கொறற்றி, திரு. G. மகேஸ்வரி,
செல்வி. ஆர். கண்ணகி, செல்வி. ஜீ. சரஸ்பே, செல்வி. வீ. புஸ்பவதி,
செல்வி. கே. சந்திரவதனி, (பதிப்பாசிரியர்) செல்வி. ஆர். இராஜம்மா (பொருளாளர்)
திரு. ஜீ. பத்மநாதன், திரு. எஸ். கே ஆனந்தராஜா, திரு. எம். பன்னீர் செல்வம்,

### சமுகமளிக்காதோர்

திரு. ஜே. சற்குருநாதன், (தலைவர்) திரு. எம் நீலமேகம், திரு. கே. கலைச்செல்வன்,
திரு. ஏ. கருணாநிதி, (உப தலைவர்) செல்வி. எஸ். வத்சலா, (உப செயலாளர்)
திருமதி. என். தமிழரசி, திருமதி. கே. இராஜேஸ்வரி,



# கல்விக் கழக உறுப்பினர்கள்

முன் வரிசை (இடமிருந்து வலமாக)


[illegible]

இரண்டாம் வரிசை (இடமிருந்து வலமாக)

[illegible]

சமூகமளிக்காதோர்

[illegible]




## கலாசாலை பணிப்புக்குழு

இடமிருந்து வலமாக:

(1) திரு. எஸ். ஜெயகுமார் B. Ed. (முழுநேரவிரிவுரையாளர்)
(2) செல்வி. எஸ். சங்கரசுப்பு Home Sc. Trd. (முழுநேரவிரிவுரையாளர்)
(3) திரு. எஸ். முரளிதரன் B. Sc. (Hons) S. L. E. A. S. (பதில்முதல்வர்)
(4) செல்வி. கே. பரமேஸ்வரி Trd. B. A. (முதல்வர்)
(5) திருமதி. ரீ. ரவிச்சந்திரன் Dip. in Music Trd. (பகுதிநேரவிரிவுரையாளர்)
(6) திரு. எம். கணபதி Trd. BA. (முழுநேரவிரிவுரையாளர்)
(7) திரு. எஸ். செல்வம் Trd. Agri (பகுதிநேரவிரிவுரையாளர்)

படத்திற்கு சமூகம் தராதோர்:

திரு. எஸ். இதயராஜா Hinduism Sp. Trd (முழுநேரவிரிவுரையாளர்)
திரு. ஸீ. ஞானப்பிரகாசம் Trd. (பகுதி நேரவிரிவுரையாளர்)
திரு. கே. சத்திவேல் Maths Sp. Trd. (பகுதி நேரவிரிவுரையாளர்)
திருமதி. எம். பத்மநாதன் English Sp. Trd. (பகுதி நேரவிரிவுரையாளர்)
திரு. எஸ். பீ. தேவதீபன் (நூலக பொறுப்பாளர்)
திரு. ஈ. எம். நசீர் Dip. in Sports S. L. (பகுதி நேரவிரிவுரையாளர்)



## கலைச்சாலை பணிப்பகுதி

இடமிருந்து வலமாக:

(1) திரு. எஸ். [illegible] B. Ed. ([illegible])
(2) செல்வி. [illegible] Home Sc. Trd. ([illegible])
(3) திரு. [illegible] B. Sc. (Hons) S. L. E. A. S. ([illegible])
(4) [illegible] Trd. B. A. ([illegible])
(5) [illegible] Dip. in Music Trd. ([illegible])
(6) திரு. [illegible] Trd. BA. ([illegible])
(7) [illegible] Trd. Agri ([illegible])

பக்[illegible]:

[illegible] Hinduism Sp. Trd ([illegible])
[illegible] Trd. ([illegible])
[illegible] Music Sp. Trd. ([illegible])
[illegible] English Sp. [illegible]
[illegible]
[illegible] Dip. in Sports Sc. ([illegible])

# மாணவர் பேரவை

**காப்பாளர்கள்**

செல்வி: கே. பரமேஸ்வரி (அதிபர்) Trd. B. A.

திரு. எஸ். முரளிதரன் (பிரதி அதிபர்) B. Sc. (Hons) S.L.E.A.S.

**ஆலோசகர்கள்: அனைத்துவிரிவுரையாளர்களும்**

தலைவர்:
திரு. எஸ். கே. ஆனந்தராஜா

உபதலைவர்:
திரு. எம். வரதராஜா

செயலாளர்:
திரு. வீ. ஞானராஜ்

உபசெயலாளர்:
திரு. கே. டி. கிருஸ்ணசேகரன்

பொருளாளர்:
செல்வி. டி. குகனேஸ்வரி

**பேரவை உறுப்பினர்கள்**

திரு. வே. இரத்தினவேல்
திரு. எஸ். பீ. பன்னீர்செல்வம்
திரு எம். பி. வில்லியம் ரூபஸ்
திரு. ஆர். அரவிந்தன்
திரு. கே. யோகேஸ்வரன்
திரு. டி. ராஜ்குமார்

செல்வி. வி புஸ்பவதி
திருமதி கே. மகேஸ்வரி
செல்வி. எம். விஜயசெல்வி
திருமதி. வி. யோகராணி
திருமதி. எஸ். அஜந்தா
செல்வி. எஸ். சுந்தரகலா

**செயற்பாடுகள்:**

- ★ கலாசாலைக்கான புதிய காணியைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டமை
- ★ முதலுதவி, கல்வியியல் கருத்தரங்குகளை நடத்தியமை
- ★ கொட்டகலை யதன்சைட் பாதை சிரமதானம் மூலம் சீர்திருத்தியமை.
- ★ 2-ம் வருட ஆசிரிய மாணவர்களின் கல்விச்சுற்றுலாவை ஒழுங்கு செய்தமை.
- ★ கலாசாலையின் அனைத்து கழகங்களையும் நெறிப்படுத்தி வழிநடத்தியமை.

# முத்தமிழ் கலாமன்றம்

காப்பாளர்

செல்வி க. பரமேஸ்வரி அதிபர் (Trd. B. A.)

ஆலோசகர்கள்:

திரு. மு. கணபதி (Trd. B. A.)

திரு. சு. முரளிதரன் B. Sc. Hons ) (Dip in Edu ), S.L.E.A S.

திருமதி. இ. ரவிச்சந்திரன் Trd Dip. Mus.

தலைவர்:

திரு. கோ. பத்மநாதன்

உப தலைவர்:

திரு. உ. சிவகுமார்

செயலாளர்:

திருமதி. ம. கோவிந்தராஜா

இணைச் செயலாளர்:

திரு. க கலைச்செல்வன்

பொருளாளர்:

செ. மு. இளையராணி

அங்கத்தவர்கள்:

திரு. த ராஜ்குமார்
திரு. இரா. தர்மரட்ணம்
திரு. ம. மகேந்திரன்
செல்வி. மெ. சாந்தி
செல்வி. மு. சிவசிராணி
செல்வி. சு. கலைவாணி
செல்வி. வெ. வசந்தி
திருமதி. ர. விக்னேஸ்வரி
திருமதி. நீ. ரஞ்சிதமலர்
திருமதி. க. பத்மகுமாரி
திருமதி. மு. கலாவதி
செல்வி. கோ. சரஸ்பே
செல்வி. விஜயசெல்வி
செல்வி. பொ. மணிலா
செல்வி. பி. குமுதினி
திரு. சொ. செ. பத்மாவதி
திரு. க. சிவபாலசுந்தர்
திரு. க. கிருஸ்ணராஜா

## முத்தமிழ் கலாமன்ற செயற்பாடுகள்:

★ மாதாந்தம் பல்வேறு இலக்கிய நிகழ்வுகள் அடங்கிய கலை அமர்வுகளை நடத்தியமை.
★ கவிதை, கட்டுரை, சிறுகதை, சித்திரம், தனி நடிப்பு, நாடகம், பேச்சு ஆகியவற்றில் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கிடையே போட்டி நடத்தியமை.
★ கலை விழா 15-11-95

# விளையாட்டுக்கழகம்

**காப்பாளர்:**

செல்வி. கே. பரமேஸ்வரி அதிபர் Trd B. A.

**ஆலோசகர்கள்:**

திரு. ஈ. எம். நஸீர் (Dip. in Sports S. L)

திரு. எஸ். ஜெயகுமார் B. Ed.

திரு. எம். கணபதி B A. Trd

செல்வி. எஸ் சங்கரசுப்பு H/Sc. Trd.

தலைவர்:

திரு பி. பாரிநேசன்

செயலாளர்:

திரு. ஆர் அரவிந்தன்

பொருளாளர்:

செல்வி ஜி. பி. எம். கொறற்றி

உபதலைவர்:

திரு. ஏ. அலோஸியஸ்

உபதலைவர்:

திரு. எம். சபேசன்

**கழக உறுப்பினர்கள்:**

திரு. ஏ. வரதராஜா

திரு. டி. ராஜ்குமார்

திரு. கே. யோகேஸ்வரன்

திரு எஸ். சிவபாலசுந்தர்

திரு. வி. ரட்ணவேல்

திரு. கே ஆனந்தராஜ்

திருமதி ஆர். சுசிலா

திருமதி. யு. சுகன்யா

செல்வி. என். வித்யாவதி

திரு. ஏ. கருணாநிதி

செல்வி. ஆர். கண்ணகி

**செயற்பாடுகள்:**

★ ஆசிரியர் கலாசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியமை.

# இந்து மாமன்றம்

காப்பாளர்.

செல்வி. கே. பரமேஸ்வரி, அதிபர். Trd. BA

பொறுப்பாசிரியர்.

திரு. எஸ். இதயராஜா. Hinduism Spc Trd.

ஆலோசகர்கள்.

திரு எஸ் முரளிதரன் B, Sc. (Hons) S. L. E. A. S. (Dip. in Ed.)

திரு. கே. சத்திவேல் (Maths SP. Trd.)

தலைவர்:

திரு. கே. யோகேஸ்வரன்.

செயலாளர்:

திரு. ஆர். தர்மரட்ணம்.

நூலாசிரியர்:

செல்வி. எம் பரிமளாதேவி.

பொருளாளர்.

திருமதி. வீ யோகராணி.

உபதலைவர்:

திரு எம். மகேந்திரன்.

இணைச் செயலாளர்:

திருமதி. எஸ். சிவஸ்வர்ணபூரணி.

இணை நூலாசிரியர்:

திரு. சபேசன்.

நிருவாக உறுப்பினர்கள்:

திரு ஜி. பத்மநாதன்.
திரு. ஏ. வரதராஜா.
திரு. எஸ். சிவபால சுந்தரம்.
திரு. கே. டி. கிருஸ்ணசேகரன்.
திருமதி ஆர். சுசிலா.
செல்வி கே. சந்திரவதனி.
திருமதி. என். வசந்தா.
செல்வி எம். சிவசிராணி.
செல்வி ஜி. சரஸ்பே.
செல்வி. எஸ். யோகராணி.
செல்வி. எளி. சுந்தரகலா.
செல்வி. எஸ் மேனகா.
செலவி. ஆர். இராஜம்மா.
செல்வி. என்- வசந்தி.

## இந்து மாமன்ற செயற்பாடுகள்

1) 05- 06- 95 அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
2) 25-09-95 — 3-10-95 நவராத்திரி பூசை நடைபெற்றது.
3) 3-10-95 நவராத்திரி விழா விமர்சையாக நடாத்தப்பட்டது.
4) இந்து சமயப் போட்டிகள் ஆசிரிய மாணவர்களிடையே நவராத்திரி பூசை நாட்களில் நடாத்தப்பட்டது.
5) 1995ம் ஆண்டு ஓம்சக்தி நூலின் ஆறாவது இதழ் வெளியிடப்பட்டது.

# விவசாய கழகம்

**காப்பாளர்**

செல்வி: கே. பரமேஸ்வரி (அதிபர்) Trd. B. A.

**ஆலோசகர்கள்**

திரு. சு. முரளிதரன் (பிரதி அதிபர்) B.Sc. (Hons) (Dip. in Edu) S.L.E.A.S

திரு, மு கணபதி Trd. B. A.

தலைவர்

திரு. பி. கணேசமூர்த்தி

உப தலைவர்

திரு. வை. எம். ஏ. பைசால்

செயலாளர்

செல்வி. பி. குமுதினி

இணைச் செயலாளர்

திரு. எம் மகேந்திரன்

பொருளாளர்

திரு த. டி. சுந்தரமூர்த்தி

நூலாசிரியர்

திரு எம். கே விஜயகுமார்

இணை நூலாசிரியர்

திரு எம். சபேசன்

**நிருவாக உறுப்பினர்கள்**

திரு. எஸ். கே. ஆனந்தராஜா
திரு. கே. கிருஸ்ணராஜா
தி. ஏ. கருணாநிதி
திரு. எஸ். லோகநாதன்
செல்வி. பி. யோகேஸ்வரி
செல்வி. எஸ். விசயகுமாரி
செல்வி. வி. புஸ்பவதி
செல்வி டி. சரோஜாதேவி
செல்வி. எஸ். வத்சலா

**செயற்பாடுகள்**

★ விவசாய கருத்தரங்குகள் நடத்தியமை.
★ பாடசாலை மாணவர்களுக்கிடையே விவசாய அறிவுப் போட்டியை நடத்தியமை.
★ குறிஞ்சிக் கதிர் நூல் வெளியீடும், விழாவும்.
★ வெளிக்கள வேலையாக அம்பேவல பாற்பண்ணை, ரொசிட்டா பாற்பண்ணை என்பவற்றுக்கு சென்றமை.

# மனையியல் மன்றம்

**காப்பாளர்:**

செல்வி. கே. பரமேஸ்வரி. அதிபர்

ஆலோசகர்:

செல்வி: எஸ். சங்கர சுப்பு (Home Science Sp, Trd)

தலைவர்:

திருமதி. யு. சுகன்யா

செயலாளர்:

செல்வி. எஸ். சுந்தரகலா

பொருளாளர்:

செல்வி. என். வித்யாவதி

நூலாசிரியர்:

திருமதி. எஸ். சிவஸ்வர்ண பூர்ணி

**செயற்பாடுகள்**

★ மனையியல் மன்றத்தால் வெளிக்கள பயணமாக காங்கிரஸ் தொழிற்பயிற்சி நிறுவனம், மஸ்கெலியா வைத்தியசாலை, ஸ்ரீ பாத கல்விக் கல்லூரி ஆகியவற்றுக்கு சென்றமை.

★ மனை மஞ்சரி நூல் வெளியீடும், விழாவும்.

# கிறிஸ்தவ மன்றம்

**காப்பாளர்.**

செல்வி. கே. பரமேஸ்வரி (Trd. B. A.) அதிபர்

ஆலோசகர்:

திரு. ஜீ. ஞானப்பிரகாசம்

செயலாளர்:

செல். வீ. புஸ்பவதி

பொருளாளர்:

திரு. டபிள்யு. ரூபஸ்

**நிருவாக உறுப்பினர்கள்**

திரு. ஏ. அலோசியஸ் — செல்வி. ஜீ. பீ. கொறற்றி

**செயற்பாடு**

★ ஒளி விழா

★ சாரோனின் ரோஜா நூல் வெளியீடு

With Best Compliments From



PTC

# *Pathma Trade Centre*

***Manufacturers & Importers***

111 A, Bankshall Street
COLOMBO 11.
SRI LANKA

Tel: 437138, 449740
431463, 327137
Tlx: 21754 Fayaz Ce
Fax 448636, 422110
Attrc: [PTC]

With Best Compliments From

EMC

# E. MOHAMADCANY

**No: 98, 96 Main Street,**

**HATTON.**

Phone: 0512 - 452

WITH BEST WISHES
FROM

RENUZA JEWELLERS

No: 49, NuwaraEliya Road
WELIMADA.

WITH BEST WISHES
FROM

GLOBBOL TRADING CO.

27, Grandpass Road,
COLOMBO. 14.

Imported:-
*PLYWOOD SHEETS & DOORS*

With Best Compliments From

WINTER QULITS [PVT] LTD

111, PALLIDORA ROAD,
DEHIWELA,
SRILANKA.

*Tel: 727505, 727506, 727507, 730516/7*
*Telex: 21547 HANTEXCE Fax: 94-1-737579*

*( Garments Manufactures & Exporters )*

With Best Compliments From

# NAGINDAS

DEALERS IN

***Quality Curtaining &***

***Furnishing Fabrics***

137, Main Street Tel. No: 541198, 541199

COLOMBO 11. Telex: 21457 Hantex Ce

SRI LANKA T' Grams 'Novelty Colombo

# ஆரம்ப வகுப்புக்களில் புதிய கற்பித்தல் முறையில் அறிஞரின் சேவை.

காலத்துக்கு காலம் கல்வி உலகில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அந்தப் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் கற்பிக்கும் போது புதிய புதிய கற்பித்தல் முறைகளைப் பயன் படுத்தி மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய நிலைக் குள்ளாகின்றனர். மேல் நாட்டில் மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து புதிய கல்விமுறை தோன்றியது. பிரென்சுப் புரட்சியின் பழைய முறைகள் மறைந்தன. அந்நாட்டு அறிஞரான ரூசோவின் ''எமிலி'' என்ற நூல் தான் புதிய முறை வித்து எனலாம்.

ரூசோவின் கல்வி பற்றிய கருத்துக்கள் அதில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன கல்வி என்பது மனிதனால் வளர்க்கப் பெற்ற சமூகத்தினர் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது அவர் கருத்தாகும். கல்வி புகட்டுவதில் குழந்தை தான் முக்கியக் கூறு என்பது அவர் கருத்து. இதுவரை காலமும் கல்வி திட்டத்தினை மையமாக வைத்து கற்பிக்கப் பெற்ற முறையைத் தவறு எனக் கண்டித்துக் குழந்தையை மையமாக வைத்து கற்பிக்கப்பட வேண்டும் என்று ரூசோ வலியுறுத்தினார். 'குழந்தையை நன்றாக ஆராய், குழந்தையை அறிவது எளிதல்ல, குழந்தையின் ஒவ்வொரு செயலையும் கவனி, இயற்கையோடு இசைந்து நட' என்பதே இவரது கல்விப் பணியின் உண்மைகளாகும். உளவியல் உண்மைகளை ஒட்டிப் புலன்கள் வாயிலாகத்தான் கற்பிக்க வேண்டுமென அழுத்தமாகக் கூறினார் வெறும் ஏட்டுக் கல்வியை ஆதரிக்கவில்லை.

இவரது கல்வி பற்றிய கருத்துக்களை சுவிற்சலாந்து நாட்டு அறிஞர் 'பெஸ்டலோஜி' வகுப்பறையிற் பயன் படச் செய்தார் இவரும் புத்தகப் படிப்பை வெறுத்தார் சொற்களுக்கு முன் பொருட்கள் என்பது அவரின் உயிர் நாடி எனவே உற்று நோக்கல் முறை என்ற ஒரு முறையைக் கண்டார். உற்று நோக்கிக் கற்றலிலேதான் மொழி விளக்கம் அடைகிறது என்றார் மேலும் பெஸ்டலோஜி இரண்டு முக்கிய கூறுகளை வகுத்தார்.

ஒன்று புற உலகிலேயிருந்து அநுபவம் மூலம் பெறும் கருத்துக்களே கல்வி. அவ்வனுபவத்தை புலன்வாயிலாக அடைய முடியும் எனவே ஆசிரியர்கள் அவ்வறிவுப் பெருக்கத்திற்கு துணையாக இருக்க வேண்டுமென்றார். இரண்டாவது முழு வளர்ச்சி அடைய வேண்டிய மனிதன் குழந்தையிடமே மறைந்து காணப்படுகின்றான் என்று ரூசோவின் கொள்கையை வலியுறுத்தினார் இதனையே விவேகானந்த அடிகளாரும் ''கல்வி என்பது மனிதனிடம் ஏற்கனவே மறைந்து கிடக்கும் அறிவின் மலர்ச்சி என்று கூறினார்.

பெஸ்டலோஜிக்கும் பின் கல்வி உலகில் சிறந்து விளங்கியவர் ''புரோபல்'' ஆகும். அவரும் குழந்தைகட்கு இயற்கையோடொட்டிய கல்வியே புகட்ட வேண்டும் என்றார். இவர் கொள்கைப்படி பள்ளி என்பது ஒரு பூங்கா. அங்கு பயிற்றும் குழந்தைகள் பூங்காவில் வளரும் செடிகள் குழந்தைகளைக் கண்காணிக்கும் ஆசிரியர்கள் செடிகளைப் பாதுகாக்கும் தோட்டக்காரர்கள் எனவே பிள்ளைகள் தாமாகச் செயற்பட்டும் கருத்துக்களை வெளியிட்டும் வளர்ச்சி பெற வேண்டுமென்பது புரோபலின் கொள்கையாகும். இவற்றைப் பாடல்கள் படைப்பாற்றல்களின் துணை கொண்டு எய்து விக்கலாம் என்று கருதினார்.

அடுத்து இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ''மொன்டி சூரி'' அம்மையாரும் புரோபலைப் போலவே குழந்தைகளை வளரும் செடிகளாகக் கருதினார். குழந்தைகளின் புலன்களுக்கும் பயிற்சி அளித்து அவர்களைக் கூர்மதியினராக்கலாமெனக் கருதினார். இவ்வம்மையாரைத் தழுவியே ''மொன்டி சூரி'' நிலையங்கள் எழலாயின இக்கல்வி நிலையங்கள் விளையாட்டு வாயிலாக கற்பிப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன.

அடுத்து அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ''ஜோன் டூயி'' பிற்கால வாழ்வைக் குழந்தை ஓரளவிற்கு பள்ளியிலே கண்டு கொள்கிறது என்றார். குழந்தைப் பருவத்தில் இயக்கம் இயல்பாததால் அது செயலுக்குத் துடிக்கிறது. பாடசாலையில் பெறும் அறிவு அதனிடம் அமைந்துள்ள இயக்கப் பண்புகளையும் கவர்ச்சிகளையும் ஒட்டி இருத்தல் வேண்டும் இம்முறையில் பாடசாலை வாழ்வு அமைந்தாற்றான் குழந்தையின் கல்வி சிறக்கும் என்றார். இதனைத் தெளிவாக உணர்ந்து கற்றல் செயல் முறையில் அமைய வேண்டுமென்று ஓர் கொள்கையை டூயி நாடெங்கும் பரப்பினார். குழந்தைகளின் இயற்கைக் கவர்ச்சிகளை நான்காகப் பிரித்தார். உரையாடுவதன் மூலம் கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆர்வம் வினாக்கள் மூலம் செய்திறனை அறிவதில் ஊக்கம். பொருள்களைப் புனைவதில் விருப்பம். கருத்துள்ள கலையுணர்வுடன் கூறுவதில் ஆசை ஆகிய பண்புகள் குழந்தையில் இயல்பாக அமைந்துள்ளதெனக் கூறினார்.

எனவே அறிஞர்களின் கருத்துப்படி ஒவ்வொரு ஆசிரியரும் தம்மிடையே வரும் குழந்தைகளை அவர்களின் புது முறைகளினால் பயிற்றுவித்து நாட்டுக்கு நற்சேவையாற்ற உறுதுணை பூணவேண்டும்.

- முற்றும் -

செல்வி. க. பரமேஸ்வரி (அதிபர்)
(Trd. B. A.)

# கல்வியைப் போற்றுவோம்.

கல்வி என்பதற்கு இது தான் வரைவிலக்கணம் என்று கூற முடியாது. காரணம் இன்றும் தத்துவஞானிகளும் புலமைப் பித்தர்களும் தமிழில் எத்தனை அழகிய அருஞ் சொற்கள் உள்ளனவோ அத்தனையையும் சொற்கோம்பளாக அடுக்கி நாளுக்கு நாள் புத்தம் புதிய கருத்துக்களை இயம்பிய வண்ணம் இருக்கின்றனர் இத்தனை சிறப்பும் புகழும் பெற்ற தங்கச் செல்வமான கல்வியை மறக்கவோ மதிக்காமல் இருக்கவோ முடியாது.

காயம் உலாவவேண்டுமென்றால் அதற்கு உயிர் இன்றியமையாதது. அதேபோல் மனிதனின் வாழ்வும் ஐந்தறிவு படைத்த உயிரினங்களிலும் சிறப்பு மிக்கது செழுமையானது வானிலே நட்சத்திரம் போல் மனிதனின் நற்பண்புகளை வெளிக்கொணர்வது கல்வியே!

எம்மிடம் இருக்கும் எல்லாச் செல்வமும் எம்மைவிட்டு அகன்றுவிடும் பட்டினத்தார் கூறுவதைப் போன்று ''காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா'' என்பதைப் போல் நாம் கட்டிக் காக்கும் எமது மேனியும் உயிரும் கூட எம்மை விட்டுச் சென்றுவிடும். ஆனால் சாகாவரம் பெற்ற கல்விச் செல்வம் ஏழேழு ஜென்மத்திலும் எம்மை விட்டுச் செல்லாது.

கல்வியோ வெண்தகட்டால் வேகாதது கள்வரால் கொள்ளை கொள்ள இயலாதது விலைக்கு விற்கமுடியாதது. பண உடல் பலத்தைக் காட்டியோ மிரட்டியோ அபகரிக்க முடியாதது இத்தனை இத்தனை சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கல்வியை ஆற்ற நினைத்தாலும் கொதித்தெழுந்த கல்விமான்கள் அதனைப் போற்றவே செய்வார்கள் தெய்வப் புலவன் வள்ளுவர்.

கண்ணுடையார் என்போர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்''

எனக் கல்வியினைச் சிறப்பிக்கின்றார்

நாம் எமது மேனியை அலங்கரிக்க நவரத்தினங்களையும் எத்தனைஆடை அணிகலன்களையும் அணிந்து இயற்கையான எம்உடலை செயற்கையழகுச் சாதனங்களால் அலங்கரிக்க முயன்றாலும் கல்வி எனும் ஒளிவீசா அவனது அகக்கண் ஊனக் கண்ணாகவே அத்தனை அழகையும் பாழடித்து விடும். கல்வி கற்றவர் கண்களில் என்றும் ஞான ஒளிவீசும். இத்தனை சிறப்பெய்தும் ஞானக் கலையை எம் வாயாரப் போற்ற இயலவில்லையாயின் அது நாம் முற்பிறவியில் செய்தபாவத்திற்கான தண்டனையே ஆகும்.

பாரில் அரசாளும் பேரரசனாலும் பிறநாட்டிற்குச் சென்றால் அரசனுக்குரிய இயல்புகளில் அல்லதுபிறரின் விளக்கத்தின் பின்னரே அவனைப் போற்றுவர் ஆனால் கல்வியை நயம்படக் கற்ற ஏழையாயினும் அவனின் ஓர் பொன்னான அழகு வார்த்தையில் பிறர் அவனை மதிப்பர் இதனை தான் சான்றோர் ''செல்வம் பொருந்தியவனுக்கு தன்நாட்டின் எல்லைக்குள் மட்டுமே சிறப்பு ஆனால் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்றனர். உனது விலாசத்தை விபரிக்கும் கல்வியைப் போற்ற வேண்டும்.

இழிகுலத்தில் பிறந்தான் என மனிதனையே எச்சில் இலையோல ஒதுக்கி வைப்பவர் உயர் குலத்தோர் அன்று இன்றோ கல்வி எனும் அழியாச் செல்வத்தைப் பெற்ற இழிகுல மனிதனும் உயர் குலத்தார் இருக்கும் அவைவிலே சிங்கம் போல் வீறு நடை பயில வைப்பது இக் கல்வியே. இதனை நாம் ஜாதி, மத, பேதமின்றி போற்றுவோமாக.

காலகள் நடக்கத் துணிந்தால்

பாதைகள் ஒருபோதும் மறுப்புச்சொல்வதில்லை என்றார் கவிஞர் இதேபோன்று வாலிபமிடுக்கு வாழ்நாளில் எதையாவது சாதித்துவிட வேண்டும் வாழவிட வேண்டும் என்று துடிக்கும் ஜீவன்களுக்கு நல்வழி காட்டும் தீபமாக சுடர்விடுவது இக் கல்வியே. எந்தப் பொருளைப் பற்றி யார் யார் எப்படியெல்லாம் சொன்னாலும் அவற்றையெல்லாம் கேட்டு எது உண்மை என்று கண்டு கொள்ளச் செய்வது தான் அறிவு. அதனை வழங்குவது கல்வியே தீயவற்றை ஒழிக்கச் சிந்தையை தூய்மைப்படுத்துவதும் இதுவே. இத்தனை சிறப்புப் பொருந்திய கல்வியை எட்டுத் திசையும் கிட்டும் வகையில் போற்றத் தோன்றவில்லையா?

அழகிய மூன்று எழுத்தில்
அமைவது அன்பு
அமுதத்தை வெல்வது பண்பு
இதை நீ நம்பு.

ஆம் கல்வி கற்றவனிடம் அன்பும் கருணையும் மிளிரும் அதனால் அவன் பண்பாக வாழ்வான். கல்வி என்னும் மூன்றெழுத்தே இவ்உலகையும் ஆட்டிப் படைக்கும் சக்தியாக திகழ்கின்றது இதுவல்லமையுடன் ஊக்கத்தையும் நல்குவதோடு ''இப்படித்தான்'' என்று வாழ்வோரின் செங்கோளாகவும் தவழ்கின்றது என்றால் மிகையாகாது. எமது சிந்தைப் புரவியை சுடச் செய்

யும் சவுக்கும் அதுவே. நிறுத்தச் செய்யும் கடிவாளமும் இக் கல்வியே. இதனை சரிவரக் கற்றவனே இன்று விஞ்ஞானி, கல்வி மேதைகள், உயிர்காக்கும் வைத்தியர் ஆசான் என்றெல்லாம் விளங்குகின்றனர். கல்வித்தாய் சன்மானமாக வழங்கும் பட்டங்கள்தான் இவை.

தன்னலம் கருதாது தனக்கென்று எதனையும் கேட்காது ஏழையின் சிரிப்பிலும் இன்பம் காணும் தெய்வம் மானிடனுக்காய் நல்கிய அருட்கடாட்ஷம் கல்வியே. இக்கல்வித்தாயை வையகம் என்றும் போற்றும் நாமும் அறியாமை இருள் போக்கும் இச் சுடரை அணையாமல் போற்றுவோம், அறிவுப் பசியோடு திரியும் கல்வித் தாயின் புதல்வர்களே அவதானியுங்கள்,

''கல்வி எனும் துடிப்பு இல்லாத இடம்தான் எமது சமுதாயம்''

துடிப்புகளாக நாமிருந்து அதனை கரை சேர்க்கவும் வாழ்வின் நன்நிலையை நாம் பெறவும் போற்றுவோம். கல்விதனை போற்றுகின்ற உங்களுக்கு நல்குகின்றேன் எனது நன்றிதனை.

வாழ்க கல்வித் தாய்
வளர்க எமது தேசம்

எஸ். கே. ஆனந்தராஜா
விவசாய விஞ்ஞான கற்கைநெறி
விடுகையாண்டு

# யாசிப்புகள் வேண்டாம்

இறைவன் படைத்த இந்த பூமியில்
எல்லோரும் ஓரினமாய் வாழ
எல்லாம் எல்லோருக்குமாய் - இறைவன்
எண்ணில்லாமல் தந்த போதும்
ஏனோ யாசிப்பின் குரல்தான்
எங்கும் ஓங்கி ஒலிக்கின்றது.

மனிதர்களே...!

உங்கள் உள்ளும் புறமும் தேடுங்கள்
விழிகளால் மட்டுமல்ல - உள்ளத்தாலும்
ஊடுருவித் தேடுங்கள் - அப்போதுதான்
உங்களுக்குப் புரியும் உலகத்தின்
புலரலிலும் அஸ்தமனத்திலும் சுடர் விடும்
விடியலின் வசந்தங்கள்

பூவுலகின் பட்ட மரமெல்லாம்
உங்களைப் பார்த்து ஓலமிடுகின்றன
ஊனர்களே ! செல்வர்களே..! ஏழைகளே..!
பக்திமான்களே..! புகழ் விரும்பிகளே.!
யாசிக்காதீர்கள் நீங்களெல்லாம்
நாளைய தூறலில் தழையலாமென
நம்பிக்கையுடன் நானிருக்கையில்
நீங்கள் மட்டும் நித்தமும்
யாசிப்பது ஏன்?

நிர்சலனமாய் இயங்கும் இயற்கையே
நம்பிக்கைக்கு நற்சான்றாகும்
உங்கள் ஞானக் கண்களால்
இயற்கையின் ஓசையில்லா அழகினை
உற்று நோக்குங்கள் - புரியும்

உங்கள் வசந்தங்கள் - உயிர்ப்பான
நம்பிக்கையில் நர்த்தனமிடுவது
எனவே நீங்கள் யாசிக்காதீர்கள்
யாசிப்புகள் நேற்றைய ஊனங்களை
மீண்டுமாய் ஞாபகப்படுத்துகின்றன
நம்பிக்கை கொள்ளுங்கள் - அவையே
நாளை வசந்த வாழ்விற்கு
நித்தியமாய் ஸ்திர வித்திடுகின்றன.

இரா. இராஜம்மா
ஆரம்பக் கல்வி
( விடுகையாண்டு ) 94/95

With Best Compliments From

S.V.S

# Sri Vinayaga Store

No. 123 Thalawakelle Road,
**PUNDULOYA**

☎ 234

BEST COMPLIMENTS FROM

# F. M. S.

A. SELVARAJAH
*[ Managing Partner ]*

Financial Management Systems
*[ Accountants and Tax Consultants ]*

**No. 20, Bridwell Bazaar,**
**BOGAWANTHALAWA**

**Associates Offices In Thalawakelle & Nuwara - Eliya**

'' உங்கள் வணிக மேம்பாட்டுக்கு நிச்சயம் வலக்கரம் கொடுப்போம் ''

WITH BEST COMPLIMENTS
FROM

**SHIRI GAYATHRY VIDEO VISION**

*No. 115, Main Street,*
*MASKELIYA.*

*052-7294*

---

WITH *BEST WISHES FROM*

*****

**NEW SHANTHI STORES**

**No 108, Main Street,**
**MASKELIYA.**

**Phone: 052-7346**

---

*WITH BEST COMPLIMENTS FROM*

**C J**

**CENTRAL JEWELLERS**

PAWN BROKERS

**No. 102, Main Street,**
**MASKELIYA.**

*052 - 7349*

---

WITH BEST COMPLIMENTS FROM

**R S**

***Ranjana Stores***

DURAISAMY
RAJESWARA

Licensed Pawn Broker

*No 54, Post Office Road.*
*MASKELIYA.*
*Phone: 052/7331*

WITH BEST COMPLIMENTS FROM

22, Ct Sovereign Gold Jewellery

**PR Soumasundaram Jewellery**

**62, MAIN STREET,**

**T. P. 045-4496 KAHAWATTA.**

பிறந்தோம் வாழ்ந்தோம்
என்பது போலி
வாழ்ந்தோம் எம் பெயர்
வாழ்கிறது இது உண்மை
பெயர் வாழ நீ வாழ
உனக்கு தேவை கல்வி
இக்கல்வி வாழ உங்களின்
சேவைக்கு எனது
வாழ்த்துக்கள்

**கோ. இராசையா**

இல. 4, லேடி மெக்கலம் ட்ரைவ்
நுவரெலியா.

WITH BEST COMPLIMENTS
FROM

S. Rajendam

**SHANTHA SALOON**

**No. 31, Lawsan Street**

**NUWARA-ELIYA**

WITH BEST COMPLIMENTS FROM

**Lalitha Jewels**

ලලිතා ජුවෙල්ස් லலிதா ஜுவல்ஸ்

22, Ct, Sovereign Gold Jewels

**No. 24, Kandy Road,**

**NUWARA-ELIYA.** T. P. 052 2320, 3099

BEST WISHES FROM

**SATHYA'S**

**Pawn Brokers & Dealers in Eversilver Ware**

**C I Siva Complex**

Lawson Street,

**NUWARA-ELIYA.**

BEST WISHES FROM

**NUWARA-ELIYA AGENCY**

*Dealers in Agro — Chemicals, Sprayers Vegetable Seeds. Spare Parts & Fertilizer Etc.*

**No. 110, Kandy Road,**

**NUWARA-ELIYA**

*T P . 052 — 2295*

# பாடசாலையும் சமூக ஒற்றுமையும்

நாளை மலரப் போகும் சமுதாயம் நல்ல தொரு சமுதாயமாகத் திகழ வேண்டும். அச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அறிவிற் சிறந்த கல்விமான்கள் உருவாக வேண்டும். இக் கல்வி மான்களை உருவாக்குவதற்கு அத்திவாரமாய் விளங்குவது பாடசாலை என்றால் அது மிகை யாகாது.

உலகமறியாத வயதில் உலகைப் புரிந்துகொள் வதற்காக பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்ற னர் சின்னஞ்சிறார்கள் நாளடைவில் கல்வியின் வாசனையை நுகரத் தொடங்கி தமது அறிவை விருத்தியடையச் செய்கின்றனர். அவர்களது சிந்தனை விசாலமடைகின்றது. நன்மை தீமை களைப் பகுத்தறிந்து கொள்கின்றனர் நாம் வாழும் சமூகத்தை புதிய புதிய கோணங்களில் நோக்குகின்றனர்.

பாடசாலை என்பது எல்லோருக்கும் பொது வானது. அங்கு ஜாதியில்லை, பேதமில்லை அனைவரும் மாணவர்கள் என்ற ஒரே நோக் கிலேயே நடத்தப்படுகின்றனர் அங்கு உயர்ஜாதி தாழ் ஜாதி, பணக்காரன், ஏழை, கறுப்பு, வெள்ளை என்ற போலிப் பேதங்களுக்கு இடமே யில்லை.

பாடசாலையில் பயிலும்போது பலவித மான மாணவர்களைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பு ஏற்படுகின்றது ஒவ்வொருவரைப் பற்றியும் அறிந்து கொள்வதோடு அவர்களின் உணர்வு களையும் புரிந்து கொள்ளும் சூழ்நிலையும் இங்கு உருவாகின்றது ஒருவரையொருவர் மதித்து வாழும் மனப்பாங்கு மாணவர்களிடையே இயல் பாகவே எழுகின்றது ஒவ்வொரு மாணவன் மனத் திலும் புதிய புதிய சிந்தனைகள் உருவாகின்றன.

பாடசாலை பயிற்றுவித்த ஒற்றுமை வாழ்க் கையைத் தனது குடும்ப வாழ்க்கையிலும் காண முயல்கின்ற ஆர்வம் மாணவர்களிடையே துளிர் விடுகின்றது குடும்பத்தவர்களை மதித்து நடக் கும் மனப்பாங்கு அகத்தே எழுகின்றது இதனால் குடும்பத்தில் அமைதி நிலை குறைவில்லா இன்ப வாழ்வு குதூகலயிடுகின்றது.

சாதி மத பேதம் மறந்து எல்லோரும் சரிசம மாக நட்புக் கொள்ளும் ஒரு களமாக விளங்கு வது பாடசாலை எனலாம் பாடசாலையில் பழ கும் இப் பண்பு எங்கு சென்றாலும் கூடவே நிழல் போல் தொடர்ந்து செல்கின்றது ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற தாரக மந்திரம் தவழ்ந்து விளையாடுகின்றது. அனைவரும் ஒரு வர் மேல் ஒருவர் அன்பு கொள்கின்றனர்; நட்பு பாராட்டுகின்றனர் அங்கு சமூக ஏற்றத் தாழ்வு கள் சத்தின்றிப்போக சமத்துவம் தழைத்தோங்க சாதிப் பூசல்கள் அடியோடு மறைகின்றது

பாடசாலையில் சமூக ஒற்றுமைக்கு வித்திடப் படுகின்றது என்னும் போது அப்பெரும்பணி அறி விற் சிறந்த ஆசான்களையே சார்கின்றது மக் களிலிருந்து மக்களை வேறுபடுத்திக் காட்டும் பகுத்தறிவை மாணவர்களிடையே ஒளிவிடச் செய்கின்றது. அவர்களுக்கு எதைப் போற்ற வேண்டும் எதை நீக்க வேண்டுமென்பதை தெளிவாக எடுத்துக் கூறுகின்றனர். மாணவர்கள் அறிவு என்னும் குடத்திலிடப்பட்டு புடமிட்டு எடுக்கப்படுகின்றனர் சமூகத்திற்கு நல்வழியைக் காட்டும் கலங்கரை விளக்காக வளர்த்தெடுக்கப் படுகின்றனர்.

சமூகத்தில் நாளுக்கு நாள் பிரச்சனைகள் கூடிச் செல்கின்றனவே ஒழிய குறைந்து செல்வ தில்லை இவ்வாறு பிரச்சனைகளின் அதிகரிப் பிற்குக் காரணம் சமூகத்திடையே நிலவும்கருத்து வேற்றுமைகள் தான். கருத்து வேற்றுமைகளால் சமூக ஒற்றுமை குறைகிறது. ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழும் மனப்பாங்கு இன்மை தான் இவ்வாறான பிரச்சனைகளுக்கு அடிப் படையாய் அமைந்து விடுகின்றது. இவ்வாறு ஒரு வரை ஒருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மை யை பாடசாலை கற்றுத் தருகிறது. இதனால் கருத்து வேறுபாடுகள் சமூகத்திடையே சிறிது சிறிதாக மருவி விடுகின்றன

ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் கோபம் நாளடைவில் வெறுப்பாய் மாறி அழிவிற்கு வழி வகுத்துவிடுகிறது மனப்பக்குவமற்ற நிலைமையில் தான் இவ்வாறான கோபதாபங்கள் எழுந்து சண்டை சச்சரவுகளில் முடிவடைகின்றன. இவற்றையெல்லாம் சிறுவயதிலேயே தடுக்கும் பொருட்டு மனத்தை பக்குவப்படுத்தும் படியாக பாடசாலைகளில் அறிவுரைகள் வழங்கப்படுகின் றன. இவ் அறிவுரைகளினால் மனதின்கண் எழும் அழுக்காறு வெகுளி என்பன அடக்கப்பட்டு மனம் பக்குவப்படுத்தப்படுகின்றது'

சமூகத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்படும் போது அதைத் தடுக்க வேண்டும் எனும் மனப்

பான்மை படித்தவர்களிடையே எழுகின்றது அவற்றின் தீமைகளை எடுத்துக் கூறி மீண்டும் அவ்வாறான பிரச்சனைகள் ஏற்படாதிருக்க அறிவுரைகள் நல்கப்படுகின்றன. இவ்வாறு சமூகத்தின் ஒற்றுமையை கட்டிக் காக்கும் ஒழுக்க சீலர்களை உருவாக்குவதில் பாடசாலை பெரும் பங்கு வகிக்கின்றது.

உதயமாகும் நாளைய சமுதாயம் நமது சமுதாயம் அது சிதையாமலிருக்க வேண்டுமாயின் நமக்கு நல்லறிவு, நற்பண்பு அவசியமாகும். அவற்றைப் பெரும்பாலும் நாம் தேடிக்கொள்ள வாய்ப்பளிப்பது கல்வி பயிலும் கலைக் கோயில் தான் என்றால் அது மிகையாகாது. நம் பெற்றோரை, குருவை பணிந்த எவரும் எல்லோரையும் மதித்து வாழும் வழக்கத்தை நம்மனத்தே கொண்டிருப்பர் இதனால் சமூகத்தில் பிணக்குகள் தோன்ற வாய்ப்பில்லாமல் போக சமூகம் ஒன்றுபடுகின்றது.

இன்றைய சூழ்நிலையில் சமூக ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் பணியில் எத்தனையோ நிறுவனங்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிற்பினும் சமூக ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் பணியுடன் அத்திவாரமாக ஆணிவேராக பாடசாலை திகழ்கின்றது என்பது மறுத்துக் கூற முடியாத உண்மையாகும்.

செல்வி. கோ. சரஸ்பே
இந்து சமயப் பிரிவு,
விடுகையாண்டு. 94/95

# நண்பன்

★ தேவையில் உதவும் நண்பனே உண்மையான நண்பனாவான்.

★ தேவை ஏற்படாதவரை நண்பனைத் தெரிந்து கொள்ள முடியாது.

★ இழப்பதைப் போல் அவ்வளவு விரைவாக ஒரு நண்பன் கிடைத்து விட மாட்டான்.

★ எல்லோருக்கும் நண்பன் ஒருவருக்கும் நண்பன் அல்லன்

★ ஒரு நல்ல நண்பன் உன்னில் பாதியாவான் அவனை உன்னுடைய மூன்றாவது கண் எனலாம்

★ உண்மையான நண்பன் எவனெனில் தன் நண்பன் இல்லாத வேளையில் அவனுடைய துயர நிலையில் அவன் இறந்த காலையில் நினைவு கூர்கிறானே அவன்தான்.

★ உன் நண்பனிடம் நீ, உன் தாய் வயிற்றில் பிறவாத ஒரு சோதரனைக் காணவேண்டும்

★ ஒரு மனிதனின் ஒழுக்கத்தை அவன் நண்பர்களைக் கொண்டே தீர்மானித்து விடலாம்.

★ தீய நண்பர்களுடன் இருப்பதைக் காட்டிலும் தனிமையாயிருப்பது நல்லது.

★ நம்மைப் புகழுபவர்கள் அனைவரும் நம் நண்பர்கள் அல்ல

★ முதுகுக்குப் பின் நன்மை பேசுபவனே உண்மையான நண்பனாவான்

★ புதிய நண்பனையோ பழைய விரோதியையோ நம்பிவிட வேண்டாம்.

★ பகைவனின் முத்தத்திலும் சிறந்தது நண்பனின் கண்டிப்பு

★ நண்பர்களுக்கிடையே ஏற்படும் வெறுப்பு பகைவர்களுக்கு மகிழ்வளிக்கும்.

தொகுப்பு:- '' சிந்தியுங்கள் ''
( புத்தகம் )

S. விசயகுமாரி
ஆரம்பபிரிவு
( விடுகையாண்டு )94/95.

# பாடசாலைகளில் முரண்பாடுகளால் தேக்கமடையும் கல்வி வளர்ச்சி...

எஸ். முரளிதரன் - உப அதிபர்

சீரழிந்த பாடசாலைகள், வளர்ச்சியடையும் பாடசாலைகள், விருத்தியுற்ற பாடசாலைகள் என பாடசாலைகளை யெடுத்து நோக்கும் போது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தோட்டப் பாடசாலைகள் பெரும்பாலும் சீரழிந்த பாடசாலைகளாகவே இருந்தமை ஞாபகத்திற்கு வரும். சீடா, G.T.Z நொராட் போன்ற வெளிநாட்டு உதவி வழங்கும் முகவர் அமைப்புகளூடாக கணிசமான பாடசாலைகள் வளர்ச்சியடையும் பாடசாலைகள் தரத்திற்கு கொண்டு வரப்பட்டன.

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு கட்டிடங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் மேற்பார்வை, ஆசிரியர் தர அபிவிருத்தி முதலான பல்வேறு வகையான பங்களிப்புக்களை ஆற்றுகின்றன. இவ்வாறான உதவி ஒரு செயற்றிட்டமாக அமைவதால் குறுகிய காலத்திற்குள்ளே இவையனைத்தும் வழங்கப்பட்டு, பின்னர் விலகிவிடும் அதன் பின்னரே இப் பாடசாலைகள் மறுபடியும் சீரழிந்த நிலைக்குச் சென்று விடுமா? அவ்வாறாயின் அந் நிலையை தடுப்பது எவ்வாறு?

மேற்கூறிய சீரழிநிலையைத் தவிர்த்துக்கொள்வதற்கு இத்தகைய பாடசாலைகள் தமக்குள்ளளே தனக்கென புதிய கலாசாரத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும். இது வளர்ச்சியில் பிறரைத் தங்கியிருக்காமல் தானே தன்னைப் பொறுப்பேற்றுக் கொள்வதாக அமைய வேண்டும்.

பாடசாலையானது தனது சக்திக்கேற்ற முறையில் தனக்கென இலக்குகள், நியமங்கள், விழுமியங்கள் முதலானவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். சில சமயங்களில் பெரும்பாலான பாடசாலைகள். நகர்ப்புற பாடசாலைகளை முன்மாதிரியாகக் கொண்டு இயங்க விரும்பி தோல்வியைத் தழுவிக் கொள்கின்றன.

இவ்வாறான நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பாடசாலை எப்போது தனது சக்தியை உணர்ந்ததாகவும் இருக்க வேண்டும் இதற்காக பாடசாலையானது தன்னை அடிக்கடி சுயமதிப்பீட்டுக்குள்ளாக்கிக் கொள்ளல் அவசியமாகும். பாடசாலையெனும் போது அதிபர், ஆசிரியர், மாணவர், வளங்கள் அனைத்தும் உள்ளடக்கியதென்பது தெளிவு.

சுயமதிப்பீடு செய்து கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் சுயமதிப்பீட்டின் அடிப்படையில் வீழ்ச்சிக்குள்ளான அம்சங்களை மறு மதிப்பீடு செய்து மறுசீராக்கம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு மறுசீரமைப்புச் செய்யும் வேளையில் அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனைவரும் ஒன்று திரண்டு தமது உச்ச உத்திகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். பாடசாலைக்கும் பாடசாலை விருத்திக்காக பயன்படுத்தும் உத்திகள் வேறுபாடானவை இதனை வெளியிலிருந்து ஒருவர் தெரிவு செய்ய முடியாது கூட்டு முயற்சியே இதனைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு பாடசாலைகளும் தனித்துவமானவை என்பதை மனதிற் கொண்டால், அவைபயன்படுத்தும் முகாமைத்துவ முறைகளும் தனித்துவமாகவே அமைய வேண்டியிருக்கும். ஏனெனில் பாடசாலைச் சூழல்-தேவையிருக்கின்ற மனித பௌதீக வளங்கள் ஆகியன மிக முக்கிய தீர்மான சக்திகளாக அமையும். இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மேற்கொள்ளும் தந்திரோபாயத்தின் தன்மையிலேயே அது புதுப்புது வளங்களை சமுகத்திலிருந்து பெற்றுக் கொள்வதில் பாடசாலை வெற்றிபெறும்.

இவ்வாறு வெற்றியடையும் பாடசாலைகளே சிறந்த கல்விச் சேவைகளை வழங்கும் ஆளுமையான மாணவர்களை உருவாக்கும் கட்டமைப்பாகத் திகழ முடியும்.

எனவே பயன்படு பாடசாலைகளை உருவாக்கிக் கொள்வதில் தடைக்கற்களாக நிமிர்ந்திருக்கும் காரணங்கள் தொடர்பாகப் பார்க்கையில் பெருந் தோட்டப் பாடசாலைகள் பின்வரும் அம்சங்கள் பலவீனமாக இருப்பது நேரடி அவதானிப்புகளினூடாக தெரிய வருகின்றது.

01 பாடசாலைக்குள்ளே கடமைபுரியும் ஆசிரியர்கள் ஒருவரையொருவர் அல்லது ஒருவரின் சக்தியை மற்றவர்கள் புரிந்து கொண்டிருப்பதில்லை பெரும்பாலான சந்தர்ப்பங்கள் ஆசிரியர் தனது தொழிலெதிரி என்ற வகையில் நோக்கும் பண்பு காணப்படுதல்.

02 பாடசாலை அதிபர் எப்போதும் ஆசிரியர்களுக்கு இடைஞ்சலாக இருப்பவர் எனும் கருதுகோள் உருவாக்கிக் கொள்ளப்பட்டு ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் ஒத்துழையாமை வியாதி வேகமாக மற்றவருக்கும் பரவுதல்.

03 ஆசிரியர், பெற்றோர், ஆசிரியர்-பெற்றோர் உறவுகள் சீரான நிலைமையில் எப்போதும் இருப்பதில்லை சமூகம் பாடசாலைக்கு தொந்தரவு தரும் ஒன்றென்ற மனப்பாங்கு காணப்படுதல்.

04 திணைக்களம் மேற்பார்வை என்பவற்றுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்து பாடசாலையானது ஒழுங்கான மாணவர்மையமான கற்றல் நடைபெறும் இடமாகத் திகழ முடியாமற் செய்தல்

05 அரசியல் சக்திகளை தமது பாடசாலைக்கு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் பக்குவத்தை பலர் இழந்திருத்தல்.

மேற் கூறிய அம்சங்களை நோக்கும் போது அவைகள் முரண்பாடுகளின் அடிப்படையில் தோன்றியிருப்பதை உணரக் கூடியதாக இருக்கும். எனவே மனப்பாங்கு மாற்றம் இன்மையாலும் பாதகமான மனப்பாங்கை எப்போதும் கொண்டிருப்பதாலும் சமூகத்தின் மையமான பாடசாலை என்னும் அலகு வீழ்ச்சியடைவது வேதனைக்குரியது. இதனைத்தடுக்கும் சக்தி ஆசிரியர்களிடத்தே நிலை கொண்டுள்ளது.

பொகவந்தலாவ, புளியாவத்தை, நோர்வூட், நோட்டன், டிக்கோயா முதலான பகுதிகளின் பாடசாலைகள் சீடா செயற்றிட்டத்தினால் விருத்தி செய்யப்பட்டு தற்போது செயற்றிட்டம் வேறு பாடசாலைகளை இலக்குகளாக்கி நகர்ந்திருக்கின்றது.

இவ்வாறு சீடா செயற்றிட்டம் விலகியிருந்தாலும் இப்பகுதியின் பெற்றோர்கள் தனது பாடசாலைகளுக்கு எல்லாவற்றையும் சீடா வழங்கும், தமது பிள்ளைகளின் கல்வி உபகரணங்களையும் சீடா வழங்குமென்ற மனப்பாங்கோடு இருக்கும் நிலை அவதானிக்கப்படுகின்றது இதனால் பாடசாலை அதிபர்கள் பாடசாலை விருத்திக்காக புதிய செயற்பாடுகளில் இறங்கும். போது, அதற்கான வளங்களை சமூகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலை தொடருகின்றது இன்னும் நுணுகிப் பார்க்கும்போது. இப் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மக்களுக்கு தமது பாடசாலையைப் பற்றி புரிந்து கொள்ளுமளவுக்கு விளக்கத்தையளிப்பதில் தோல்வியுற்றியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. காலனித்துவ ஆட்சியின் போது. தோட்ட முகாமைத்துவமே பாடசாலைக்குப் பொறுப்பாக இருந்த போது. பொதுவாக பெற்றோருக்கு கல்விச் சுமை ஏற்படுத்தப்படவில்லை. எனவே அக்காலத்தில் ஆசிரியர்களுக்கும் தோட்டப் பெற்றோர்களுக்கும் சமூக உறவு நிலவியிருந்தது. ஆனால் பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெற்றோரின் பொருளாதாரப் பங்களிப்பு தேவைப் பட்ட போது. சந்தேகக்கண்களை பாடசாலையை நோக்கி திறக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அத்தகைய நிலையின் ஒரு தொடர்ச்சியாகவே பிறநாட்டு செயற்றிட்டங்களின் விலகுகையின் பின்னரும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம் ஒருபலமான சமூகப்பங்களிப்பு என்ற வகையில் பெற்றோர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு பாடசாலைக்குள் நடைபெறும் செயற்பாடுகள் கவர்ச்சிகரமானதாகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். இவைகள்சாத்தியமாவது பாடசாலை மானுடவளங்களின் தியாக உணர்வினாலேயே, இதற்கான முதற்கட்டச் செயற்பாடுகலீடுபடும் போது சவால்களை முறியடிக்கும் தன்மை ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டும். அதன் காரணமாக முறியடிக்கப்படும் தடை பாடசாலைக்குள் பெற்றோர்களின் அபரிதமான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதில் வெற்றியடைந்ததை சில உதாரண பாடசாலைகளின்று தெரிந்து கொள்ளளாம்.

வெறுமே வகுப்பறைக் கற்பித்தல் மாத்திரமே ஆசிரியர்க்குரியது என்ற பிடிவாதம் விலக வேண்டியது பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு அவசியம். ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வதில் முதல் வெற்றி பெற தேண்டும். அப்போதே கல்விச் செயற்பாடுகள் வெற்றிகரமாக நிகழும்.

எனவே ஆசிரியர்கள் தமது கல்வி முதிர்ச்சியை விட மனவெழுச்சி முதிர்ச்சியை முதன்மையாகக் கொள்ளாது சமூக இணைப்பு பாலத்தையும் பாடசாலைக்குள் ஆசிரியர்கள் ஒரு குடும்பமாக இயங்குவதையும் உறுதிப்படுத்தும். அதிபர்களுக்கெதிராக ஆசிரியர்களை தமது செயற்திறமையால் வெற்றி கொள்ளமுடியாமல் போர்க் கொடி தூக்கி கடமைப் பணியை மறந்து சமூகத்திற்கு இழப்பை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களும் ஆசிரியர்களை மட்டுமே அடக்கியாள வேண்டுமென எண்ணங் கொண்டு முகாமைத்துவ விடயங்களில் கோட்டை விடும் அதிபர்களையும் சந்திக்கும் அனுபவங்கள் இல்லாத ஒரு சூழ்நிலைதான் மலையகக் கல்வி வளர்ச்சியில் ஒரு ஆரம்பமாக கருதப்படமுடியும்.

சிறப்பாக இயங்கும் பாடசாலையின் முக்கிய குணாம்சமாக கொள்ளக்கூடியது அங்கு கிரமமாக மேற்பார்வை காணப்படுவதாகும். இன்னும் ஆசிரியர்கள் தாம் மேற்பார்வை செய்யப்படுதலை விரும்பாதவர்களாக இருப்பது தெரிய வருகின்றது ஆசிரியரின் தர விருத்திக்கு மேற்பார்வை இன்றியமையாதது.

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுமாணங்கள் ஆசிரிய ஆலோசகர்களூடாக இப்பணியை செவ்வனே நிறைவேற்றுகின்றன. அது மட்டுமல்லாமல் கல்வியமைச்சு, மாகாணக் கல்வித்திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், வலயக்கல்விப் பணிமனை கோட்டக்கல்விப் பணிமனை என்பனவும் தமது முக்கிய கருமமாக பாடசாலை வகுப்பறைக்கற்பித்தல் மேற்பார்வையைக் கொண்டுள்ளன. இத்தனை அமைப்புகள் இருந்தாலும் எல்லாப் பாடசாலைகளும் சரியாக மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவது நிச்சயமாகவில்லை. எனவே பாடசாலையானது தனக்குள் ஒரு மேற்பார்வை முறையை கொண்டிருக்க வேண்டும். இதற்கு அதிபர்களும் அனுபவமுள்ள ஆசியர்களும் பங்களிக்க வேண்டும். ஆசிரியர்கள் தாம் மேற்பார்வை செய்யப்படுவது அவசியமானது என்பதை உணரச் செய்ய வேண்டியது ஆரோக்கிய பாடசாலையின் கடமையாகும். இதனை இலகுவாக நடைமுறைப்படுத்துவதற்கு பல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். போதிய நிபுணத்துவ பேற்பார்வை வளங்களில்லாவிட்டால் சமாந்தர ஆசிரியர்கள் சிநேகித முறையில் ஒருவரையொருவர் கற்பித்தல் பணியின் போது அவதானித்து குறைநிறைகளைக் களந்துரையாடிக் கொள்ளும் வழமை பேணப் பட வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை பெற்றுக் கொண்டவராக மாற்றப்படுதல் அவசியம்.

இலங்கையின் ஏனைய வசதிமிக்க பாடசாலைகளின் தரத்தை அடைவதற்கு பெருந்தோட்டப் பாடசாலைகள் துரிதமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். கல்விச் செயன்முறையின் அடிப்படை

அலகு வகுப்பறையாக இருப்பதால், ஆசிரியர்களே ஒரு சமூகத்தின் கல்வி அடைவை த்தீர்மானிக்கும் அடிப்படை வளமாகக் கருதப்படுகின்றார்கள். எனவே இருக்கின்ற வசதிகளையும் தன்னால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வசதிகளையும் உச்சமாகப்பயன்படுத்தி காரியமாற்றல் பெரிதும் வேண்டப்படுகின்றது. இதனை இலகுவாக அடைய பாடசாலை ஆசிரியர்களிடையே முரண்பாடுகளில்லாத சாதக மனப்பான்மை தோற்றுவிக்கப்பட வேண்டும். கல்வி வளர்ச்சியானது ஆசிரியர்களின் மனப்பாங்குகளிலேயே தங்கியுள்ளது என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.

★

# புதிய காவியம்

உயரத்தில் போவது
என் கால்கள் மட்டுமல்ல
ஊன மடையாத
உள்ளமும் தான் . . .

படியேறும்
ஒவ்வொரு கணமும்
கொடும் பள்ளமும்
என் கண் முன்னே
காட்சி தந்த வண்ணமே
இருக்கிறது

தலையை இழக்கும்
ஒவ்வொரு தேயிலையும்
நிரப்புவது
கூடையை மட்டுமல்ல
என் குஞ்சுகளின்
வயிறுகளையும் தான்

தன் செடியை
பிரிந்த பின் தான்
கொழுந்து
நமக்கு பயனாகின்றது
நாமோ
நம் சுகங்களை
இழந்து தான்
தேசத்துடன் பயனாகின்றோம்.

உருகிப் போகும்
நம் உறவுகளுக்காக
படைக்கப் போவது
வெறும்
கண்ணீரையல்ல
புதிய காவியத்தை
இக் காவியமே
கலங்கரையாய்
வழி காட்டட்டும்
வரும் சந்ததிக்கு!

❋
❋❋

கோ. பத்மநாதன்
விடுகையாண்டு
94 / 95.

## With Best Compliments From

*The*
*House of*
*Fine Gold*
*Jewellery*

# REHA JEWELLERS

**No. 272, Main Street,**
**RATNAPURA.**

ரேகா ஜுவலர்ஸ்
272, பிரதான வீதி,
இரத்தினபுரி

*Mobital 071-28812*

රේඛා ජුවලර්ස්
272, සෙළින් වීදිය
රත්නපුර.



"கலை அருவி" அருவி போல் தொடர்ந்து வெளிவர எமது வாழ்த்துக்கள்

# நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுந்தீவு

கூட்டுறவால் எமது மக்களுக்கான சேவைகள்

நுகர்ச்சிப் பொருட்கள், எரிபொருள், இரும்புப் பொருட்கள், சமையற்கட்டு- உபகரணங்கள், மருந்துவகை, கிராமிய வங்கிச்சேவை, உள்ளூர் உற்பத்தி பொருட்கள் கொள்வனவு விற்பனவு, கடல் தரை போக்குவரத்துச் சேவை புகைப்பட பிரதியாக்கல் ஒலிப்பெருக்கிச் சேவை மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தகாரரும் அஞ்சல் முத்திரை விற்பனையாளரும்.

கூட்டுறவே மேன்மை

**With Best Compliments From**

# *Savenath Nagadurai*

**NO. 31/5 SRIPATHA MAHAWATHA,**
**1'ST LANE**
**RATNAPURA.**

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

## ***Suiss Jewellery Works***

**1[illegible]0 1/1 Main Street,**
**RATNAPURA.**

**With Best Compliments From.**

## SJ

Swaranamali
Jewellery

*Makers of Genuine 22ct Gold Jewellery*

ස්වර්ණමාලි ජුවලරි
96, රාජපක්ෂ ගොඩනැගිල්ල
(පළමු මහල)
කෙලින් වීදිය.
රත්නපුර

*96. Rajapaksa Bldg*
*Fist Floor] Main Street.*
*RATNAPURA.*

With Best Compliments From



# MR.S. SIVAKUMAR

*No: 945 1/1, Aluthmawathe Road,*

*MATTAKKULIYA*

COLOMBO 15.



With Best Compliments From

# MANO TAILORS

NO. 75, ( Up Stair )
Dharmawijaya Mawatha,
BANDARAWELA.

*BEST WISHES FROM*

## *Gayathri Music Corner*

*All Kinds of Tamil, Sinhala, Hindi and English Song's Original Stereo Recording From Compact Disc*

**Gayathri Music Corner**

No. 135, Main Street,
BANDARAWELA.

நல்வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான சகல ஹிந்தி, தமிழ், சிங்கள, ஆங்கில, விடியோ நாடாக்களை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

## FRANK VIDEO VISION

**No 491/1 Main Street.**
**Bandarawela.**

# தமிழ்மொழி மூல கல்வி வளர்ச்சியில் மொனராகலைப் பிரதேசம்

ஊவா மாகாணத்தில் மொனராகலை நகரை அண்மித்த பிரதேசத்தின் பௌத்த சூழல் காரணமாகவும், இயற்கை வளத்தின் இசைவினாலும் வெள்ளைக்காரர்களினால் இந்தியாவின் மில்லூர் என்ற கிராமத்திலிருந்து கொணரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் மொனராகலை குமாரதொலை, அலியாவத்தை, முப்பனைவெளி, கும்புக்கன், நக்கலை போன்ற தோட்டப் பிரிவுகளில் குடியமர்த்தப்பட்டு இறப்பர் கோப்பி, கொக்கோ, தேயிலை என்னும் பெருந்தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்து இலாபமீட்டியுள்ளனர். இக்கால கட்டத்தில் தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டப் பயிர்களை பாழாக்கி விடுவார்கள் என்ற குறிக்கோளை கருத்தில் கொண்டு பிள்ளை பராபரிப்பு நிலையத்தை உருவாக்கி அதில் பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வந்ததோடு அதுவே பின் கல்வி நிலையங்களாக பரிணமித்தனை அறிய முடிகின்றது.

1935ம் ஆண்டிலிருந்து 1940 வரையான காலப்பகுதியில் தோட்டப் பாடசாலைகள் இருந்ததற்கு இன்று காணப்படும் பாடசாலை இடிபாடுகள் சான்றாக அமைகின்றது. இக்காலத்தில் தோட்ட நிர்வாகத்தின் அனுசரணையுடன் ஆரம்பக் கல்வி மாத்திரம் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. 1960ம் ஆண்டிலிருந்து 1970ம்ஆண்டு காலப்பகுதியில் தோட்ட நிர்வாக அமைப்புகள் சீர்குலைந்து தனியார்மயமாக்கப்பட்டது. இதன் விளைவாக மக்களின் நலன்புரிச் சேவைகளும் கல்வியும் இடைநிறுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட தோட்டங்களில் நக்கலை, அலியாவத்தை, மொனராகலை, குமாரதொலை போன்ற பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் நிர்க்கதியாக்கப்பட்டனர். பின் 1972ல் தோட்ட தலைவர்களினதும் முற்போக்குச் சிந்தனையாளர்களினதும் விடா முயற்சியினால் மூடப்பட்ட தோட்டப் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. நக்கல தோட்டப் பாடசாலை நிரந்தரமாகவே மூடப்பட்டு அம் மாணவர்கள் முப்பனைவெளி தோட்டப் பாடசாலையுடன் இணைந்து கொண்டனர். இக் காலத்தில் 350 மாணவர்கள் 5ம் வகுப்பு வரைக்கும் தமிழ், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்று வந்துள்ளனர். ஆசிரியர்களின் ஊதியத்தையும் கல்வி வழங்கும் பொறுப்பையும் தோட்ட நிருவாகமே ஏற்றிருந்தது. தோட்டப்புற தமிழ் மாணவர்களைத் தவிர ஏனைய தமிழர்களின் பிள்ளைகளுக்கு இப்பாடசாலைகளில் கல்விபெற வாய்ப்பு வழங்கப்படவில்லை.

1960ல் திரு. ம. க. நாதன் என்பவர் மொனராகலைப் பிரதேச தமிழ் மாணவர்களை ஒன்றிணைந்து முத்தமிழ் கலாமன்றத்தை நிறுவி அதன் மூலம் கல்வி கலாசார பண்பாட்டு அம்சங்களை வளர்த்து வந்துள்ளனர். இன்னும் பாடசாலை வசதி குறைந்த தோட்டங்களுக்கு திரு. ம. க. நாதன் அவர்கள் சென்று மாலை நேர வகுப்புகளை நடாத்தி வந்துள்ளனர். ஒய்வைத் தொடர்ந்து திரு. செ. பாலசுப்பிரமணியம் அவர்கள் முப்பனைவெளி தோட்டப்பாடசாலையை 90 மாணவர்களுடன் பொறுப்பேற்று அதற்கு விபுலானந்தா தமிழ் வித்தியாலயம் என்ற பெயரைச் சூட்டி இன்று வரையும் வழி நடாத்தி வருகின்றார்.

1980ம் காலங்களில் இயங்கி வந்த பாடசாலைகளான மொனராகலைப் பாடசாலை சரஸ்வதி தமிழ் வித்தியாலயமாக அதிபர் திரு. சதாசிவத்தாலும் குமாரதொலை பாடசாலை, அதிபர் திருமதி. மார்க்ரெட் குருசாமி அவர்களால் ஸ்ரீ கௌரி தமிழ் வித்தியாலயம் என்றும் கும்புக்கன் பாடசாலை திருமதி கா. இராஜேஸ்வரி அவர்களால் கும்புக்கன் தமிழ் வித்தியாலயம் என்றும் இப் பாடசாலைகளுக்கு பெயர் சூட்டப்பட்டது.

1980ல் பதுளையில் இயங்கி வந்த தொழிலாளர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் Fr Guyde Fongllant அவர்களால் மேற்குறிப்பிட்ட ஐந்து பாடசாலைகளுக்கும் கட்டிட திருத்தங்கள், தளபாடங்கள், மாணவர்களுக்கு நூல்கள், தொண்டர் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆக்க பூர்வமான ஆலோசனைகள் போன்றவற்றை வழங்கி மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இக் கழகத்தின் மூலமாக மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியதோடு மக்களையும் கல்விப் பணியில் ஈடுபடச் செய்துள்ளனர்.

1980 இல் ஐந்து பாடசாலைகளிலும் 800 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் இருந்துள்ளனர். பாடத்திட்டத்திற்கு அமைய பாடங்கள் நடைபெற்று வந்துள்ளது. அத்தோடு இப்பிரதேசத்தில் முதல் முறையாக க யோகேஸ்வரன் என்ற மாணவன் புலமைப் பரிசில் பரீட்சையிலும் தோற்றியுள்ளது கல்வியின் வளர்ச்சி நிலையை, எடுத்துக் காட்டுகின்றது.

1987இன் பின் மொனராகலை மாவட்டம் கல்வி புதிய பாதையை நாடிச் செல்ல ஆரம்பித்தது. அதாவது ஏழை, பணக்காரன் பிச்சைக்காரன் கௌரவம் கூடியவன், குறைந்தவன் என்ற பாகுபாடு அற்ற நிலையில் யாவரும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே செல்வமான கல்விச் செல்வத்தை தோட்டப்புற மக்களுக்கு அளிக்க ''நொராட்'' முன்வந்தது. இத்தாபனம் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தோட்ட மக்களின் மேம்பாட்டிற்கும் கல்விக்கும் பணிபுரிந்து வந்துள்ளது.

இதன் முதல்கட்ட நடவடிக்கையாக 1987ம் ஆண்டு முப்பனைவெளி தோட்ட விபுலானந்தா தமிழ் வித்தியாலயமும் கும்புக்கன் தோட்ட கும்புக்கன் தமிழ் வித்தியாலயமும் பண்டாரவளை கல்விப் பணிமனையின் தமிழ் கல்விக்குப் பொறுப்பதிகாரியாக இருந்த S. H. L. அலியார் அவர்களின் தலைமையில் அரசாங்கம் பொறுப்பேற்கச் செய்தது பின் 1989இல் மொனராகலை சரஸ்வதி தமிழ் வித்தியாலயமும் 1990ல் குமார தொலை ஸ்ரீ கௌரி தமிழ் வித்தியாலயமும் அலியாவத்தை தமிழ் வித்தியாலயமும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன.

''நொராட்'' நாட்டின் வதிவிடப் பிரதிநிதியான திருவாளர் ஸ்கோரா என்பவரால் மேற்குறிப்பிட்ட ஐந்து பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அது ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் (I R D. P) கீழ் பாடசாலைகளை சென்றடைந்தது. இவர்களால் பாடசாலைக் கட்டிடங்கள், அதிபர் விடுதிகள், தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், நூலகங்களுக்கான நூல்கள், குடிநீர் வசதிகள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், பாடசாலை தோட்டத்திற்கான உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் போன்ற கல்வி மேம்பாட்டிற்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

1989இல் மொனராகலை தோட்டப்புற பாடசாலைகளுக்கு சுவிடன் சர்வதேசிய அபிவிருத்தி முகவர் நிலையம் (சீடா) கல்விக்கு உதவி வழங்க முன் வந்தது. இதன் பயனாக ஆசிரியர்களுக்கு வதிவிடப்பயிற்சிகளும், அதிபர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சிகளும் மாணவர்களுக்கு கல்வியில் விசேட பயிற்சிகளும் பரீட்சைகளும் மேலதிக துணை நூல்களையும் வழங்கி கல்வியை மேம்படுத்தி வந்துள்ளது. நொராட் சீடா தாபனங்களின் பங்கெடுப்பே இன்று மொனராகலை தோட்டப்புற மக்கள் கல்வியில் ஓரளவேனும் வளர்ச்சியுற்று காணப்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

1990இன் பின் விபுலானந்தா தமிழ் வித்தியாலயம் க. பொ. த. சாதாரண தரத்திற்கும் ஏனைய நான்கு பாடசாலைகளும் கனிஷ்ட தரத்திற்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளது 1991ல் மொனராகலை கல்விப் பணிமனைக்கு தமிழ்க் கல்விக்கு பொறுப்பதிகாரியாக திரு. V நடன சபாபதி அவர்களை நியமித்து அவரின் மூலமாக சகல பாடசாலைகளுக்கும் முறையான கல்வியை வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்துள்ளது. 1992இல் மொனராகலை பிரதேசத்தில் நடைபெற்ற ''கிராம எழுச்சி'' கண்காட்சி வைபவ வேலைத்திட்டத்தின்போது அரசு இப்பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் நாட்டத்தைக் காட்டி உதவிகளையும் வழங்கி வந்துள்ளது.

1995இல் ஐந்து பாடசாலைகளில் ஏறக்குறைய 1300 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆனால் 20 தமிழ் ஆசிரியர்களே சேவையில் உள்ளனர். ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் சகல பாடசாலைகளிலும் தொண்டர் ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர். தமது பிள்ளைகளின் கல்வியைக் கரைசேர்க்க துடிக்கும் பெற்றோர்கள் தங்களின் குறைந்த ஊதியத்தில் சிறுதொகையை தொண்டர் ஆசிரியர்களுக்கு கொடுத்து உதவி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்தோடு பாடசாலைகளுடன் தொடர்புடைய சகலவேலைகளும் மொனராகலை வாழ் பெற்றோர்களின் பங்கு மிகுந்தே காணப்படுகிறது.

பாடசாலைக்கு முறையான பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் உரியபாடங்களுக்கான தனியான ஆசிரியர்களும் ஆய்வு கூட வசதிகளும், நூலக வசதிகளும் இல்லாது இருப்பதனால் மாணவர்களின் கல்விநிலை மிகவும் பின் தங்கியே காணப்படுகிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற க. பொ. த. சா/த, பரீட்சைகளிலும் தவணைப் பரீட்சைகளிலும் மாணவர்கள் ஆகக்குறைந்த சித்தியினையே பெறுகின்ற நிலைஏற்பட்டுள்ளது

இந்நிலைகளை அவதானித்தபோதுமேற்போந்த பாடசாலைகளில் குறுகிய கால இடைவெளியில் கூடுதலான மாணவர்கள் இடையில் விலகி தனியார் நிறுவனங்களிலும் தோட்டங்களிலும் சுயதொழில்களிலும் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மேற் கூறிய வசதியீனங்களிலும் மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்ட ஆற்றலானது இப்படசாலைகளின் ஆசிரியர்களைச் சார்ந்ததாக அமையும் இங்கு கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் இலங்கையின் சகல பாகங்களிலும் அரசாங்க உத்தியோகத்தவர்களாகவும் அதிகாரிகளாகவும், தோட்ட உத்தியோகத்தர்களாகவும் கடமை புரிவது குறிப்பிடத்தக்கவையாகும். இன்றைய மாணவர்கள் கோட்ட மட்ட மாவட்ட, மாகாண மட்ட தமிழ்த்தின போட்டி நடைபெறுகின்ற போட்டிகளிலும் பங்கு பற்றி பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

இன்று மேற்கூறப்பட்ட தமிழ்மொழி பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதால் மாணவர்கள் மொழிப் பிரயோகத்தில் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையினை மாற்றி தமிழ் மொழி மூல ஆசிரியர்களையும் கல்வி மேம்பாட்டிற்கான மேலதிக வசதிகளையும் வேண்டி மடிப்பிடித்து நிற்கின்றன, மௌனராகவே தமிழ் மொழிப் பாடசாலைகள்.

கதிர்வேல் யோகேஸ்வரன்
இந்துசமய பிரிவு
( விடுகையாண்டு )

## விஞ்ஞான யுகம் மிஞ்சுமா?

சூரிய ஒளியையே
தொட்டு துவக்கும்
விஞ்ஞானம்
அறிவியல் அனைத்திலும்
அடங்கும்
விண்வெளியில்
கால் பதிக்கும்
நம் சமூகம்
சாக்கடையில்
மூழ்கும்.

★ ★ ★

பிறமொழி விஞ்ஞான
தேரில்
வீதிவலம் போகும் போது
நம் மொழி
சக்கரத்தில்
புதையவோ?

★ ★ ★

முத்தமிழ்
தித்திக்கும் - அது
உனக்கும் தெரியும்
எனக்கும் தெரியும்?
உலகுக்குத் தெரியுமா?
தமிழ் தாய்
தளர்ந்து போனால்
உடல் நலிந்தும்
போனால்?

★ ★ ★

தடமேற்றி
தமிழை வான்
ஊர்தியில் ஏற்றி
உலக விஞ்ஞானத்தில்
மிஞ்ச வை
தமிழ் தாய் தலையில்
தமிழ் மகன் நீ
அறிவியல் கிரீடம்
சூட்டு
தமிழை உலகத்தில்
உயர்த்திக் காட்டு

★ ★ ★

வே. இரத்தினவேல்
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு.

# வேண்டாம் ஓர் உள்ளம்

ஆழமான நட்புக்கு
நாங்கள் அருகதையில்லை
ஆத்மார்த்த நட்புக்கும்
நாங்கள் அருகதையில்லை - காரணம்

எங்கள் உத்தியோகம்
அடிக்கடி இடமாறுதலாகும் உத்தியோகம்
பிரிந்திருந்தும் நட்பை வளர்க்க
நாங்கள் பிசிராந்தையாரில்லை
மறந்து விட்டு மகிழ்ந்திருக்க
மனம் இடம் கொடுக்கவில்லை

எத்தனை பேரோடுதான்
பழகுவது?
எத்தனை முறை அவர்களைப்
பிரிவது?
கண்ணீர் தான் எங்கள் அன்பை
வெளிப்படுத்தும் சாதனம்
மனம் விட்டு அழுதிட நாங்கள்
குழந்தைகளுமில்லை

இனியெங்கிலும் யாரோடும் நெருங்கிப்
பழகாமல்
தனித்திருக்க முயற்சி செய்வோம்
நுனிப் புல் மேய்வது போல் - உள்ளம்
ஒட்டாது பழகுவோம்
பழகி விட்டுப் பிரியும் துயரை விட
பழகாமல் பிரிந்தால் துயரமில்லை
அல்லவா?

எங்கள் உத்தியோகம்
அடிக்கடி இடமாறுதலாகும் -
உத்தியோகம்

வேலையில்லாக் கொடுமையை விட
இக் கொடுமை மிகக் கடுமை
வேண்டாம் இந்த உத்தியோகம் - அல்லது
வேண்டாம் எமக்கோர் உள்ளம்

திருமதி. யோகராணி விநாயகமூர்த்தி
இந்து சமயப்பிரிவு
விடுகையாண்டு

# உழைப்பு

கொட்டுகின்ற மழையினிலும்
கொழுத்துகின்ற வெய்யிலிலும்
வாட்டம் எதுவுமின்றி
சேற்று வயல்களிலும்
நகரத் தெருக்களிலும்
வானை முட்டும் மலைகளின்
உச்சியிலும்
அண்டம் அதிர ஒலியெழுப்பும்
எந்திர அலைகளின் நடுவினிலும்
உதிரமெலாம் கரைந்து நீராக
உழைக்கின்றார் தொழிலாளர்
என்றாலும்
அவர் வாழ்வில்
உண்பதற்கு உணவில்லை
ஊன் உடம்பை மறைப்பதற்கோ
உடையில்லை
இருப்பதற்கோ இல்லமில்லை
அவர்கள் உழைப்பை உறிஞ்சுபவர்
உல்லாசமாக வாழ்கின்றார் உலகினில்
இந் நிலையை மாற்றுதற்கே
உழைப்புக்கள் ஒன்றிணையும்
ஓர் நாளைக் கண்டிடுவோம்.

★

இரா. தர்மரெட்ணம்
இந்துசமயப் பிரிவு
( விடுகையாண்டு )

# பிள்ளைகளின் நினைவாற்றலை வளர்ப்பதில் பெற்றோர், ஆசிரியர்களின் பங்களிப்பு:-

பரீட்சை எழுதி சித்தியெய்துவதற்கு மட்டும் அன்றி, வாழ்க்கையில் பலவிதத்திலும் முன்னேற்றம் அடைந்திட ஞாபகம் வைத்துக் கொள்ளல் மிகவும் பயனுடையதாக விளங்குகின்றது எனவே கற்றல் சிறந்திட நினைவாற்றல் இன்றியமையாததாகும். இன்று எம்குழந்தைகள் மறதியுடன் வளர்வதற்கு முக்கிய காரணம் நினைவாற்றல் வளர்த்தலுக்கான பயிற்சி இன்மையே. வளர்ந்து வருகின்ற நவீன நாகரீகம் இவர்களை மதிமயங்கச் செய்கின்றது.

"தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

எனக் கூறும் வள்ளுவரின் குறளை நோக்கின், இன்றைய எமது வாழ்க்கையில் இக்குறளின் உண்மையை நாம் உணர்கின்றோம். எமது பெற்றோர் எம்மை அவர்களை விடவும் மேலான அறிவு உடையவர்களாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும் உருவாக்கி வைத்ததனாலே இன்று நாம் உயர் நிலையில் வாழ்கின்றோம் ஆகவே ஒவ்வொரு பெற்றோர்களும் தமது குழந்தைகளை அறிவு, ஆற்றல், ஒழுக்கம் என்பவற்றில் தம்மைவிட சிறந்து விளங்க வைப்பது தலையாய கடமையாகும். இதற்கு வழிகாட்டியாக இருந்து செப்பனிடுவது ஆசிரியர் களின் கடமையாகும்.

### பிள்ளைகளின் நினைவாற்றலை வளர்ப்பதில் பெற்றோரின் பங்களிப்பு:

இறையன்பையும், ஒழுக்கத்தையும், மன ஒருமைப்பாட்டையும் வளர்த்தல் வேண்டும் நாம் எம் மதத்தினராயிருந்தாலும் இறைவனின் தோத்திரப் பாடல்களை பாடச்செய்தல், சிறு வயதுமுதல் மனதை ஒருநிலைப் படுத்த பயிற்சி அளிப்பதாகும். இத்தகைய பயிற்சியின் மூலம் பள்ளிப் படிப்பினை நுணுக்கமான கருத்துக்களை மனதிலே தேக்கி வைத்துக் கொள்ள உதவும். பக்கத்து வீட்டுக்காரன் தனது பிள்ளையை இரண்டு வயதிலே (2) ''மொன்டிசூரி'' அனுப்பி விட்டான், அதனால் நானும் எனது பிள்ளையை அனுப்ப வேண்டும் என பொறாமைக் கொள்வதில் பயனில்லை. நினைவாற்றலை வளர்ப்பதற்கு இன்னுமொரு இலகுவான வழி பிள்ளைகளை கடைகளுக்கு பொருட்கள் வாங்க அனுப்புதல். பொருட்களை பட்டியல் படுத்திச் சொல்லாமல் நினைவில் நிறுத்தி சென்று அவற்றின் விலை தொகை என்பவற்றை மனதிலே சரி பார்த்து வாங்கி வர பழகுதல் வேண்டும். மனதிலே கணக்கு பார்க்க பயிற்சி கொடுத்தால் கணிதப்பாடத்திலே விரல் விட்டு எண்ணிக் கொண்டிராமல் விரைவில் விடைகாணுவான்.

கணிதப் பயிற்சி நினைவாற்றல் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. கணிதத் துறையில் சிறந்து விளங்கும் பிள்ளை ஒருவன் ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்குவதை நாம் அனுபவ பூர்வமாக அறியலாம் காலை முதல் இரவு வரை தாம் என்னென்ன செய்தார்கள் என நாட் குறிப்பில் குறிக்கும் பழக்கத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்தல். அறநூல் பாடல்களை மனனம் செய்யும் பழக்கத்தை வளர்த்தல், வாழ்வியல், தத்துவத்தை உணர்த்தும் திருக்குறளினை மனனம் செய்தல் போன்ற பழக்கங்களை தம் பிள்ளைகளிடம் பெற்றோர் ஏற்படுத்துவார்களானால் அப்பிள்ளை நினைவாற்றலில் சிறந்தவனாக திகழ்வான்.

### பிள்ளைகளின் நினைவாற்றலை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு

ஆசிரியர்களின் பாடத்திட்டத்தில் உள்ள படிதான் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தாலும் நினைவாற்றலை வளர்ப்பதற்கும் முக்கியத்துவமளிக்க வேண்டும். எனவே உலகநீதி, ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன், நன்னெறி, திருக்குறள், முதலியவற்றை மாணவரின் வயதுக்கேற்ற முறையில் மனனம் செய்யப் வலியுறுத்த வேண்டும். மேலும் இவற்றை வகுப்புரீதியாக ஒரு போட்டி நிகழ்ச்சியாகவோ கலா மன்றங்களின் போட்டி நிகழ்ச்சியாகவோ நடத்தியும் மாணவரை ஊக்குவிக்கலாம். இதன் மூலம் மாணவர் தமது மூளையில் அறக் கருத்துக்களை சிந்திக்க சந்தர்ப்பம் தரப்படுதலினால் ஒழுக்க சீலர்களாகவும் வாழ்வர்.

மாணவர்களை இயந்திரமாக இயக்குவிக்காமல் நகைச்சுவையுடன் பாடத்தைக் கற்பிக்கும்போது விரும்பி கற்பர். காட்சி நிலையில் கற்றலை நிகழ்த்தும்போது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க முயலுதல் மிகவும் பாரதூரமான

விளைவை ஏற்படுத்தி விடும். பிள்ளையின் உள முதிர்வு தன்மைக்கேற்பவே கிரகித்தல் தன்மை அமையும். பிஞ்சு மூளையில் பெரிய கருத்துக்களை திணித்தால் தொடக்கத்தில் வெற்றியை அளித்து, எதிர்காலத்தில் உளவளர்ச்சி பாதிப்படைந்து தகுதியான கல்வி அறிவை பெற இயலாமல் சென்றுவிடும். கல்வியை திணிக்காது மூளை ஏற்றுக் கொள்ளும். திறனுக்கு ஏற்ப கல்வி புகட்டுதல் நன்று. இதனால் கல்வியில் வெறுப்படைய மாட்டார்கள்.

உறவு முறைகளையும் உறவினர்களின் பெயர்களையும் கூறுவதற்கு வழிகாட்டல் நினைவாற்றலை வளர்க்க சிறந்த முறையாகும். இவ்வாறு செயல்படுவதன் மூலம் பிள்ளைகளிடம் எதிர்காலத்திலும் பரஸ்பரம் நல்லுறவும் ஏற்பட வாய்ப்புண்டு. உறவினர்களின் ஊர், தொழில் நண்பர்களின் பெயர் அவர்களின் பெற்றோர்களின் பெயர், தொழில் போன்ற விடயங்களையும் நினைவில் நிறுத்த வேண்டும். இதன் மூலம் பல ஊர்களையும் பல்வேறு தொழில்களையும் அப்பிள்ளை அறிந்து கொள்கின்றது.

மேலும் தன்னிடம் தன் சகோதர, சகோதரிகளிடம் வீட்டிலுள்ள பொருட்களை யார் எப்போது வாங்கினார்கள் அல்லது வாங்கிக் கொடுத்தார்கள் என தொடர்புபடுத்தி நினைவு கூற பயிற்றுவித்தல், தனது பொருட்களில் பிள்ளை எப்போதும் கவனமாக இருக்கும், இதன் மூலம் பாடசாலையில் அல்லது பொது இடங்களில் களவு கொடுத்து தவிக்கும் நிலை பிள்ளைகளுக்கு ஏற்படாது.

பிள்ளைகளை காலையில் எழுப்பியதிலிருந்து என்ன செய்தார்கள் என படுக்கைக்கு செல்லும் முன் நினைவுபடுத்தி கூறும் பழக்கத்திற்கு பழகுதல் வேண்டும். இதன் மூலம் பிள்ளை என்ன தவறான காரியங்கள் செய்தான், என்ன நல்ல காரியங்கள் செய்தான் என்பதை பெற்றோரும் அறிந்து அவனது தவறுகளைச் சுட்டிக் காட்டியும் நல்லனவற்றுக்கு பாராட்டு கூறி ஊக்குவிக்கவும் முடியும். இவ்வகையான நினைவுபடுத்தல் முறையானது. பிள்ளையின் பள்ளி வாழ்க்கைக்கு மிகவும் பயனுடையதாக இருக்கின்றது. ஏனெனில் கல்வி சுற்றுலா, கருத்தரங்கு போன்றவற்றில் கலந்து கொண்டு அந்நடவடிக்கைகளை அறிக்கைப் படுத்த முன் பயிற்சியை பெறுவதாகவும் அமையலாம். கருத்து நிலையில் பதித்தல் மாணவர்களுக்கு இலகுவானதாக இருக்கும். மேலும் இதன் மூலம் நினைவாற்றலையும் சிந்தனா சக்தியையும் வளர்க்க முடியும். விளையாட்டில் ஈடுபடும் மாணவன் விடுதலை உணர்வுடன் பயிற்சி பெறுவது போன்று வகுப்பறையிலும் உள்ளம் விடுதலை உணர்வுடன் பயிற்சி பெறுவதற்கான சூழலை ஆசிரியர் வகுத்துக் கொடுத்தல்.

ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடங்களை நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி விளக்குதல் மிகவும் சிறந்த பயனை அளிக்கும். கற்பிக்கப்படும் பாடமதனை வாழ்க்கையுடன் தொடர்புபடும்போது மாணவர்கள் அதனை மீட்டுப் பார்ப்பார்கள். நினைவாற்றலை வளர்ப்பதற்கு இன்றியமையாத ஒரு நிகழ்வாக அமைகின்றது. கற்பிக்கும் பாடங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி கற்பித்தலும். நினைவாற்றலை மேலும் வளர்க்கும் தொடர்பு இல்லாமல் கற்பித்தல் நிகழும் பொழுது கற்ற விடயங்களை மறந்துவிடும் வாய்ப்புண்டு.

ஆசிரியர் தான் கற்பித்து சென்றவுடன் அவற்றை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கும் பழக்கத்தை மாணவரில் ஏற்படுத்தல் வேண்டும். முதல்நாள் நினைவாற்றலை அடுத்த நாள் பாடம் தொடங்கும் முன் பரிசீலித்தல் வேண்டும். அப்போது எந்நாளும் மீட்டுப் பார்க்கும் வழமையை மேற்கொள்வார்கள். பாடம் தொடர்பான சந்தேகங்களை உடன் பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடி விளக்கம் பெறுவதற்கும் மற்றவர் தன்னை வினாவும்போது விளக்கம் கூறுவதற்கும் மாணவர்களை பழக்குதல் வேண்டும்.

ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்
அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

என கற்றதை பகிர்ந்து கொண்டால் கல்வியில் முழுத் தன்மையை பெறலாம். என நன்னூல் பாடலும் விளக்கம் தருகின்றது. கற்பிப்பவற்றை முழுமையாகவும் மீளவலியுறுத்தியும் கற்பித்தால் முழுமையாக விளங்கி நினைவில் இருத்திக் கொள்வர். எனவே மாணவர்கள் கல்வி கற்பது தமக்குத்தான் என்பதை உணர்ந்து கற்றலில் நினைவாற்றலை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு கண்டிப்பும், கருணையும் உள்ளவர்களாக ஆசிரியர்கள் தொழிற்படுதல் வேண்டும்.

எனவே நினைவாற்றலை வளர்க்க பெரும் பங்கு ஆற்ற வேண்டியவர்களாக பெற்றோர், திகழும் வேளையில் எல்லாம் ஆசிரியரே என வேதமாக கொள்ளும் மாணவர் உள்ளங்களை நினைவாற்றலில் சிறந்து அறிஞர்களாக திகழச் செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

**திருமதி. மகேஸ்வரி கோவிந்தராஜா**
இந்து சமயப்பிரிவு
விடுகையாண்டு

WITH BEST COMPLIMENTS
FROM

RATNAM &
SONS

No 8/14, Main Street
TALAWAKELLE.

BEST COMPLIMENTS FROM

M. PONNAMBBALAM
& SONS

*Dealers in Jaffna Best Cigars
Provisions & Oilman Goods*

M. Ponnambbalam & Sons
No. 1, Block No 14
TALAWAKELLE.

With Best Compliments From

KUGAN STORES

38, NUWARA-ELIYA ROAD,
TALAWAKELLE.

*WITH BEST WISHES FROM*

K. P. Navaratnam A. C. A.

*[Accountant]*

## NAVARATNAM AND COMPANY

*ACCOUNTANTS & AUDITORS*

*TAX CONSULTANTS.*

**HEAD OFFICE**

**No 29, New Market Building.**

**TALAWAKELLE**

**T. P. 072-26395**

**BRANCH**

**No. 106, H0spital Road,**

**TRINCOMALEE.**

**T P. 026-22299**

WITH BEST COMPLIMENTS FROM

## Talawakelle Electricals

21/A, Nuwara Eliya Road,

TALAWAKELLE.

*WITH BEST COMPLIMENTS FROM*

## *Nithiyakalyanee Jewellery*

Makers of Genuine 22ct GOLD Jewellery

**No 12B, Main Street,**

**Talawakelle**

கலைக் கூடமாக விளங்கும் கலையருவியின் வளர்ச்சிக்கு எமதுவாழ்த்துக்கள்

தரமான

சைவ

உணவுகளுக்கு

நீங்கள்

நாடுங்கள்

## மகாலெட்சுமி

இல. 37 நுவரெலியா ரோட்

**தலவாக்கலை**

**MAHA ETCHUMY**

**No 37. Nuwara Fliya Road**

**TALAWAKELLE,**

BEST WISHES FROM

SHANTHI
TRADERS

No 29, Hemapala Munidasa
Mawatha,
WELIMADA.

☎ 057 — 5284

BEST WISHES FROM

CSI

*Your Partner in Next Generation*

Computer Systems
Institute

No: 03, 9th Street,
MASKELIYA.

With Best Compliments From

# ASSWI TEXTILE



**Wholesale & Retail Dealers in Textiles Specialist in Readymade Garments and Cut Pieces**

*118, Market, 118 / B First Cross Street*
*COLOMBO 11. SRI LANKA*

எமது நல்வாழ்த்துக்கள்

## வருமுன் காப்போம்

சகல விதமான மருந்துப் பொருட்களுக்கும் மற்றும் தேவையான வைத்திய ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்.

# INDRA MEDICALS

No. 46, Main Street,
BOGAWANTHALAWA.

Prop Dr. R Vengadasalam

Rgd No 7568.

BEST COMPLIMENTS FROM

# VANITHAA JEWELLERY

No. 67, Main Street
BOGAWANTHALAWA

நல்வாழ்த்துக்கள்



தரமான பிஸ்கட் வகைகளுக்கும்
கோவில் பூசைப் பொருட்களுக்கும்
இன்றே நாடவேண்டிய இடம்

# ரேணுகா ஸ்டோர்ஸ்

இல. 42, நுவரெலியா வீதி
தலவாக்கெல

# வகுப்பறையில் மாணவர்களை கட்டுபாட்டுடன் பேண சில வழி முறைகள்.

வகுப்பறையில் மாணவர்களை கவனமின்மை கவனச்சிதைவுகள் குழப்பங்கள் என்பன நடத்தைக் கோளாறுகளை பிரதிபலிக்கும். பிரச்சினைகளாகும் இவற்றை எதிர்நோக்கும் ஆசிரியர்கள் இவை மேலும் வளர்ந்து பரவும் முன்னர் தடுத்து நிறுத்த முயலவேண்டும். அவ்வாறு செய்யும் போது பாடம் நடத்தப்படக்கூடாது. அத்துடன் ஏனையப் பிள்ளைகளுக்கு அநாவசியமான இடையூறுகள் ஏற்படக்கூடாது.

வகுப்பறை நிர்வாகத்தில் வெற்றிப் பெற மிகவும் முக்கியமான அம்சம் ஆசிரியர் வகுப்பறையை தொடர்ச்சியாக கண்காணித்து மேற்பார்வை செய்வதாகும். ஆசிரியர் எல்லாமாணவர்களையும் தொடர்ச்சியாக கவனித்தல் வேண்டும். ஒரு விழிப்புணர்வுடன் ஆசிரியர் செயற்பட வேண்டும். சிறு பிரச்சினையேற்பட்டு பெரிதாகும் முன்னர் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களின் நடத்தைகளை அலட்சியம் செய்தல், நடத்தைகளைப் பாராட்டுதல் என்னும் வழிமுறைகள் ஒன்றினைத்து வகுப்பறையில் சிறந்த மாணவர் நடத்தையை ஏற்படுத்துகின்றனர். அவ்வாறே ஆசிரியர்கள் ஒரு பிரச்சினையை தீர்க்கும் முகமாக அதில் தீவிரமாக ஈடுபடும் போது அது தீவிரமாக முடியக்கூடும் எனவே தீரயோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும்

வகுப்பறையில் சில குறைபாடுடைய பிள்ளைகள் இருக்கலாம் அவ்வாறன பிள்ளைகளை இனங்கண்டு அம்மாணவர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப செயற்பாடுகளை வழங்க வேண்டும். மாணவர்களின் பிழையான நடத்தைகளை தவிர்த்துக்கொள்ள ஆசிரியர் பிழையை நோக்கிச் செல்வதும் வாய்மொழி சம்பந்தப்படாத இவ்வாறான அணுகுமுறை மாணவர்கள் தமதுப்பணியில் மீண்டும் கவனத்தை திருப்ப முடியும். மாணவர்களின் சிதைவு அடைந்த கவனத்தைப் பணியில் ஈடுபடச்செய்ய பயன்படுத்தக் கூடிய மற்றொரு வழிமுறை அவனிடம் ஒரு வினாவை கேட்பதாகும். வகுப்பறையில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வினாக்களைப் பயன்படுத்தலாம் என்பதை ஆசிரியர் மனதில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் பிள்ளைகளுக்கு வகுப்பறை விதிமுறைகள் எதிர்பார்க்கப்படும். நடத்தை என்பவற்றைச் சுட்டிக்காட்டுவது ஆகும். வகுப்பறை நிர்வாக உத்திகளைப் பொறுத்த வரையில் மற்றொரு விடயம் மாணவர்களுடன் இணைந்து சில ஏற்பாடுகளை செய்து கொள்ளும் வகையில் ஆசிரியர்களுக்கு மாணவர்களுடனான நேர்முகச் சந்திப்பு பயன்படும். ஒன்று அல்லது பல மாணவர்கள் பாரதூரமாக தவறாக நடக்கும் இடத்து ஆசிரியர்கள் அப்பிரச்சினைகள் பற்றி துருவி ஆராயும் முகமாக அவர்களுடன் நேர்முகச் சந்திப்பை ஏற்படுத்துவது பயன்தரும்.

இவ்விடத்து ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாணவர்களை மட்டுமே சந்திக்க வேண்டும். அத்துடன் பிரிச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் அமைதியடைச் சற்று அவகாசம் தரப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட பல மாணவர்களும் ஆசிரியர் சம்பவ நிகழ்வு அபிப்பிராயம் இரண்டையும் பிரித்தறிய முயல வேண்டும். நிகழ்வுப் பற்றி முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு உண்மையில் என்ன நடந்தது என்பதை சரியாகக் கண்டறிய வேண்டும். மாணவர்கள் தமது நடத்தையின் விளைவுகளை உணர்ந்து தம்மைப்பாதுகாக்கும். வகையில் விளக்கங்களை தர முற்படுவர். ஆசிரியர் இவற்றை இணங்கண்டு நேர்முக சந்திப்பின் ஊடாக இறுதிமுடிவினை மேற்கொண்டு தண்டனையை வழங்க

வேண்டும். அல்லது மேலிடத்துக்கு முறைபாடு செய்ய வேண்டும்.

அடுத்த மாணவர்களிடையே நல்லுறவாகும். இதில் பயமுறுத்தலுக்கு இடமில்லை மாணவன் தனது நடத்தை தவறானது என ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஆசிரியர் செயற்பட வேண்டும் மாணவன் ஒத்துக்கொண்டால் இருவரும் அந்நடத்தையை மதிப்பீடு செய்யும் வகையில் கலந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் மாணவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என்பது பற்றி மாணவனே எடுத்துக்கூற ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

வகுப்பறை சூழலில் ஏற்படும் பிணக்குகளைத்தீர்த்து வைக்க ஆசிரியர்கள் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் பற்றி சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர் இவற்றில் முதலாவது தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் ஒரு ஆசிரியர் கூடியளவிற்கு பொறுமையுள்ளவராயின் அவர் பிணக்கை முடிந்தளவு அலட்சியம் செய்ய முடியும். இவ்வகையான உபாயம் காலத்தைக் கடத்த உதவும். அத்துடன் இது ஆசிரியருக்குத் தொழில் ரீதியாகத் திருப்தியைத்தராது. பிணக்கும் தீர்க்கப்படமாட்டாது.

இரண்டாவதான உபாயம் நடவடிக்கையை தாமதப்படுத்துவது. அதாவது தீர்மானத்தை ஒத்திவைத்து நெருக்கடி நிலைமை உருவாவதைத் தவிர்ப்பது அத்துடன் பிணக்கிற்கு அடிப்படையான காரணத்தை விட்டு விட்டு சிறு சிறு விடயங்களை அணுகி நோக்கியும் தாமதத்தை ஏற்படுத்தலாம் எவ்வாறாயினும் இவ்வாறான வழிமுறைகள் பொதுவாக திருப்தி கரமானவையல்ல.

★

செல்வி. S. பத்மாவதி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

# உன்னை நீ நேசி

உன்னை நீ நேசி
உலகம் புரியும் உனக்கு
பிறரை புரிந்து கொள்வதே
உன்னை நீ புரிந்து கொள்வதற்கான வழி

மற்றவர்களின் துன்பங்களில்
இன்பங் காணாதே
நாளை உனக்கும் துன்பம் வரலாம்
என்பதை மறந்து விடாதே

தனிமையில் இருந்து எதையும்
சாதித்து விடலாம் என எண்ணாதே
உன் இதயத்தை புரிந்து கொள்ள
உனக்கு ஒருவராவது தேவை

உயர்வுகள் உனைச் சேரும் போது
பெருமை கொள்ளாதே
உத்தமன் ஒருவன் பின்னணியில்
உள்ளான்
என்பதை மறவாதே

இரா. அரவிந்தன்
விடுகையாண்டு.

# திரைப்படங்களும் சமுதாய மாற்றமும்.

இந்த நூற்றாண்டில் மக்களுக்கு கிடைத்ததும் மலிவானதுமான தொடர்பு சாதனங்களால் திரைப்படங்ளே என் றால் அது மிகையாகாது. மக்களை சிந்திக் கவும் தூண்டுகின்றது என்பதை பல தசாப் தங்களாக கண்கூடாக காணக்கூடியதாக இருக்கின்றது.

திரைப்படங்கள் மூலம் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை பார்க்காது அத னால் ஏற்படும் தீமைகளைப்பற்றியே நாம் கருத்துக்களை வெளியிடுகின்றோம் இருந் தப் போதிலும், இன்று திரைப்படங்கள் கிராமபுறங்கள் உட்பட நகர்புறங்களிலும் இன்னும் உலகளாவிய ரீதியில் பரந்து விடாமல் இல்லை இன்று மக்களின் வீட்டு க்குள்ளேயேயும் தொலைக்காட்சியின் மூலம் பரவிவிட்டிருக்கின்றது

காலத்துக்கு காலம் மாறிவரும் தொ ழிற்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மக்களுள் சிந் தனையையும், ஆற்றலையும் மேம் படுத் தக்கூடிய வகையில் இன்று திரைப்படங் கள் அமைகின்றது. குறிப்பாக சொல்லப் போனால், கல்வி, பொருளாதாரம். கலை, கலாச்சாரம். செய்தி பரிவர்த் தனை, மருத்துவம். சுகாதாரம், முதலிய பல்வேறு துறைகளிலும் பங்களிப்பு செய் கின்றது இன்னும் கூட திரைப்படம் பிள் ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் துணைபுரிகின்றது திரைப்படம் பிள்ளை களை கவர்ந்திழுக்கும் ஒரு சாதனமாகும். செவிப்புலன், கற்புலன், ஆகிய இரண் டையும் கவரக்கூடிய வகையில் அமைவ தோடு. இத்திறன்களின் மூலமாக மாண வர்களிடையே நல்ல விடயங்களை உரு வாக்கலாம். சமூகவுணர்வு. குடும்ப உண ர்வு, பாடசாலை கல்வியோடு சம்பந்த மான விடயங்களை மாணவர்களுக்கு அளிக்கின்றன. இன்று கல்விசார் திரைப் படங்களும் காணப்படுகின்றன எனினும் இளம் வயதினரை தீய வழியில் இட்டு செல்லக்கூடிய வகையில் பாலியியல், கொ லை, கொள்ளை, போன்ற விடயங்கள் வளர்ந்து வரும் சமூதாயத்தை பிழையான வழியில் இட்டுச்செல்லாமலும் இல்லை. அதேவேளை திரைப்படங்களில் இடம் பெறும் அன்பு பாசம், தியாகம், குடும்ப ஒற்றுமைகளில் இடம்பெறும் அன்பு, பாசம், தியாகம், குடும்ப ஒற்றுமை, தலைமைத்துவம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, இறைபக்தி, உண்மை, நேர்மை, சத்தியம். போன்ற நல்ல விடய ங்கள் ஆயிரக்கணக்கான மக்களின் இத யங்களை தொடவில்லையா? அதன் மூல ம் மேன்மையடையாமலும் இல்லை நிரா கரிப்பதும் நாம் கண்டுள்ள உண்மை பட த்தை பார்ப்பவர்கள் படத்தில் வரும் நல்லவர்களின் பக்கமே சேர்ந்து கொள் கிறார்கள் வில்லனின் பக்கம் சேர்வதி ல்லை தீயவர்களின் செயல்களை மனம் நிராகரிக்கின்றது இவ்வாறுதான் திரைப் படங்களும், திரைக்கதைகளும் மக்களை நல்லவழிப்படுத்துகின்றன. ஆனால் எல் லாவற்றுக்கும் ஒரு பொதுவிதியுண்டு, தீய வைகளையே தேடி அலைபவர்கள் தீமை களை உள்வாங்கிக்கொள்கிறார்கள் நல்ல விடயங்களை ஒழுக விட்டு சல்லடைகள் போல் சருகுகளை அதாவது தீயவைகளை சேகரிக்கின்றனர் எந்த ஒரு விடயத்திலும் நல்லதும். தீயதும் இருக்கத்தான் செய்யும் நல்லதை ஏற்பதும், தீயவையை தள்ளு வதும் அவரவரின் தனியியல்பு ஆகும்

அன்றுமுதல் இன்று வரை திரைப் படங்கள் மனித சமூதாயத்தோடு இரண் டற கலந்து விட்டது. ஆரம்பக் கால பட ங்களில் கதைகளும், பாடல்களும், பல தத் துவத்தையும் பக்தியுணர்வு கலந்ததா கவும் அமைந்திருப்பதோடு அவை இன் றும் கூட சாகாவரம் பெற்றுள்ளதாக அமைந்திருப்பதை நாம் காணக்கூடிய தாக இருக்கின்றது. சாதாரணமாக புத் தக வடிவில் இருந்த திருக்குறள், சிலப்பதி காரம், பகவத்கீதை, பாரதிபாடல்கள் போன்றன பாடல்கள்மூலம். இலகுவான வசன நடைகள் மூலம் பிற்காலத்தில் தோன்றிய கவிஞர்கள் மூலம் பாமர மக் களை சென்றடைய இத்திரைப்படங்களே

காரணமாக அமைகின்றது. கண்ணதாசன், பாரதிதாசன் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் வாலி வைரமுத்து போன்ற கவிஞர்களின் வரவால் சினிமா உலகில் புகுந்து சினிமா பாடல்களை கவிதைகளாக்கினர் இப்பாடல்கள் அனைத்தும் கூட தத்துவம் பொதிந்திருந்தது. மக்களை இவை ஈர்த்தது ஆத்மீக சிந்தனைகள் பல அவர்களது பாடல்களில் பரவிக்கிடப்பதை அறிய முடிகின்றது.

சங்ககாலப்பாடல்கள் பழைய இலக்கியப்பாடல்கள், பக்திப்பாடல்கள் சினிமா பாடல்களில் இடம் பெறலாயின இவ்வகையில் சாதாரண மக்களை எட்ட முடியாத இப்பாடல்களும் பாடலிலுள்ள கருத்துக்களும் இக்கவிஞர்களின் மூலம் மக்களின் மனதை சென்றடைந்தது. புராணப்படங்கள் இன்னும் கூட வரவேற்கப் படுகின்றது. இருப்பினும் தற்காலத்தில் சமூகப்படங்களே வெளிவருகின்றன. இளையவர்கள் புராணப்படங்களை வெறுத்தாலும் வளர்த்தவர்கள் இதனை விரும்புகின்றனர்.

திரைப்படங்கள் பற்றிய பொதுவான கருத்து அது வளர்ந்து வரும் சமூதாயத்தை கெடுக்கின்றது என்பதாகும். ஆனால் திரைப்படங்களிலுள்ள நல்ல விடயங்கள் நல்லவர்களையும். நல்ல இதயங்களையும் சென்றடைகின்றன தீயவைகள், தீயவர்களை சென்றடைகின்றன திரைப்படங்கள் அதற்கு காரணமாக முடியாதல்லவா? இந்த திரைப்படங்கள் மூலம் தம்மை திருத்திக்கொண்டோர், தவறுகளை உணர்ந்து திருந்தியோர், குடும்ப ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டோர். எத்தனைபேர் திரையுலகம் சேராக இருந்தபோதிலும், அதிலிருந்து உருவாகும் சில திரைப்படங்கள் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக மக்களுக்கும் சமூகத்திற்கும் பயன்படவே செய்கின்றது. திரைப்படங்கள் என்றதும் நாம் நினைப்பது பொழுதுபோக்குத்தானே என்ற தவறான எண்ணமாகும். ஆனால் உண்மையில் பொழுதுபோக்கு. மனிதனுக்கும், சமூதாயத்திற்கும் மிக மிக அவசியமானது என்று மனோதத்துவியளாளர்கள் கூறு-கின்றனர். ஆரம்பகாலத்தில் கூட மனிதனுக்கு ஓய்வு நேரம் அதிகம் கிடைத்தபடியால் தான் அவன் சிந்திக்க தொடங்கினான். அன்றைய சிந்தனையின் வளர்ச்சியே இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் நவநாகரீகத்திற்கும் அடித்தளமாக அமைகின்றது திரைப்படங்கள் இன்று இல்லாவிட்டால் இன்றைய சமூகம் எவ்வாறு இருக்கும் என்று ஒரு கணம் கற்பனை பண்ணினால். அது பல தசாப்தங்களுக்கு பிற்பட்டதாகவே இருக்கும் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

திரைப்படங்களில் வரும் கதைகள் பல்வேறுப்பட்டவையாக இருந்தபோதிலும். சமூகக்கதைகள் என்று வரும் போது அது யதார்த்தமாக இருக்க வேண்டும் என்று பலர் விமர்சிப்பதும் உண்டு. பல்வேறு கலைகளின் சங்கமமாகும் திரைப்படத்தில் கதை ஒரு முக்கிய இடமாகின்றது என்பது உண்மை. இருப்பினும் ஒரு கதையே திரைப்படமாகுவதும் இல்லை கதையைப் பொருத்தவரை நாம் எதிர்பார்க்க வேண்டியது அந்தக்கதை மூலம் சமுதாயத்திற்கு கொடுக்கும் செய்தி என்ன என்பதுதான். முக்கியமாகும். கதைகள் நம்பத்தகுந்தவையா? யதார்த்தமானவையா? கலையுணர்வு உடையனவையா? என்றெல்லாம் பார்ப்பதில்லை. கதைகள் கூறும் கருத்துக்களையே மனம் ஏற்றுக் கொள்கின்றது. கதாபாத்திரங்களின் நல்ல குணாதிசயங்களை மனம் ஏற்றுக்கொள்வதும் தீயவைகளை சமூதாய மதிப்பீடு என்பது வெவ்வேறு காலக்கட்டத்திற்கு மாறுப்படுவது இயல்பு ஒவ்வொரு தலைமுறையினரும் தமக்கு முன்னுள்ள தலைமுறையினரை மட்டம் தட்டி பேசுவது வழக்கம். எதுவாயினும் திரைப்படங்களின் நோக்கத்தையும், போக்கையும் ஆராய்ந்தால் உண்மைகளை விளங்கக் கூடியதாக இருக்கும்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கினால் திரைப்படங்கள் சமூதாயத்திற்கு தீமைகளை விட நன்மைகளையே அதிகம் செய்கின்றது என்பதையும் திரைப்படங்கள் இல்லாவிட்டால் சமூதாயம் பூரணத்துவம் பெறாது என்பதனையும் நாம் விளக்கிக்கொள்ளலாம்.

**S. சுந்தரகலா**

மனைப்பொருளியல் பிரிவு - விடுகையாண்டு

# இலங்கையில் மலையகத் தமிழர்களின் வரலாற்று பின்புலம்

இலங்கையின் வரலாற்றை நோக்கும் தென்னிந்திய படையெடுப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்து இலங்கையின் ஆட்சி வரலாற்றில் தமிழர்களது ஆட்சி நடைபெற்றதை வரலாற்று ரீதியாக காணக்கூடியதாக இருந்துள்ளது. தமிழ் மன்னர்களை சிங்கள மன்னர்களால் தோற்கடித்து மீண்டும் ஆட்சிப்பீடத்தை கைப்பபற்றினாலும் தமிழர்கள் நிரந்தரக்குடிகளாகவே இருந்து வந்துள்ளனர் இலங்கை ஐராப்பியர் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இந்தியத்தமிழர்கள் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வேலைக்கு அமர்த்துவதற்காக குடியேற்றப்பட்டனர். இவர்களது பிரச்சனைகளை சற்று கூர்ந்து கவனிப்போம்.

இலங்கையின் மலை நாட்டுப்பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களிலும் அதனைச் சார்ந்துள்ள நகர்ப்புறபிரதேசங்களிலும் வாழ்கின்ற இந்தியத்தமிழர்களை மலையகத் தமிழர்கள் என்று அழைக்கின்றோம் இதைத்தவிர மேல் தென் மாகாணங்களில் இறப்பர் தோட்டங்களிலும் வவுனியா, கிளிநொச்சி போன்ற விவசாய பிரதேசங்களிலும் மலையகத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் தாமாகவே தொழில் தேடிவந்தவர்களும் தோட்டங்களில் தொழில்புரிவதற்கும் அழைத்து வரப்பட்டவர்களும் அடங்குவர். இவர்களில் தோட்டத்தொழிலாளர்கள், வியாபாரிகள், துறைமுக புகையிரத ஊழியர்கள் மற்றும் இன்னோரன்ன தொழில் வாய்ப்புகளை இவர்கள் பெற்றிருந்தனர்.

மலையகத் தமிழர் என்ற பதம் மூன்று முக்கிய குழுவினரை இணைத்து அமைந்துள்ளது.

(1) பெருந்தோட்டங்களில் தொழில்பார்க்கும் தொழிலாளர்கள்.

(2) பெருந்தோட்ட நிர்வாக அலகோடும், அதனைச்சார்ந்த நகரங்களில் உத்தியோகம் பார்க்கும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள்

(3) வணிக முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய வம்சாவளியினர் இவர்களிடையே பல்வேறு சமுகவேறுபாடு இருந்தாலும் இந்திய வம்சாவளி என்ற தொடர்பின் காரணமாக மலையகத்தவர் என்ற எண்ணக்கருவளர்கிறது.-

இருந்த போதும் மலையகத்தொழிலாளரிடையே இப்பதம் மையப்படுத்தப்படுகின்றது

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரியத்திற்கும் தென்இலங்கையில் வாழுகின்ற இந்தியத்தமிழர் பண்பாட்டு பராம்பரியத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு அவர்களிடையே உள்ள பழக்க வழக்கங்கள் என்பவற்றிலும் நிறைய வேறுபாடு உண்டு இருந்த போதிலும் சில ஒற்றுமைகளும் உண்டு.

தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் வருகின்றபோதே தமது கலாச்சார பண்பாட்டு பாரம்பரியங்களையும் கொண்டு வந்து இங்கு தமது கலை கலாச்சாரங்களை வளர்க்கக் கூடிய வாழ்க்கை அமைப்பு முறை ஒன்றை உருவாக்கி வளர்த்தனர். இக் கலாச்சாரமாக இவர்களிடையே வளர்ந்து வரலாயிற்று.

பெருந்தோட்டப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாகவே இருந்தனர். இங்கு அம்மன் வழிபாடு, குலதெய்வ வழிபாடும் பெருந்தோட்ட நகரங்களை சார்ந்த பகுதிகளில் முருகன் வழிபாடும் இடம் பெறலாயிற்று. அக்காலத்தில் மத வழிபாட்டிற்கும் கலாச்சாரங்களை வளர்ப்பதற்கான சகல வசதிகளையும் தோட்ட நிர்வாகங்களே செய்து கொடுத்தது. இதற்குக்காரணம் தோட்ட நிர்வாகத்திற்கு இடைஞ்சல் இல்லாமையையும், இவற்றில் ஈடுபடுவதால் மக்கள் தோட்டங்களுக்கு அப்பால் உள்ள வெளித் தொடர்புகளை குறைத்துக் கொள்வர் என்பதே காரணமாகும்.

பெருந்தோட்டங்களின் நிர்வாக அமைப்பு முறைகளில் கங்காணிமார்முறை அக்காலத்தில் நிலவியது இவர்களின் உதவியோடு நிர்வாகம் மக்களோடு தொடர்புகளை வைத்திருந்தது அத்தோடு மக்களை சுரண்டுவதற்கு இவர்களேயே பயன்படுத்தியது இந்தியாவில் ஜமின்தார், பண்ணையார் போல் இவர்கள் மக்களால் மதிக்கப்பட்டனர். காலப்போக்கில் இவர்கள் தோட்டங்களின் சொந்தக்காரர்களுமாயினர்.

இந்திய கிராம அமைப்பை ஒத்த வாழ்க்கை முறையே இவர்களிடையே காணப்பட்டது. பல்வேறு தொழில்கள் தமது சாதி அமைப்பிற்கேற்பவே செய்து வந்தனர். முடிவெட்டுதல் துணி துவைத்தல், பறையடித்தல், துப்பரவு செய்தல் போன்றவையை செய்தனர்.

பிறப்புமுதல் இறப்பு வரை வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் சடங்குகள் சம்பிரதாயங்கள் பேணப்பட்டன இவை அனைத்தும் எழுதாக் கிழவியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குடும்பத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஒரே தோட்டத்தில் வேலை செய்தமையாலும் முழுநேரமும் ஓய்வின்றி வேலை செய்தமையாலும் தங்களது முன்னேற்றத்தைப்பற்றி நினைக்கவில்லை கிடைக்கின்ற சிறு ஓய்வு நேரங்களில் தமது கலை கலாச்சாரங்களில் ஈடுபட்டனர். இவர்கள் தம்மைப்பற்றியும் தமது எதிர் காலம் பற்றியும் சிந்திக்க மறந்தவர்களாகவும் சிந்திக்க வாய்ப்பற்றவர்களாகவுமே இருந்தனர். அத்தோடு எட்டடி காம்பராவிற்குள்ளே தமது வாழ்க்கையை முடித்துக் கொள்பவர்களாகவே இருந்தனர். நூற்றிஐம்பது ஆண்டுகள் இவ்வாறே இந்நாட்டில் வாழ்ந்துள்ளனர் இலங்கை அரசைப்பொறுத்து மலையகத் தமிழர்களின் பிரச்சனை மிகமுக்கிய பிரச்சனையாக உள்ளது.

இவர்களை இலங்கைப்பிரஜை என்று இணைத்துக் கொள்வது எப்படி?

சுதந்திரத்திற்கு முன்பு பாராளுமன்றத்தில் இந்தியத் தமிழர்கள் ஏழுபேர் நுழைந்த போது ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவே சுதந்திரத்திற்குப் பின் இவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கி அரசியல் அந்தஸ்திலிருந்து இவர்களை ஒதுக்கினர். இவர்களுக்கு பாதகமாகவே இந்திய பாக்கிஸ்தான் சட்டம் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம், சிறிமா இந்திரா காந்தி ஒப்பந்தம் ஆகியவை ஏற்படுத்தி இலங்கையிலிருந்து ஐந்தே கால் இலட்சம் மக்கள் நாடு கடத்தப்பட்டனர் ஏழுபேர் இந்தியா சென்றால் நான்குபேருக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று சட்டமும் இயற்றினர். இன்னும் இந்திய கடவுச்சீட்டு பெற்ற மக்கள் இந்தியா செல்லமுடியாத நிலையும் தொடர்ந்து இருக்கின்றது. 1989-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட வாக்குரிமை சட்டத்தின்பயனாக மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது ஆனால் என்பத்தைந்தாயிரம் மக்களின் பிரச்சனைகள் இன்றும் தீர்ந்தபாடில்லை.

இன்று மிகக்குறைந்த கூலிபெற்று அடிப்படை வசதிகள் அற்றநிலையில் வாழும் மக்கள் கூட்டம் இலங்கையில் இருக்கிறார்கள் என்றால் அது மலையகத் தமிழர்களையே சாரும், இன்று இவர்கள் தமது இனமொழி வரலாறு அரசியல் உரிமை பற்றிசிந்திக்கும் கூட்டமாக தென்படுகின்றனர் தோட்டப் பொருளாதாரத்திற்கு அப்பால் சென்று உழைக்கக்கூடியவற்றையும் காணலாம். சர்வதேச முக்கியத்துவம் கொண்ட எழுத்துக்கள் கூட இவர்களின் இல்லாமை இயலாமை பற்றியே எழுதின தம்மை பற்றி சிந்திக்கத் தொடங்காத ஓர்உழைக்கும் வர்க்கம் இருக்கிறதென்றால் அது மலையகத் தோட்டத்தொழிலாளர்களையே சாரும். இவர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பல்வேறு அரசியல் அமைப்புக்கள் இருந்தும் இவர்களது அடிப்படைபிரச்சனைகள் கூட தீர்ந்தபாடில்லை இவர்களை பிரதிநிதித்துவ படுத்தும் அமைப்புக்கள் கூட சாதி அடிப்படையிலேயே இயங்குகின்றதை அவதானிக்க முடிகின்றது இவற்றில் இருந்து விடுபட்டு சமுதாய நலனுக்காக செயல்படவேண்டும்.

இன்று பாராளுமன்றத்தில் இவர்களது அரசியல் அந்தஸ்துகாரணமாக பத்து அங்கத்தவர்கள் இடம்பெற்றிருந்தாலும் இவர்களது பிரச்சனைகளுக்கு பரிகாரம் கிடைத்துள்ளதா என்பது கேள்விக்குறியே?

திரு. மு. கணபதி (B A. Trd.)
விரிவுரையாளர்

# பாடசாலை மாணவரின் தலைமைத்துவம்

பாடசாலை என்பது சமூகத்தின் விழுமியங்களையும் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் பாதுகாத்து அடுத்த தலை முறையினர்களுக்கு வழங்கும் ஒரு தாபனமாகும். கல்வியின் நோக்கம் நல்ல பிரஜைகளை உருவாக்குதலே. இது தனியாளின் முழு ஆளுமை விருத்திக்கு உதவ வேண்டும் அவ்வாறாயின் பாடசாலை புத்தக அறிவை மட்டும் வழங்காமல் மாணவரது திறன் மனப்பாங்கு விருத்திக்கும் உதவ வேண்டும்.

பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபரின் தலைமைத்துவம் இன்றியமையாததாகும். இதே போல ஆசிரியர்கள் வகுப்பறை நிர்வாகத்தைப் பரவலாக்கி பாடசாலை நிர்வாகக் கட்டமைப்புக்கு உதவ மாணவர்களிடம் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்து பயிற்சியளிக்க வேண்டும்.

தலைமைத்துவம் என்பது மற்றவரைச் சரியான முறையில் வழிநடத்துதலாகும். சிறந்த தலைவர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் உருவாக்கப்படுவதில்லை. ஒருவனுடைய திறமையை இனங்கண்டு அதனை வளர்க்க பயிற்சியும் வழிகாட்டலும் கொண்ட கல்வியை வழங்குதல் மூலம் தலைவர்களை உருவாக்க முடியும். எனவே இவ்வாறான தலைவர்கள் பாடசாலை வாழ்க்கையிலேயே உருவாக்கப்படல் வேண்டும்.

பாடசாலையில் மாணவருக்கு ஜனநாயகப் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். கல்வியின் நோக்கம், பாடத்திட்டம் கற்பித்தல் முறைகள் என்பன இதனைமையமாகக் கொண்டே வகுக்கப்படுகின்றன. மாணவர்கள் பாடசாலை செயற்பாடுகளில் பங்கு பெறுவதுடன் சில செயல் திட்டங்களைத் தாமே திட்டமிட்டு, செயற்படுத்தி மதிப்பீடும் 'செய்யும் போது அவர்களிடம் தொடங்காற்றல் திறன் சுயமாக வளரும் சமூக உணர்வும் பொறுப்பும் அதிகரிக்கும். குழுமுயற்சி, கூட்டுப் பொறுப்பு, பிறர் உணர்வுகளை மதிக்கும் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை போன்ற பண்புகள் வளரும்.

பாடசாலை மாணவர் பேரவை, மாணவர் சுய அரங்கம் என்பன இதன் அடிப்படையிலேயே பாடசாலைகளில் செயற்படத் தொடங்கின. மாணவர்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதென்பது ஒரு பழமையான செயற்பாடாகும். பிளேட்டோவின் "அக்டமி" பெரும்பாலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டது. ஜெர்மனி, இலங்கை, இங்கிலாந்து, இந்தியா, போன்ற நாடுகளின் கல்வி வரலாற்றிலும் இது ஆரம்ப கால முதல் காணப்படுகிறது.

பாடசாலைகளில் நடைமுறையில் காணப்படும் மாணவ தலைவர், வகுப்பு மாணவ தலைவர் முறையில் பல குறைபாடுகள் உள. இவை ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்க்கு மாத்திரமே பயிற்சியளிக்கின்றன, தவிர பாடசாலையின் பெரும்பாலான மாணவர்கள் இவர்களை விரும்புவதில்லை. காரணம் இவர்கள் பாடசாலை மாணவரையன்றி அதிபரையோ அல்லது ஆசிரியரையோ மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இவர்களது தெரிவிலும் ஜன நாயகப் பண்பு காணப்படுவதில்லை.

பி. கலையரசி
ஆரம்ப கல்வி
(விடுகை ஆண்டு. 94/95)

# வாழ்வே எதிர்நீச்சல்

அன்று
விலை கொடுத்து
வாங்க முடியாதென
கூறப்பட்ட
கல்வி
இன்று
விலைக்கு
விற்கப்படுகிறது.
கள்வர்களால்
கவர முடியாதென
கூறப்பட்ட
கல்வி
இன்று
காசுள்ளவர்களால்
களவாடப்
படுகிறது

❋

கல்வியில்
தராதரம்
அற்றவனெல்லாம்
இப்போ
கவலையடைவதில்லை
தொழில்
இல்லையே
என
முகத்தைத்
தொங்கப்
போடுவதில்லை
அவர்களின்
நோக்கங்கள்
நோட்டுக்களால்
நிறைவேற்றப்
படுகின்றன.

பாதிக்கப்
படுவோர்
பணமில்லா
படித்த
ஏழைகள் தான்.

❋

லஞ்சம்
வாங்குவோரின்
வஞ்சத்தினால்
எத்தனை
ஏழை
நெஞ்சங்கள்
கற்ற
கல்விக்கு
பயனின்றி
வறுமை நீக்க
தொழிலின்றி
வாழ்க்கையை
கேள்விக்
குறிகளாக்கி
கொண்டுள்ளன.

❋

வாழ்
அதற்காகத்தான்
வாழ்க்கை
ஆனால்
அடுத்தவரை
வஞ்சித்து
வாழாதே.

எஸ். யோகராஜா
ஆரம்பக் கல்வி
(முதலாம் வருடம்)

# திகதிகள் முன்னே தெரிவதில்லை

**(சிறுகதை)**

ஒரிரு நாள் விடுமுறை எப்போது வருமென்று நாட்களுக்காக காத்திருக்கும் ராஜியின் மனம் கலாசாலை விடுமுறை வழங்கப்பட்ட போதும் ஏனோ அன்று வீடு செல்வதில் அவ்வளவு சுறு சுறுப்பு காட்டவில்லை. கலாசாலைக்கு வந்த ஆரம்ப நாட்களில் எல்லா சிநேகிதிகளுடன் விடி காலை ரெயிலைப் பிடிக்கும் அவள் தற்போ தெல்லாம் வசதிக்காக ஏழுமணி நுவரெலிய பஸ் ஸைப்பிடித்து விடுவாள் அன்றும் அவ்வாறு தான் பஸ்பிடிக்கும் அவசரத்தில் பஸ் தரிப்பை நோக்கி வேகமாக நடை போட்ட போது இவளது வரு கையை எதிர்நோக்கியிருந்தது போல கரும் பூனை ஒய்வாக சாலையோரத்தில் அமர்ந் திருந்தது விட்டு ''மியா மியா'' என்று கத்திய வாறு குறுக்கே ஓடியது ஏதோ பழமையில் ஆழ் ந்து போனவள் கோயிலில் சென்று வழிபாடு செய்துவிட்டு பின் பஸ் ஏறினாள். அன்று பஸ் விபத்துக்குள்ளாகி விடும் என்னும் சிந்தனையே அடிமனதிலே ஏற்பட பயணம் செய்தாள்.

வேகமாக சென்று கொண்டிருந்த பஸ் திடீ ரென நிறுத்தப்பட்டதுடன் எல்லோரும் ''ஐயோ! கடவுளே காப்பாத்து கடவுளே! என சத்தமிட சாரதியோ தனது தனித்திறமையால் லொறியுடன் முத்தமிட இருந்த பஸ்சை கட்டுப் படுத்தினார். அந்த சத்தம் கேட்டு சிந்தனையில் இருந்து விடுபட்டவள் தன்னை சுதாகரித்துக் கொண்டாள். அருகே இருந்த தோழி வித்யா ''நீ சகுணம்'' என்று சொன்னது எவ்வளவு உண்மையடி; விபத்தில் இருந்து தப்பியது கட வுள் செயல் என்றாள் ''எல்லாமே அவன் செயல்'' என்று கூறி விட்டு இனிமேல் அந்த பஸ்சை நடத்துனர் எடுக்கமாட்டார் என்பதால் அடுத்த வாகனத்திற்காக காத்திருந்து வழமை யான மாவிகாவெல பஸ்சை பிடித்துவிட்டாள். அவளது சொந்தஊர் பகுதியிலே செல்லும் பஸ் என்பதால் அநேகமாக அறிமுகமான முகங்களின் உரையாடலின் நடுவே பயணத்தை மேற் கொண்ட போது எல்லை என்னும் இடத்தை அடைந்ததையே தெரியவில்லை. பயணிகள் நிரம்பி வழியவேகமாகவே ஓடிக்கொண்டிருந் தது. தலையிடி என்பதால் சற்று ஒய்வெடுக்க சாய்ந்தவள் தன்னையறியாமலே சற்று கண்ண யர்ந்து விட்டாள். அருகே அமர்ந்திருந்த அவ ளது பழைய தோழியான சியாமா அவளை அடித்து ஏய் ஏய் 'எழும்புங்க' என சிங்களத்தில் கூறிய போது தான் விழித்தாள்.

சனநெரிசலில் முன் இருக்கையில் என்ன நடந்ததென்பது கூட தெரியாதவளாக இருந் திருக்கின்றோமே ராஜி என சியாமா ஆதங்கப் பட்டாள். ''ஏன்? என்ன? என்று வினவிய போது வெளிமடையில் பிள்ளை பேரப்பிள்ளை சகிதம் ஏறிய அம்மா தூங்குவதாக இருந்து விட்ட பிள் ளை தாயின் உடல் பஸ்ஸின் வேகத்திற்கு சடா ரென சாய்ந்த போது தான் எழுப்பியதாகவும் தாய் எழும்பாததால் மயக்கம் என்று நினைத்து செயல்பட்டதையும் கூறினாள் சியாமா உடனே அந்த இருக்கைக்கு விரைந்த ராஜி, ''கொஞ்சம் இருங்க'' அம்மாவுக்கு மயக்கம் மட்டும் தானே. இப்படி அழுதா சரியா கொஞ்சம் இருங்க, கொஞ்ச நேரத்திலே விழித்திடுவா என கதறி அழும் மகளை ஆறுதல் கூறி தேற்றிக்கொண் டே அந்தபெண்மணியை முன் வாசற்படி அருகே வசதியாக கிழே கிடத்தியதுடன் பஸ்சை நிறுத்தி விட்டார். உரையாடலுடன் தகவல் பெற்றுக் கொண்டே அவளது சுவாசப்பாதைத்தடை, சுவாசம் குருதிச்சுற்றோட்டம் என்பவைகளை பரிசோதித்த போது அவை தடைப்பட்டிருந் ததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவள் ABC ஒழுங்கை மேற்கொள்ள எவ்வளவு தூரம் தூங் கிக் கொண்டு வந்தார் என்று அருகேயிருந்த மக ளிடம் திரட்டிய போது; ''தங்கச்சி அவ அரை மணி நேரமா தூங்கிக் கொண்டு தான் வந்தா; அவளுக்கு அஸ்மா வேறு இருக்கு இப்போது தான் நீங்க அவளைத் தூக்கும் போது தான் கவனித்தேன். அவள் சிறுநீர் வேறு கழித்தி ருக்கா'' என்று கூறினார். ராஜியும் இன்னும் சிலரும் அவளுக்கு உயிர் இல்லை என்பதை உண ர்ந்த போதும் மௌனமாகவே இருந்தனர். பஸ்சை வேகமாக வெல்லவாய வைத்தியசாலை யை நோக்கி ஒட்டுவதைத்தவிர வேறு எதுவுமே பயனளிக்கவில்லை.

அந்த அம்மணியை நோக்கியவாறு இருந்த ராஜியின் மனதிலே கலாசாலையிலே நடத்தப் பட்ட முதலுதவி வகுப்பு பயிற்சியும் மெனடிக் சேரின் நினைவும் நிழலாடியது. அம்மணியை வைத்தியசாலை அவசரப்பிரிவு பகுதி வைத்தி யரிடம் ஒப்படைத்து தகவல் கூறியபோது—

வைத்தியரின் பரிசோதனை ஐந்து நிமிடமே சென்றது ''என்ன செய்ய அவள் தூங்குவதாக நினைத்த அந்த அரைமணி நேரத்திலே இறந்திருக்கா'' எனகையை விரித்துவிட்டு, ''எல்லாம் விதி பிறந்தவர் இறக்கவும் வேண்டுமே'' என்றார். நாட்டு நிலைமையுடன் ஒட்டிய அவரது பேச்சுக்கூட உண்மையை உணர்த்தியது. ஆம் இன்று எத்தனையோ பேர் உடல் கூடக்கிடைக்காது. இறந்து தெருநாய் போல அழிகின்ற போது சந்தோசமாக பிள்ளைகள் அருகே இருக்க சளி அடைத்து இறந்த அந்த அம்மணியின் மரணம் மேல் அல்லவா? வைத்தியரின் வார்த்தையை கேட்ட மகள் கூட நிதானம் பெற்றவளாக எல்லோருக்கும். நன்றி கூறி தகவலை ஊருக்குத் தெரிவிக்கும்படி கூறினாள். வெள்ளவாயில் இறங்கி மௌனராகலை பஸ் பிடித்து தனியே பயணம் செய்த ராஜி இன்னும் கூட அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை. தத்துவப் பாடல்கள் 'போனால் போகட்டும் போடா, இந்த பூமியில் நிலையாய்..' என்றும் ஆளுக்கொரு தேதி வச்சு ஆண்டவன் அழைப்பான் அப்போ யார் அழுதா அவனுக்கென்ன காரியம் முடிப்பான்' என்ற தத்துவப் பாடல்கள் தொடராக காதில் எதிரொலித்த வண்ணமிருந்தது.

''ரீச்சர் செக் பொயின்ட் மௌனராகலை வந்தாயிற்று இறங்குங்க'' என நடத்துனர் கூறிய போது தான் உணர்வு பெற்று கைப்பையுடன் நடந்தாள் ஆம் என்னதான் விஞ்ஞான உலகமாக விந்தைகள் பல நடைபெற்றாலும் எமக்கு மேலே அப்பாற்பட்ட சக்தி ஒன்று இயங்குவதை யாரால் மறுக்க முடியும்? காயமே இது பொய்யடா; வெறும் காற்றடைத்தபையடா, இன்று அவள்; நான் என்றோ என மனதிற்குள் எண்ணியவாறு நடந்தாள் ராஜி

முற்றும்.

*(உண்மைச் சம்பவம்)*


மு. பரிமளாதேவி
94/95 இந்துசமயப்பிரிவு,
விடுகையாண்டு


# உன் நினைவுடன் என் பயணம்

என்

கரு விழியின் கண்ணோரம்
கதைப் பேசும் உணர்வைப் போல்
சில்லென்று பட்டது கன்னத்தில்
சிறு துளிகள்


கனவென்று நினைத்து
கண்களைத் திறந்தேன்
கடலாய் மாறியது - என்
கண்ணீர் துளிகள்

உன்
உயிர்த்துடிப்பாய் எழுந்த
உருவற்ற நேசம் - என்னை
உயிரற்ற பொம்மை போல்
உணர வைக்கின்றது தினம்

உறங்காமல் விழிகளை
நனைத்த வண்ணம் எந்தன்
நிஜ வாழ்வின் நிலையில் கூட
நித்தம் கனா காண வைக்கிறது

இது ஒன்றும் - உடன்
இச்சையல்ல - அதில்
இதம் பாடும் ராகமுமல்ல - என்
இதய அறையில்
இனிதான மௌனராகம் தான்


செல்வி, P. குமுதினி
விவசாயப் பிரிவு
விடுகையாண்டு



# முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் 1995

### முதல் வரிசை (இடமிருந்து வலமாக)

திரு. கே. டீ. கிருஸ்ணசேகர், திரு. எஸ். மகேந்திரராஜா, திரு. ஓ. சிவகுமார்
திரு. எஸ். ஜெகுமார், (விரிவுரையாளர்) திரு எஸ். முரளிதரன், (பதில்முதல்வர்)
செல்வி. எஸ். சங்கரசுப்பு, (விரிவுரையாளர்) செலவி. கே. பரமேஸ்வரி, (முதல்வர்)
திரு. எம். கணபதி, (விரிவுரையாளர்) திரு. எஸ், பீ. தேவதீபன், (நூலக பொறுப்பாளர்)
திரு எம். வரதரா்ஜா, திரு எஸ். மகாலிங்கம், திரு. எம் பன்னீர் செல்வம், திரு ஏ. ஆனந்தன்

### இரண்டாம் வரிசை (இடமிருந்து வலமாக)

திரு. ஏ. அலோசியஸ், திரு. எஸ். யோகராஜா, திரு. எஸ். எச். எம் அயூப், செல்வி. வீ, வசந்தி,
திருமதி. என் இரஞ்சிதமலர், செல்வி. எஸ். யோகராணி, திருமதி. எஸ். அஜந்தா,
செல்வி. பீ. சுபாங்கி, திருமதி எஸ். சிவஸ்வர்ண பூரணி, திருமதி. எஸ். திலகேஸ்வரி,
திருமதி. ஏ எச். எஸ் பரீனா, செல்வி. ரீ. லலிதா, திருமதி. கே. கலையரசி,
செல்வி. ஆர். சந்திரமதி, திருமதி. வி, மாதேவி, திரு. கே. பத்மநாதன், திரு வீ. வரதராஜா
திரு. ரீ. சுந்தரமூர்த்தி, திரு. குமாரகுலசிங்கம்,

### படத்திற்கு சமூகமளிக்காதோர்

திரு. எஸ். லோகநாதன். திரு. கே. கலைச்செல்வன், திருமதி. என். தமிழரசி
திரு. எம். ஐ. எம். கபீர், திரு. வீ, சதாசிவம், திருமதி. வி. லில்லி மார்கிரட்,
திரு. எம். சபேசன், திரு. ஏ. கருணாநிதி, திரு. எம். மகேந்திரன், செல்வி, எஸ். வத்சலா.
திரு. வை எம். அமீர் பைசால், திருமதி. கே. இராஜேஸ்வரி.

## கலையருவி நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் பெயர் விலாசம்.

### ஆரம்பக் கல்வி

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01 | திரு. கே. டி. கிருஷ்ணசேகரன். | ம. மா. / அம். அபரபி. த. வி. நோர்வூட். |
| 02 | திருமதி. கே. தமிழரசி | ராகல U. D. ஹல்கரனோயா. |
| 03 | திருமதி. எஸ். அஜந்தா | இல. 5. ராஜகிரி ஸ்டோர்ஸ் ராகல பஜார், ஹல்கரனோயா. |
| 04 | திருமதி. எஸ். ரஞ்சிதமலர் | இல. 27/4 ஐவலன்தென, கொத்மலே. |
| 05 | திரு. உ. சிவகுமார் | இல. 64, சுப்பர் மாக்கெட், பதுளை. |
| 06 | செல்வி. வீ. வசந்தி | CP/Am. கவரவெல த. வி அப்கோட். |
| 07 | திருமதி. வி. வில்லி மார்கிரட் | D. 33. அப்புகஸ்தலாவ. |
| 08 | செல்வி. இ. சந்ரமதி | 101/4. லோவர் பஜார், பூண்டுலோயா. |
| 09 | திரு. எம். ஐ. எம். கபீர் | 17. ரிப்பாய்புர தம்பலாவ, பொலனறுவை. |
| 10 | திருமதி. கே. கலையரசி | திருமதி. கே. கணப்திபிள்ளை - மே/பா. புஞ்சிகேவா, 67 மெண்டிஸ் ரோட் ஹட்டன். |
| 11 | திரு. எஸ். எச். எம். அயூப் | H. R. M. கடஹாபொல, ஹெரம்பாவா. |
| 12 | திரு. ஏ. அலோசியஸ் | ஹல்கரனோயா தோட்டம், ஹல்கரனோயா. |
| 13 | திரு. எம். பன்னீர் செல்வம் | 23, சென் வினோன்டாஸ். பசார் ஹல்கரனோயா |
| 14 | திருமதி. வி. மாதேவி | ஈவ் தோட்டம், பொகவந்தலாவ. |
| 15 | திருமதி. எஸ். திலகேஸ்வரி | 448 நுவரெலியா ரோட், புசல்லாவ. |
| 16 | செல்வி. பீ. சுபாங்கி | பெரிய கலாவ - 2. மட்டக்களப்பு |
| 17 | திரு. கே' பத்மநாதன் | 91. பிரதான வீதி, கலஹா. |
| 18 | திரு. எஸ். யோகராஜா | 77. பிரதான வீதி, கலஹா, |
| 19 | திருமதி. கே. ராஜேஸ்வரி | 75/1. தர்மவிஜயமாவத்த, பண்டாரவளை. |
| 20 | திரு. எம். வீ சதாசிவம் | 1. பிரதான வீதி, கலஹா. |
| 21 | திரு. குமாரகுலசிங்கம் | 4th 2nd மைல் போஸ்ட், பசறை ரோட், பதுளை. |
| 22 | திரு. எஸ். மகாலிங்கம் | 111. கண்டி ரோட், மல்லவா பிட்டிய. |
| 23 | திருமதி. எ. எச். எஸ். பரீணா | 6. கந்தகெதர. |
| 24 | செல்வி. டி. லலிதா | 78. பிரதான வீதி கலஹா. |
| 25 | திரு. வீ. வரதராஜா | சௌதம் பெக்டரீ, தெமோதர. |
| 26 | திரு. எஸ். மகேந்திரராஜா | ரொக்கத்தனை குரூப், நோர்த் டிவிசன் ஹாலி-எல. |
| 27 | திரு. ஏ. ஆனந்தன் | தெளிவத்தை மேற் பிரிவு, பதுளை. |

### கலையருவி நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து

## முதலாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின்

## பெயர் விலாசம்

# விவசாய விஞ்ஞானம்

| பெயர் | விலாசம் |
|---|---|
| 1 செல்வி. எஸ். வத்சலா | மே/பா. எஸ். சண்முகம் பூனாகல ரோட் கொஸ்லாந்த |
| 2 திரு. ஜே. சுந்தர மூர்த்தி | சென் லெனாட்ஸ் தோட்டம், ஹல்கரனோயா |
| 3 திரு. கே. கலைச் செல்வன் | சென் லெனாட்ஸ் தோட்டம், ஹல்கரனோயா |
| 4 திரு. எம். வரதராஜா | 44/6 யம்பனா வத்த, கிளினிக் ரோட் பதுளை |
| 5 திரு. வை. எம். அமீர் பைசால் | 395 மத்திய வடக்கு ரோட் நட்பட்டி முனை கல்முனை |
| 6 திரு. எம். மகேந்திரன் | 79/2 செல்லப்பா ரோட் பாண்டிருப்பு -01 |
| 7 திரு. எம். சபேசன் | வனிய ரோட், கல்முனை 02 |
| 8 திரு. ஏ. கருணாநிதி | பட்டிருப்பு, கலவாஞ்சிக்குடி |
| 9 திரு. எஸ். லோகநாதன் | ஒல்டிமார் டிவிசன், ஒல்டிமார் குருப் உடப்புசல்லாவ |

## மனைப் பொருளியல்

| | |
|---|---|
| 1 திருமதி. எஸ். சிவஸ்வர்ண பூர்ணி | மே/பா. சிவபாத சுந்தரம் Dr. மாவட்ட வைத்தியசாலை மஸ்கெலிய |

## இந்து சமயம்

| | |
|---|---|
| 1 செல்வி. எஸ். யோகராணி | 368/1 திருஞானசம்பந்தர், வீதி திருக்கோணமலை |

# இன்றைய நிலையும் இருபத்தொராம் நூற்றாண்டில் மலையகமும்

இன்று விஞ்ஞான ரீதியாக மனிதன் உடல், உள்ளம், உலகம் அனைத்தையுமே இயந்திரமயமாக்கிக் கொண்டிருக்கின்றான். ஏன் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களும் தாமே இயங்கி வெவ்வேறு கிரகங்களை கண்டறிந்து அவற்றை நுணுக்கமாக ஆயந்தறிந்து மனிதனுக்கு அறிவிக்கும் அளவிற்கு மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றான்.

எனினும் கடந்த 150 வருடங்களாக இந்தநாட்டின் முதுகெலும்பாக இருந்து வரும் மலையக மக்கள், அவர்களைப் பற்றியே சரியாகச் சிந்தித்து தமக்கான மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்கு. இன்னும் பொழுது புலரவில்லையே, இன்னும் எவ்வளவு காலம் வரை இந்த இருள் சூழ்ந்த பாதையை கடந்து சென்று உலகின் ஏனைய மனிதர்களோடு கரம் பற்றி வெற்றி நடைபோடுவார்களோ என்ற ஏக்கம் இன்னும் எழுகிறது.

இன்று பல்வேறு இன்னல்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் இலேசாக கல்வியில் முன்னேற்றம் கண்டு வருகிறது மலையகம். கல்விக்காக இத்தனை இலவச சலுகைகள் இலங்கை அரசினால் வழங்கப்பட்டும் மலையக மக்களின் பொருளாதார, குடியிருப்பு, அடிமைப்படுத்தல் போன்ற காரணங்களினாலும் மேலதிக வருவாய் தேடும் வாய்ப்பை குறைவாக பெறுதலினாலும் இன்னும் வெளிச்சத்துக்குச் செல்ல எதிர் நீச்சல் அடித்த வண்ணம் இருக்கின்றனர்!

இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் என்னவெனில் வடகிழக்கு மற்றும் நகர் புறங்களில் உள்ளது போன்று கல்விக் கூடத்தில் மற்றும் ஆசிரியர்கள், ஆகியன அமைய வாய்ப்புக்களோ, அல்லது இவைகளை அமைத்துக் கொள்ளும் அளவிற்கு, ஊக்கமோ, சக்தியோ, இதற்கான ஆர்வமோ இவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. எனினும் இன்னும் ஐந்து ஆண்டுகள் கடந்து நாம் அடி எடுத்து வைக்கப்போகும் 21-ஆம் நூற்றாண்டில் மலையகத்தின் சகல மூலை முடுக்குகளிலும் பாலர் பாடசாலைகள், ஆரம்பக் கல்வி நிலையங்கள், ஆகியன தோன்றுவதுடன் ஆங்காங்கே பல்கலைக் கழகங்களும் உருவாக வாய்ப்புகள் உள,

அவ்வாறு மலையகம் கல்வியில் முன்னேறும் பட்சத்தில் இன்று மலையகத்தினை நிர்வகிக்கும் நிர்வாகத்திற்கும் மலையேறி வேலை செய்வதற்கு தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் வெளியார் தோட்டத்தில் வந்து தற்காலியமாக வேலை செய்வதையும் அனுமதிக்காத நிலை ஏற்பட வாய்ப்புகள் ஏற்படலாம். இந்நிலையில் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மலையகம் காரணமாக அமைவது கடினம் எனத்தோன்றுகிறது ஆனால் இன்று மலையகத்தை தன்னோடு இணைத்துப் பேசவோ கலாசாரம், தொழில், கல்வி, அரசியல், பொதுவிழாக்கள் போன்ற எல்லா விடயங்களிலும் தன்னோடு இணைத்துக் கொள்ளத் தயங்கும் ஏனைய சமுகங்களையும் விட உயர் நிலையில் நின்று சரித்திரத்தில் நிலையான இடத்தைப் பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை.

மலையகத்தில் இந்நிலை ஏற்பட ஆசிரியர்களான எமது பங்களிப்பானது மனிதாபிமானத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் சமுகத்தின் சிந்தனா சக்தியை விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் அமைதல் இன்றியமையாததும் ஆசிரியர்களின் தலையாய கடமையுமாகும். இதனை கருத்தில் கொண்டு 21ஆம் நூற்றாண்டில் உலகின் முக்கிய பதவிகளையும் தலைமைத்துவங்களையும் வகிக்கப்போகும் மாணவ சமுகத்தை ஆசிரியர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையை சிந்தையில் கொண்டு செயல்படுவோமாக.

**M.U.** சதாசிவம்
முதலாம் ஆண்டு

# சிரிக்க சிந்திக்க...

3ம் வகுப்புக்கு சென்ற ஆசிரியை "பிள்ளைகள் எல்லோரும் எழுந்து கொப்பி களை எடுங்கள் இன்று நீங்கள் நாயைப் பற்றி எட்டு வாக்கியங்கள் எழுதுங்கள்" என்றார். மாணவர்களும் எழுதத் தொட ங்கினர் அதில் ஒரு மாணவன் நாய் ஒரு மிருகம். நாய்க்கு நான்கு கால்கள், நாய் க்கு இரண்டு கண்கள், நாயின் உடம்பில் தெள்ளு இருக்கும் (ஒரு பிராணி) அதற்கு இரண்டு கண்கள். நான்கு கால்கள். அது ஒரு சிறிய பிராணி அது கடிக்கும் என்று எழுதியிருந்தான். ஆசிரியரும் அம் மாண வனின் கொப்பியைத் திருத்துகின்றார். உடனே என்னடா இது? இவனை நாயைப் பற்றி அல்லவா எழுதச்சொன்னேன், இவன் இந்தத் தெள்ளைப் பற்றி அல்ல வா எழுதியிருக்கிறான். சரி நாளைக்கு அவனை பூனையைப் பற்றி எழுதச் சொல் வோமே என்று ''தம்பி நீ நாளை வரும் போது பூனையைப் பற்றி எட்டு வாக்கி யங்கள் எழுதிக் கொண்டு வா'' என்றார்.

மாணவனும் எழுதுகிறான். பூனை ஒரு மிருகம் பூனைக்கு இரண்டு கண்கள். பூனைக்கு நான்கு கால்கள். பூனைக்கு ஒரு வால் என்று பூனையின் உடம்பிலும் அந்த தெள்ளு குடியிருக்கும். அதற்கு நான்கு கால்கள், இரண்டு கண்கள், இது கடிக்கும். மிகச் சிறிய பிராணி என்று எழுதி இருந்தான். ஆசிரியரும் கொப்பி திருத்தம் செய்கிறார். என்னடா இது இவனை நாயைப் பற்றி எழுது என்றால் தெள்ளைப்பற்றி எழுதுகிறான். பூனை யைப் பற்றி எழுதச் சொன்னாலும் அந்த தெள்ளைப்பற்றி எழுதுகிறான். என்ன செய்யலாம் என்று யோசிக்கின்றார். இவருக்கு ஒரு யோசனை வரவே "தம்பி நீ நாளை வரும் போது கடலில் இருக்கும் பெரிய மீனினமாகிய சுறாவைப் பற்றி எட்டு வாக்கியங்கள் எழுதி கொண்டு வா'' என்றார்.

மறுநாள் ஆசிரியையும் கொப்பி திருத்தம் செய்கின்றார். அன்றும் அம்-மாணவன் சுறா ஒரு மீனினம் சுறா கடலில் வாழும் சுறாவுக்கு இரண்டு கண் கள் சுறா பெரிய மீன் என்று எழுதி சில நேரம் சுறா கரையை வந்து அடைந்தால் அதன் உடம்பிலும் இந்த தெள்ளு குடியி ருக்கும். அதற்கு இரண்டு கண்கள், மிகச் சிறிய பிராணி, இரண்டு காதுகள். நான்கு கால்கள்.

---

செல்வி. M. இளயராணி

ஆரம்ப கல்வி

விடுகை ஆண்டு.

---

## உயிர்ப்புகள்

விளக்கின் உதவி
கிடைத்த பொழுதுகளில்
ஒரு விட்டிலாவது
என்னால்
உயிர் விட்டிருக்கும்!

இருள் சூழ்ந்த வேளைகளில்
ஒரு மின்மினியாவது
எனக்காய் உயிர்விட்டிருக்கும்!

அடங்கா உணர்வுகள்
எழுந்த காலங்களில்
ஒரு பாவையாவது
என்னால் உயிர் விட்டிருக்கும்!

நிலை மாறிப் போன
வசந்தங்களுக்காய்
ஒரு நட்பாவது
என் வாழ்வில்
உயிர் விட்டிருக்கும்!

'அந்த' எல்லாவற்றுக்குமாக
கசந்து போகா
என் ஆத்மா
இளந்தளிராய்
உயிர் விட்டிருக்கும்!

---

சொ. சிவபாலசுந்தர்

விடுகையாண்டு

இந்துசமயபிரிவு

---

# கட்டிடளைஞரின் மனவெழுச்சி பிரச்சனைகளை தீர்ப்பதில் பாடசாலையின் பங்களிப்பு.

கட்டிளமைப் பருவம் உடல் வளர்ச்சியிலும் பெரும்திருப்பத்தை ஏற்படுத்தும் பருவம் ஆகும். பல்வேறு நெருக்கடிகளுக்குட்பட்ட பருவம் இது. மனவெழுச்சிக் கோலங்கள் காலத்திற்குத் காலம் இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. எமது நாடு போன்ற வளர்முக நாடுகளின். வருமான ஏற்றத்தாழ்வு, கட்டுப்பாட்டுடன் கூடிய சாதி, சமயப் பழக்கங்கள், அறிவு முதிர்ச்சியுறாத பெற்றோர், பாமரத்துவம் நிரம்பிய சமூக மக்கள், பழமை தழுவும் இயல்புகள், நம்பிக்கையற்ற எதிர்காலம் போன்ற அம்சங்கள் இவர்களின் மன வெழுச்சியில் ஆழ அகலமான தாக்கங்களை ஏற் படுத்தி விடுகின்றன. இவற்றிக்கு மாற்றம் அறி யாது அவதியுறும் கட்டிளைஞர் கணிசமான ஒரு காலப்பகுதியைப் பாடசாலையில் கழிப்பதால் அவர்களின் மனக்கிளர்ச்சியைச் சரியான ஒரு பாதையிலின்று தடம்புரளாது பாதுகாத்துச் செப்பனிடுவது பாடசாலையின் பணியாகின்றது

கட்டிளைஞரின் மனவெழுச்சிகளின் வளர்ச்சி உடல் வளர்ச்சியுடன் இலணந்த ஒன்றாகும். உதாரணமாக, உடலிலேற்படும் உடல் வளர்ச்சி காரணமாக வெட்கம், கூச்சம் போன்ற மன வெழுச்சிகள் ஏற்படுகின்றன. குறிப்பாக பாலி யல் உறுப்புக்களின் வளர்ச்சி, சுரப்பிகளின் தொழிற்பாடு, அவற்றை மறைக்க முடியாமை, புதிய ஊக்கல்களிலிருந்து விடுபட முடியாமை, அவற்றின் புதிய சுகமான அனுபவங்கள் இப்பரு வத்தினரை அச்சமும் கூச்சமும் அடையச் செய் கின்றன. சிலருக்குத் துரிதமான வளர்ச்சி காரண மாகவும் சிலருக்குத் தாமதித்த வளர்ச்சி காரண மாகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ் வேறு மனப்பாங்கினை ஏற்படுத்துகின்றன.

மிக இளம்வயதில் பூப்படையும் தனது வய தை ஒத்த மற்றெல்லா மாணவியரும் பூப்படைந் தும், இன்னும் பூப்படையாமலிருக்கும் மாண வியும் வெவ்வேறு மனநிலையால் பாதிக்கப் படுவர். இன்னொரு புறத்தில் கட்டிளைஞரின் சிலர் ஒதுங்கி வாழ வேண்டும் என்ற மனநிலை சமூகத்தில் தம்மைப்பற்றிய வித்தியாசமான எண்ணம் பரவிவிடும் என்னும் பயம் இதன் கார ணமாக சமூகத்திலேற்படக் கூடிய வெறுப்பு தாழ்வு மனப்பான்மை மனமுறிவு உடையவர் களாகவும் காணப்படுகின்றனர். இவற்றைப் போக்க வேண்டியது ஆசிரியர் பணியாகும். அவர்கள் மத்தியிலேற்படும் சமூக ரீதியான சந்தேகங்களைக் களைவதன் மூலம் தேவையற்ற பயத்தைப் போக்க வேண்டும் கட்டிளைஞரில் பெரும்பான்மையினர் ஏதாவதொரு கல்விக் கூடத்தினூடாகத் தமது பாதையைக் கடப்ப தால் இங்கே ஆசிரியர் இவற்றைத் தீர்ப்பதில் முக்கிய பங்கெடுக்கின்றனர்.

குறிப்பாக பாலியல் வளர்ச்சி இதனாலேற் படும் மனவெழுச்சிகள் கட்டிளைஞருக்குப் பல பிரச்சனைகளை ஏற்படுத்துவதை நாம் உணர லாம். பாலியல் வளர்ச்சி உயிரினங்களின் தவிர்க்க முடியாத இயல்பு இதற்கு மனித இனமும் விதி விலக்கல்ல கீழைத்தேச சமூகத்தில் இவைசம் பந்தமான கலந்துரையாடல்கள், நடவடிக்கை கள் கீழ்த்தரமானவை என்ற எண்ணம் ஆழப் பதிந்துள்ளது இவ் உணர்வுகள் மறைமுகமாக வோ பாடசாலைகளில் மாணவர் மத்தியில் வெளிப்படும் போது அவற்றை அறிவு பூர்வமாக அணுகாது தண்டனையே கொடுத்தும் பழகிப் போய்விட்டது எமது மரபு வழிவந்த பாட சாலை நிர்வாகம் இப்பருவத்தினருக்கு வகுப் பறையைத் தமது உணர்ச்சிகளை சிறைவைக்கும் இடமாக மாற்றிவிடுகிறது. இத்தகைய சந்தர்ப் பங்களில் ஆசிரியர்கள் மிகக் கவனமாக மாண வரை அணுக வேண்டும் அவர்களுக்குக் கல்வி யில் நாட்டத்தை ஏற்படுத்துதல் வேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாடுகளைத் தண்டனைகளாக அன்றி அவர்களின் சுய கட்டுப்பாட்டு வளர்ச்சிக் குப் பயன்படும் விதத்தில் உபயோகிக்க வேண்டும்.

இன்னொரு வழியில் நோக்கும் போது கட் டிளைஞரின் வளர்ச்சி நிலைகளின் மத்தியில் ஆசிரியர்களோ, பெற்றோர்களோ அவர்களைப் பெரியவர்களாக அங்கிகரிக்காதவிடத்துக் கோ பம், ஆத்திரம் போன்ற மனவெழுச்சிகள் மேலோ ங்குவதை அவதானிக்கலாம் இது மாத்திரமன்றி எதிர்காலத்தின் நம்பிக்கையற்ற தன்மையை அவர்கள் உணரும் போதும் மனவெழுச்சி தீவிர மடையும்.

புதிய புரட்சிகரமான கோட்பாடுகளில் நம் பிக்கையும் விசுவாசமும் தமது கருத்துக்களை அழுங்குப் பிடியாகக்கைக்கொள்வதும் இப் பருவத்தினரின் நிலைப்பாடாகின்றன. அத் துடன் சமயத்தில் தீவிரவெறுப்போ அல்லது

பற்றோ அல்லது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தத் துடிக்கும் போக்கோ ஏற்படலாம். கட்டிளைஞரின் இப்பிரச்சனைகள் தவிர்க்க முடியாதவை ஆகும். இவற்றைத் தீர்ப்பதில் பாடசாலை நிர்வாகம் தன் திறமையை உபயோகிக்க வேண்டும்.

அத்துடன் இப் பருவத்தினருக்கு அறிவு முதிர்ச்சி ஆரம்பக் கட்டத்திலிருப்பதால் தீவிரப் போக்கும் சலன புத்தியும் உடையவராக இருக்கின்றனர். இதனால் சிலர் சிறிய விடயங்களைப் பெரிதாகவும் பெரியவிடயங்களைச் சிறியதாகவும் எடை போடுவர் இதனாலேற்படும் பிரச்சனைகளும் கட்டிளைஞரைப் பாதிக்கின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் மனவெழுச்சிக்குப் பொருத்தமான விளக்கங்கள் மூலம் நெறிப்படுத்துதல் வேண்டும்.

அடுத்து பல குடும்பங்களில் வருமானம் மிகக் குறைந்ததாக இருப்பதாலும் கட்டிளைஞரின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய நிதி வசதிகள் போதுமானதாக இருப்பதில்லை தமக்கு வேண்டிய அலங்காரப் பொருட்கள் உடைகள் என்பவற்றைப் பெறுவதிலேற்படும் நிதிப்பற்றாக் குறை இவர்களின் மனவெழுச்சிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பாதிப்பைப் பாடசாலைகள் தீர்க்க முடியாது ஆனால் பொருளாதாரச் சமமின்மை பற்றிய விளக்கம் இவர்களுக்கு அளிக்கப்படலாம். தம்மால் பிறரை ஈர்க்கச் செய்ய வேண்டுமென்ற அவாவும் தம் தனித்துவத்தையும் திறமையையும் வெளிக்காட்ட வேண்டுமென்ற ஆர்வமும் சமூக சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்படும் போது கட்டிளைஞரின் மனவெழுச்சிகளில் பிரச்சனைகள் தோன்றுகின்றன. இவர்கள் மன அமைதியில் சமநிலை அடையப் பாடசாலைகளே உதவவேண்டும். இவ்விதம் குழப்பமுறும் இளைஞரைக் குழுவாக இயங்கச் செய்வதன் மூலம் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கலாம்.

குழு முயற்சிகள் தாமே கண்டறிதல் பொறுப்பேற்றல் கலைநிகழ்ச்சிகள் இலக்கிய ஆர்வம் என்பன இளைஞரை நல்வழிப்படுத்தக் கூடியன. சுருக்கக் கூறின் கட்டிளைஞரின் பிரச்சனைகள் முழுமையாகக் பாடசாலையினால் தீர்க்கப்பட முடியாதவை முழுச்சமூகமுமே இவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பங்கெடுக்க வேண்டும் எனினும் இவர்கள் கணிசமான நேரத்தைப் பாடசாலைகளில் செலவழிப்பதால் ஆசிரியர்கள் இவர்கள் சார்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில்பெரும் பங்கேற்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

❋

திருமதி. சுசிலா சிவபாதம்
94 95 இந்துசமயப்பிரிவு,
விடுகையாண்டு

## மலையக மக்களையா?

நாட்டுக்குள் நால்வர் என நாம்
நாளெல்லாம் நினைத்திடவே - நாளை
தேடிப்பார்த்தால் இவன் யார்
எங்கோ என்று எண்ணிப்பார்

தேடிப் பார்த்தால் தெம்புள்ள - தமிழன்
தென்னிந்தியன் தெரிவதுண்டோ
தெரியா தனத்தில் தேயிலை தோட்டத்தை
தேடியுமே வந்து சேர்ந்து விட்டோமையா.

கூடாரம் போல குடியமர்த்தி - நாம்
குடிமக்களாய் வாழ்ந்து நல்ல
குடி மகனைப் பெற்று - குறுகியே
வாழ்ந்து குற்றுயிராய் மாண்டோமையா.

வியர்வை சிந்திட விடிவு எப்போ வருமென்று
வீரனாக செயற்பட்டு விந்தைகளை பகுத்தறிந்து
மலையக மண்ணில் மாண்டராய் - வாழ்ந்த
பரம்பரையே மலையக மக்களையா ?

★

திரு. கே. டீ. கிருஸ்ணசேகரன்
ஆரம்பக்கல்வி
முதலாம் வருடம்

# 1980 இன் பின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

1980ம் ஆண்டுக்குப் பின்பு கல்வித் துறையில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி இலங்கை அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தமானது மாகாண சபை களின் உருவாக்கத்திற்கு வழியமைத்தது. மாகாண சபை தொடர்பான சட்ட அம் சங்களை இலங்கை அரசியல் யாப்பான 154A தொடக்கம் 154D வரையமைந்த சரத்துகளாக இடம் பெற்றன.

இச்சரத்துக்களின் அடிப்படையில் கல்வி அமைப்பில் புதிய மாற்றங்கள் ஏற் பட்டன. இதன் படி கல்வித்துறையானது தேசியநிலை, மாகாணநிலை, வலயநிலை; பாடசாலைநிலை என நான்கு வகையாக பிரிக்கப்பட்டது. இதில் தேசிய நிலை என் னும் போது மத்திய அமைச்சர்களின் தேசிய கல்வி நிறுவாகம் தேசிய கல்வி ஆணைக்குழு கல்வி வெளியீட்டுத் திணைக் களம், பரீட்சை என்பனவும் அடங்குகின் றன மாகாண நிலையில் மாகாண கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக் களமும் அடங்குகின்றன.

வலய நிலையில் முன்னைய பிரதேசக் கல்வி திணைக்களத்தின் பிரதியீடாகவும், மாகாண கல்வித்திணைக்களத்தின் ஒரு அங்கமாகவும் இது அமைகின்றது.

புதிய பிரதேச நிலை புதிய பிரதேச சபைகளுக்கு இயைவு பட்டதான ஒரு பிர தேச அமைப்பு அதாவது ஒரு கோட்டக் கல்விக் காரியாலயம்.

பாடசாலை கல்வி அமைச்சின் இறுதி நிறுவனம் அல்லது முதல் நிலை முகாமை நிலையம். இதில் மாகாணக் கல்வி அமை ச்சு இலங்கை அரசியல் அமைப்பின் அதி காரப் பரவலாக்களின் கீழ் புதிதாகப் புகுத்தப்பட்ட அமைப்பு முறையாகும். இதற்குப் பொறுப்பான அதிகாரி மத்திய நிருவாக சேவை அல்லது கல்வி சேவை யின் முதலாம் வகுப்பைச் சார்ந்தவராக இருப்பார். அவரின் செயற்பாடுகள் மத் திய கல்வி அமைச்சரால் வெளியிடப் பட்ட கொள்கை வழிகாட்டலுக்கும் மாகாணச் சபையின் மாகாணக் கொள் கை வழிகாட்டலுக்கும் ஏற்புடையதாக இருக்கும். இவருக்குக் கீழ் மாகாணக் கல்வித் திணைக்களம் அமையும்.

1981ஆம் ஆண்டு மாவட்ட கல்வி நிருவாகத்தை ஒழுங்கமைத்தல் முறை இலங்கையில் ஆரம்பமானது. இது தொ டர்பான கல்வி அமைச்சின் முகாமை சீர் திருத்த அறிக்கை (1984) பிரதேசக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக கல்வி நிருவாக கருமங்களை பரவலாக்கும் நோக்குடன் பின்வரும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

(I) உப பிரதேச மட்டத்தை தோற் றுவித்தல்.

(II) பாடசாலை வலய அமைப்பி னைத் திட்டமிடல்.

(III) மாவட்ட முகாமைத்துவ நிலை யம் என்பனவாகும்.

இதில் உப பிரதேச மட்டம் முக்கிய மானது. இதன் கீழ் 100 அல்லது150 பாடசாலைகள் இயங்கும்.

**தேசியக் கல்வி நிறுவனம்.**

1980ஆம் ஆண்டு நீல் பெர்ணான் டோ என்பவரால் முன் மொழியப் பட்டு 1985ஆம் ஆண்டு 28ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் இது ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள் கல்வி அமைச் சருக்கு ஆலோசனைகளை வழங்குதலும் கல்வியில் பல்வேறு சிறப்புத்துறைகளில் பட்டப் பின் கல்வி அளித்தலும், கல்வியில் நிபுணத்துவ சேவை வசதிகளை ஏற்படுத் தலும் முக்கியமானவையாகும்.

## தேசியக் கல்வி ஆணைக்குழு

தேசிய கல்வி ஆணைக்குழுவானது 1991ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுவின் சட்டத்தின்படி 1991ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி நிறுவப்பட்டது. தேசியக் கல்விக் கொள்கைகள் உருவாக்குதலும் ஜனாதிபதிக்கு தேசியக் கல்விக்கொள்கைகள் சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்குதலும் இதன் கடமையாகும்.

1980ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கைக் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்ட போதிலும் மாகாண சபை, தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம் ஆகியன மிக முக்கியத்துவம் பெற்றவையாகும்.

திருமதி. வசந்தா செல்வராஜா,
இந்துசமயப் பிரிவு
(விடுகையாண்டு)

## மலைநாட்டின் வனப்பு

ஓசையுடன் பாடி வரும் அருவிகட்கு
தாளம் இசைக்குது
தென்றல் !
வண்ண மலர்களெலாம்
தலையசைக்கும் !
மலைநாட்டின் வனப்புதனை
பார்த்தவர்கள் வார்த்தைகளால்
வர்ணிக்க முடியாது !
இங்கேயும் அவலங்கள் !
கூடை தனைத் தலையில் சுமந்து
மலையேறி மாரடித்து
தாய் நாட்டில் வளமூட்டும்
நல்லவரை
கூலி என்று ஒதுக்கி
வாழ்க்கை தனில்
வள மற்று நலிவுற்று
வாழுகின்றாரே
ஏன்?

திருமதி. வாசுகி தியாகராஜா
ஆரம்ப பிரிவு
(விடுகை யாண்டு. 94/95)

---

## உண்மை இதுதான்

பூவுலகில் பிறந்து விட்ட மானிடமே
பூரிக்கும் விடயங்கள் பலவுண்டு

மானிடமான போதும் மரணங்கள்—
நேர்ந்த போதும்
வேண்டாத பல விடயங்கள் எம்மிடம்
உண்டல்லோ

ஜகத்தினை வென்றிட சேர்ந்திடனும்-
சாதிகள் ஒன்றாய்
ஜாதிகள் வேறுபட்டால் ஜகதினில் விடிவு
ஏது

உண்மை ஜாதி என்னவெனில் உலகில்
ஒன்றே ஒன்று
ஆணும், பெண்ணும், இரண்டே தவிர
வேறொன்று இங்கு இல்லை.

உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள்
யாவும்
உயர்வான இலட்சியங்களாக இருக்கின்ற
போது
இன்னுமேன் தாமதம் மனிதா? முரண்
பாடுகளை தகர்த்தெறிவதற்கு
உண்மை இதுதான் நிலை நாட்டிடு-
இன்றே

உழைப்பாளி வர்க்கத்தின் உயர்வு உல
கையே உய்ய வைக்கும்
படைப்பாளி வர்க்கத்தின் உயர்வு கலை-
களை வளர்த்தெடுக்கும்
படைத்திடு உன் படைப்புகளை உழைத்-
திடு அதற்காக நித்தமும்
உயர்வு அங்குதான் உண்மையும் அதுதான்

❋

செல்வி சுப்பையாபிள்ளை கோகிலவாணி
ஆரம்ப கல்வி
விடுகையாண்டு

# சமுதாயத்தில் பாலர் கல்வியின் முக்கியத்துவம்

சமுதாயப் பெருவிருட்சத்தில் நல்வித்துக்களாகக் காணப்படுபவர்கள் பாலர்கள். இவர்களை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வளர்த்து செம்மையுற வைக்கும் நாற்று மேடைகளாகத் திகழ்வது பாலர் பாடசாலைகள். இப்பிஞ்சு உள்ளங்களுக்கு பாலர் கல்வி நிலையம் மூலம் தான் முன்னறிவுக் கல்வி ஊட்டப்படுகின்றது சின்னஞ் சிறார்களின் முன்னறிவிற்கு வழிவகுக்கும் பாலர் கல்வி நிலையங்களின் முக்கிய பங்களிப்பை ஆராய்தல் அவசியமானதொன்று.

பாலர்கள் எனக்குறிப்பிடப்படுபவர்களின் உடல், உள, மொழி, அழகியல், சமூக அபிவிருத்திகள் எண்ணக்கரு என்பன எவ்வாறு காணப்படும், இவர்களுக்கு வழங்கும் கல்வி எந்த வகையில் அமைந்திருக்க வேண்டும். என்பன பற்றி அறிதல் அவசியம். ஒரு கிராமத்தின் சிறந்த வளர்ச்சிக்கு உதவுவதில் இவர்களுக்கு ஊட்டப்படுகின்ற அறிவின் அளவிலேயே மிகவும் தங்கியுள்ளது.

ஒரு கிராமம் பல்வேறுபட்ட இயல்புகளையும் தன்மைகளையும் கொண்டிருக்கும் சுடரும் சூறாவளியைப் போன்று பல்வேறுபட்ட குணாதிசய மக்கள் இருப்பர், பல ஏற்றத்தாழ்வுகள் மிளிரும், சாதி சமய வேறுபாடுகள் காணப்படும். இத்தகைய அமைப்பைக்கொண்ட கிராமத்திலிருந்து பல்வேறு பட்ட குணாதிசயங்களைக் கொண்ட பாலர்கள் கல்விகற்க வருகின்றனர்.

ஆரம்ப பாடசாலைக் கல்விக்கு முன்பே கல்வியை ஆரம்பிக்கிறார்கள் அவர்கள் பாடசாலைக்குச் செல்ல முன் அறிமுகக் கல்வியாகவும், ஊட்டக்கல்வியாகவும் அமைகின்றது குழந்தை பிறந்து மூன்றாம் வயதுவரையும் பெற்றோரின் அன்பிலும் அரவணைப்பிலும் திளைத்திருக்கும் இவர்கள் முன்னிலைப் பாடசாலைக்கு கால் வைக்கும் போது சாதகமான பாதகமான தன்மைகள் காணப்படும். இவர்களிடம் பயம், கூச்சம், மருட்சி, வெருட்சி, சந்தோஷம் உற்சாகம் மகிழ்ச்சி போன்ற தன்மைகள் அமைப் பெற்றிருப்பர் இதனால் இவர்களுக்கு முன்னிலைக் கல்வியானது மிகவும் அவதானத்துடன் ஊட்டப்பட வேண்டும்.

பாலர்களுக்கு ஊட்டப்படும் முன்னிலைக் கல்வியானது தகுதியான பொருத்தமான ஆசிரியையினால் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அகங்காரம், தண்டனை கொடுத்து கற்பித்தல் போன்ற வெறுப்பூட்டும் தன்மைகள் காணப்படாதிருப்பது மிக அவசியம். ஆசிரியை என்னும் நிலையிலிருந்து இறங்கி தாயுள்ளம் படைத்தவராக அன்பு பொறுமை அரவணைப்பு கலந்துரையாடல் என்பன அமைந்தவராக விளங்கினால் மிகச்சாதகமான விளைவு ஏற்படும்.

முன்னிலைக்கல்வியைப் பெறும் ஒரு பிள்ளை சிறந்த வழிகாட்டலைப் பின்பற்றிப் பழகுகின்றது. இதன் பிரதிபலிப்பே ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் திறனை ஆற்றலைப் பெற வைக்கின்றது அறிவுறுதல்களை ஏற்று கீழ்படிந்து நடக்கும் தன்மையைப் பெறுகின்றது. இதுவே பின் பெற்றோர், பெரியோர் போன்றோருக்கு கீழ்படிந்து நடக்கும் ஆற்றலை வளர்த்து விடுகின்றது.

பாலர் பாடசாலையில் பிள்ளைகள் சகோதரத்துவ உணர்வைப் பெற்று சகோதரத்துவப் பண்பைப்பெறுகிறார்கள் ஏற்றத் தாழ்வுகள் நீங்கி ஒற்றுமையுணர்வு பெற்று சிறந்த ஒரு சமூதாயத்தை உருவாக்கும் சிற்பிகளாக உருவாக்கப் படுகிறார்கள் முன் கல்வியினால் கூட்டுறவு வாழ்க்கைப்பண்பு, ஒற்றுமையுணர்வு, சிந்தனை வளர்ச்சியை உருவாக்கவும் பரிமாற்றம் செய்து கொள்ளவும் பாலர்கல்வி நிலையங்கள் உதவுகின்றன இதனால் தம் சிந்தனையை வளர்த்து புது வடிவங்களை உருவாக்கும் திறமைசாலிகள் ஆகின்றார்கள்.

சமூக நற்பழக்கங்கள் இக்கல்வி மூலம் ஊட்டப்படுவதால் ஒரு கிராமத்திற்கு தேவையான நற்பிரஜைகளை உருவாக்குகின்றது. அன்பு, பணிவு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பொறுமை போன்ற நற்குணங்கள் பாலர்களுக்கிடையே பரிமாறிக்கொள்ளப்படுவதால் ஒரு அமைதியான சமாதானமான கிராமம் உருவாக ஏதுவாகின்றது

எனவேதான் பாலர்களுக்கு சிறந்த, பொருத்தமான முன்னிலைக்கல்வி ஊட்டப்பட வேண்டும் இதில் பெற்றோர், ஆசிரியர் சமுதாயம் ஆகிய மூன்று பிரிவும் தவறுவார்களேயானால் தண்டனைக்குரிய குற்றவாளியாகும் பிள்ளைகளை உருவாக்கும் பாவமான செயலுக்கு அவர்கள் எல்லோரும் உடந்தையாகி விடுவார்கள் என்பது உண்மை.

அன்னையின் கையிலிருந்து ஆசிரியரின் கைக்கு ஒரு பிள்ளை மாற்றப்படுகின்ற காலமே இக்கல்வி பெறும் காலமாகும். இதனால் பாலர் கல்வி புகட்டும் ஆசிரியை அன்னைக்குறிய பண்புடனும் பொறுப்புடனும் நிதானத்துடனும் புகட்டப்பட வேண்டும். பிள்ளையின் மனநிலை அறிந்து இக்கல்வி ஊட்டப்பட வேண்டும் இத்தகைய ஊட்டலைப்பெறும் எந்தவொரு பிள்ளையும் எதிர்கால விடிவெள்ளிகளாகத் திகழ்வர். இதற்கு காரணமாக அமைவது பாலர் முன்னிலைக் கல்வியும் அதனை ஊட்டுகின்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களும் ஆவர்.

**எஸ். கலைவாணி**
இந்து சமய கற்கை நெறி
விடுகையாண்டு

# பிரிவுகள் ஆட்கொண்டாலும்

வானுலகம் சென்றாலும் வையகம் மறவாது
மானிடர் வாழ்வினில் நிறைந்திட்ட
கலையருவியே நின் மணம் பரப்ப
என் கரம்தனைப் பற்றி
எழுதுகின்றேன் கவியொன்று.

கலைகள் நிறைந்த இலங்கையினிலே-உயர்
மலைகள் நிறைந்த மலையகமதில்
மாண்புடன் எழுந்து பயிற்சி பெற்று
மங்காப் புகழை மண்ணிற்களித்து
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிக்க-நல்
ஆசானாக நாமும் பயிற்சி பெறுவோம்.

தேன் உண்ணும் வண்டுகளாய் நாம்
யதன்சைட் பயிற்கி கலாசாலையிலே
பறந்து திரிந்த நாட்கள் ஆகா
ஒன்றா இரண்டா எடுத்தியம்ப
இல்லை இல்லை
இருபத்து நான்கு மாதங்களல்லவா
எத்தனை புது முகங்கள் அறிமுகங்கள்
எத்தனை அனுபவங்கள்
அதிபர் விரிவுரையாளர்களின்
நிகரற்ற அன்பு அறிவுரைகள்
ஆனால் இன்று
இன்பங்கள் ஆட்கொண்ட போது
துவண்டு போன நாம் ஏன்
பிரிவினை எண்ணி எம்மையறியாது
துடி துடித்துப் போகின்றோம் ஆம்
உலகின் நியதி இதுதான்.

இவ்வளவு காலமும் நாம்
பயிற்சி மாணவர்களாய்
சுதந்திரமாக தொடர்ந்து உறங்கினோம்
பயிற்சி முடியும் இவ்வேளையில்
பிரிவினை முத்தமிடும் தருணத்தில்
விழித்தெழுவோம் ஏனெனில்
எம் வருகைக்காக எதிர்கால
மாணவர்களும் பாடசாலைகளும்
காத்திருப்பார்களல்லவா ஆதலால்
பிரிவு எம்மை ஆட்கொண்டாலும்
சமுதாயப் பணிகளை எண்ணி
இனி ஒற்றுமையோடு இணைவோம்
சமூகத்தை உயர்த்தவென நல்
ஆசானாகப் புறப்படுவோம்.

செல்வி. பிளசம் மரிய கொறற்றி
ஞானப்பிரகாசம்
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

# தமிழும் சமயமும்

''காலத்திற் கேற்ற வகைகள் அவ் அவ்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய்
எந்நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை''

என்ற வகையில் ஒரு காலத்திற் தோன்றும் இலக்கியமானது எக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதாய் அமைவதில்லை. அதற்கு விதிவிலக் காக சில சமயங்களில் அமைவதும் உண்டு. இதற்கு உதாரணமாக தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்ல பன் மொழிகளாலும் ஏற்றுக் கொள் ளப்பட்டதுமான பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவரின் குறட்பாக்களைக் கூறலாம். அணுவை துளைத் தேழ் கடலை புகட்டியதாக போற்றப்படும் இக்குறள் கற்றோரும் மற்றோ-ரும் போற்றும் உயர்ந்த கருவூலமாகும். அது மட்டுமன்றி இன்னும் நற்பண்புகளை எடுத்தியம் பும் ஐம்பெரும் காப்பியங்களையும் கூறலாம். இது மட்டுமன்றி துன்பியல் கதை ஞானி சேக்ஸ் பியரின், சார்லஸ்டிக்கின்ஸ் போன்ற இன்னோ-ரன்ன கருத்தாக்களின் சிந்தனைகளைக் கூறலாம்

எனவே சமூகத்தின் யதார்த்தங்களை படம் பிடித்துக் காட்டும் இலக்கியங்களினால் அக்கால சமுதாய, அரசியல், கலை, கலாச்சார, அறிவி-யல் அம்சங்களின் பிரதிபலிப்புகளை காணக் கூடியதாகவுள்ளது. இவற்றை நோக்கும் போது சமயமும், தமிழும் இரண்டற கலந்துள்ளமையை காணக் கூடியதாயுள்ளது. மூவேந்தர் முச்சங்கம் அமைத்து முத்தமிழை வளர்த்த காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் கண் சங்க காலமாகும். இதுவே தமிழ் குழந்தை தங்க தட்டில் தவழ்ந்த காலமாகும். இக்காலம் தொட்டு இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தமிழும் சமயமும் ஒருங்கே இணைந்து இரண்டற வளர்ந்து வந்துள்ளமை உள்ளங்கை நெல்லிக் கனி போல தெட்டத் தெளிவாய் தெரிகின்றது.

இக்காலத்துள் ஆறாம் நூற்றாண்டோடு ஆரம்பித்த பல்லவர் காலத்திலும் அதன் பின் வந்த சோழர் காலத்திலும் சமய காப்பியங்-களே அதிகளவாய் தோன்றியுள்ளன என்றால் மிகையாகாது.

எனவே கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்ததெனக் கொள் ளப்படும் தமிழும், இந்து நதியில் தோன்றி ஆதி யும் அந்தமும் இல்லா இந்து மதமும், இரண்டற கலந்து வந்துள்ளமையைக் காணக்கூடியதாயுள்-ளது. இதையே மனோன்மணியம் பின்வருமாறு இயம்புகிறது.

நல்லுயிரும் பலவுருவம்
படைத்துக் காக்கும்
எல்லையரு பரம் பொருளாம்
இறைவன் என்றென்றும்
இருந்தபடி இருப்பது போல்
எக் காலமும் அழியா
மொழி நம் தமிழ் மொழி''

எனவே சமயமும் தமிழும் இரண்டறக் கலந்து இரு கண்கள் போல் காட்சியளிக்கின்றது எனவே தமிழ்த் தாயின் கழுத்தில் சிந்தாமணி யும், காதில் குண்டலமும், கையில் வளையாபதி யும், இடுப்பில் மணிமேகலையும், காலில் சிலம்பும் கொண்டு சிரசில் சமயம் கிரீடமாக ஜொலிக்கின் றது. இவ்வாறாக சமயமும், தமிழும் இணை பிரியாது ஒன்றோடு ஒன்றாய் விருட்சம் என வளர்ந்து தமிழ் மணமும், சமய மணமும் கமழ்ந்து சோலையாக சுகம் சேர்க்கின்றது.

ஒரு இலக்கிய கலைஞன் சமுதாயத்திற்கு ஏற்ற நல்ல இலக்கியங்களைப் படைக்கின்றான். ஒரு மகா கலைஞனோ நல்ல சமுதாயத்தையே படைத்து விடுகின்றான். இவ்வாறு முத்தமிழும் சமயமும் இணைந்து நல்ல கருத்துக்களையும் பண்பாடுகளையும், பொதிந்து கருத்துக்கள் சொரிகின்றது. இவ்வாறே சித்தர்களும் கவிஞர் களும் ஆழ்வார்களும் இதனையே கையாண்டார் கள். அதேபோல் ஈழத்திருநாட்டின் சமயத்தை கண்போல காத்தவர்களுள் ஆறுமுக நாவலருக்கு ஒரு தனியிடம் உண்டு. அவர் தனது இலக்கிய தாகத்தை சமயத்தினூடாகவே வெளிப்படுத்தி னார். அதே போல் ஔவையார், நக்கீரர், பரணர், திருவள்ளுவர் போன்ற இலக்கிய கருத் தாக்கள் இதே வழியையே பின்பற்றினார்கள். என்பது கண்கூடு.

''தமிழுக்கு அமுதென்று பெயர் - அந்த
தமிழ் இன்ப தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

இந்த தமிழே இறைவனிடமிருந்து ஆரம்பித் ததெனமேலோர் கூறுவர் இத்தகைய பெருமை வாய்ந்த நம்மொழி என்றும் அழியா மொழி.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

என்ற கூற்றிற்கு ஏற்ப ஒரு உடலின் இரு கண்களாக தமிழும், சமயமும் இருந்து நம்மொழி வளர்ச்சிக்கு பெருமை சேர்க்கின்றது புரட்சிக் கவிஞன் பாரதியின் கூற்றைப் போல்,

''யாம் அறிந்த மொழிகளுள் தமிழ்
மொழிபோல் இனிதாவதெங்கும் - காணோம்''

இத்தகைய இன்ப தமிழை நாமும் வளம் பெற செய்து மதத்தை அதில் இரண்டறக் கலப் போம்.

பொங்கும் தமிழுக்கு
இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்று
சங்கே முழங்கு''

''நம் மதம் உயர் வென்று
தமிழே வழங்கு''

ௐ

மை. பன்னீர் செல்வம்
ஆரம்பக்கல்வி
(முதலாம் வருடம்)

# நிலையான செயற்பாடுகள்

நிலையான செயற்பாடுகள்
நித்தமும் நிகழ்ந்து விட்டால்,
நிழலாடும் சோகங்கள் ஏது
நிலை மாறும் மனித எண்ணங்களும் ஏது.

நித்தமும் இடியோசை யென
நிகழ்கின்ற பூகம்ப முழக்கங்கள்
நிகழ்வினைத் தாங்காது
நிலை தடுமாறும் நெஞ்சங்கள்

நிலமையை எதிர் கொள்ள
நிமிர்ந்து எழும் இளைய தலை முறைகள்
நிஜமாக வேண்டுவது வன் போரையல்ல
நித்திலத்தின் சமாதானத்தையே

நிதம் நிதம் சமாதானமதை வேண்டி
நிற்கின்ற இனிய நெஞ்சங்களே,
நிலை நாட்டுங்கள் உங்கள்
நிரந்தர சமாதானம் எனும் கொடியை

நிகழ் கால உலகமது காணட்டும்
நிம்மதி எனும் வாழ்வு ஒன்றை
நிச்சயம் ஒரு நாள் காண்போம்
நிலையான எம் பணியின் வலிமையதை.

த. குகனேஸ்வரி
ஆரம்பக்கல்வி
(விடுகையாண்டு. 94/95)

# நமது இளைஞரின் பிரச்சனைகள்

இளைஞர்கள் உருவாகும் முறையில் தான் சமுதாயத்தின் எதிர்காலம் அடங்கியுள்ளது என்பது அனைவரும் உணர்ந்ததே இதற்கு இளைஞர்களைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

இளைஞர்களைஅவர் தம் போக்கில்விட்டு விடுவதே நல்லது என சில பெற்றோர்கள் கருதுகின்றனர். காலப் போக்கில் இளைஞர்கள் திருந்திடுவர் என்பது அவர்களது நம்பிக்கை இளைஞர்களின் ஆவலை நுணுக்கமாகப் பரிசிலனை செய்ய விரும்பாமையையே இப்போக்கு காட்டுகின்றது. இத்தகையோருக்கு மாறாக எல்லாவற்றிலும் குறை காணுகின்ற பெற்றோர்களும் உள்ளனர். இளைஞர்களுக்கு நேர்மையான குறிக்கோள்கள் இல்லை என்றும் அவர்கள் பலவீனமானவர்கள் என்றும் விசித்திரமான குணங்களை உடையவர்கள் என்றும் விசித்திரமான குணங்களையுடைய பெற்றோர்களில் பெரும்பாலோர் குற்றம் சாட்டுகின்றனர் இம்மாதிரி முணுமுணுத்தல் தேவையற்றதாகும். இளைஞரின் சக்தியில் நம்பிக்கையில்லாதவருக்கு எதிர்காலத்திலும் நம்பிக்கையிருக்க முடியாது.

நமது இளைஞரின் தத்துவங்கள் திறமைகளிலும் நாம் மிகுந்த நம்பிக்கை கொள்ளாவிட்டால் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும், நமக்கு இல்லை· இளைஞர் குழந்தைப் பருவம் நீங்கி முதிர்ச்சிபெற ஆரம்பிக்கும் வாழ்வின் எல்லைக் கோடு மிக தெளிவு சுழிவானது இவ்வேளையில் அவர்களின் பிரச்சனைகள் என்னென்னவையென்று நாம் அறிந்துணரவேண்டும்

இளைஞரின் சமுதாயப் பிரச்சனையை எடுத்துக் கொள்வோமேயானால் இளைஞரின் பிரச்சனைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்ளாகும். இதுபற்றி நாம் ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இளமைப் பருவம் மாறுதல் நிகழ்ந்து வரும் காலப்பகுதியாகும், கவலைபற்ற குழந்தைப் பருவத்திலிருந்து பருவமடைந்த வாழ்க்கைக்கு மாறிவரும் பருவமாகும். இதன் எல்லைக் கோடு மிகவும் நெளிவு சுழிவானது. சமூக நிலமைகளையும் தனிப்பட்ட குணங்களையும் சார்ந்து நிற்பதாகும். உழைப்பதற்குப் போதுமான திறமையையோ, கல்வியையோ இளைஞன் பெற்றிருக்க மாட்டான். எனவே முழுமையடைந்த மனிதனைப் போன்று சுதந்திரமாக பொறுப்புக்களை அவனால் நிறைவேற்ற இயலாது.

ஓர் இளைஞன் உடல்ரீதியில் பக்குவமடைவதற்கும் சமூக ரீதியில் பக்குவமடைவதற்கும் இடையே இடைவெளி அதிகமாக இருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இளைஞர்கள் வெகுசீக்கிரம் பக்குவமடைந்து விடுவதாக 19ம் நூற்றாண்டில் இருந்ததை விட இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னதாக மருத்துவ புள்ளி விபரம் கூறுகிறது, ஆனால் சமூக ரீதியான ''பக்குவம்'' காலம் தாழ்த்தியே ஏற்படுகின்றது முறையான கல்வியைப் பெறுவதற்கு கால அவகாசம் அதிகமாகதே இதற்குக் காரணமாகும்.

உளவியல்படி மனக்கட்டுப்பாடே இளைஞரின் பிரச்சனைகளில் மிக முக்கியமானதாகும். மனப்பண்பை உருவாக்குவதற்கு இது தேவையாகும். நாம் வசிக்கும் சமுதாயப் பாத்திரத்தோடு நமது மனப்பண்பு பிணைக்கப்பட்டுள்ளது இப் பாத்திரங்கள் பல வகைப்பட்டன. உற்பத்தித்துறை, குடும்பம் இதரர்களோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவுகள், சமுதாயத்தில் நாம் வகிக்கும் அந்தஸ்து ஆகியவையும் அதில் உட்படும்

தன்னையே நன்றாகக் கண்டறிய ஒவ்வொரு இளைஞனும் ஆவல் கொண்டுள்ளான். ஒரு மனிதன் எப்பொழுதும் அவனாகவே இருக்கின்றான். உருவத்தால் அவன் மற்றொருவனாக மாறிவிட முடியாது. எனினும் தான் இன்றுவரை உணராத திறமைகளையும், சாத்தியக் கூறுகளையும் தன்னிடம் கண்டு பிடிப்பது முக்கியமாகும். இதன் பொருள் வாழ்க்கையில் தனக்குரிய இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதாகும். வாழ்க்கைப் பாதைகள் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. இவற்றில் தனது சொந்தக் குணநலன்களுக்கு ஏற்றதை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தேர்ந்தெடுக்கும் பிரச்சனை ஓர் இளைஞனை எதிர் நோக்குகின்றது. ஒரு வேலையை அவன் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓர் இலட்சியத்தை வாழ்க்கை முறையை அவன் வளர்கப்பட்ட முறையும் அவனது சுற்றுச் சார்பும் இதை நிர்ணயிக்குன்றன. இளமையிலேற்படும் சந்தேகம், தயக்கம் பிரச்சனையைக் கடுமையாக்குகின்றன. அதிலும் குறிப்பாய் வாழ்க்கையின் நோக்கமென்பது வரும்போது பிரச்சனை இன்னும் கடுமையாகின்றது.

மார்க்ஸிச, லெனினியத் தத்துவமும் கோட்பாடும் மனித வாழ்க்கையை, நடைமுறைகளை சமூக நலன்கள் என்ற கோணத்திலிருந்து மதிப்பீடு செய்கின்றன. ஒரு மனிதனின் சமுதாய மதிப்பு ஒட்டு மொத்த சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றும் உழைப்பின் பங்கைப் பொருத்துள்ளது. மனிதன் ஒரு சமூக ''பிராணி'' என்பதனால் மனிதனின் தனிப்பட்ட இன்பம் அப்பங்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிறருக்காக ஒரு மனிதன் தன்னை எவ்வளவு அர்ப்பணிக்கின்றானோ அந்தளவுக்கு அவனது மனிதப் பண்பு வளமடைகின்றது.

எனினும் இப்பொழுது விதியினின்று தனிப்பட்ட நபரின் நடத்தையைத் தர்க்கரீதியாகக் கணித்துவிடக் கூடாது' வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி ஒருவன் நினைக்கும் போது பொதுவான விதியை எண்ணுவதோடு தனது சொந்த வாழ்க்கையின் சாரம்சத்தையும் கணக்கிலெடுக்கின்றான். பொதுவான முயற்சியில் தனக்குரிய இடம் யாது? தனது சொந்தத் திறமைகளை திறம்பட வளர்க்க உதவும் துறை யாது? என்பவற்றை அறிந்து கொள்ள அவன் ஆவல் கொள்கிறான். இக் கேள்விகளுக்குப் பொதுவான விடையைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல.

சமூகத்திற்கு பயன்தரும் துறைகள் பல்வேறு உள்ளன. அவற்றில் ஒரு மனிதன் விரும்புவது யாதென முன்கூட்டியே அறியாமல் அவனது ஆற்றலைக் கணித்துவிட முடியாது. அதோடு அத்துறை சமுதாயத்திற்கு பயன் தருவதோடு மட்டும் அமைந்துவிடாமல் சம்பந்தப்பட்ட மனிதனுக்கும் திருப்தி தருவதாக இருக்க வேண்டும், சமுதாயத்திற்கு பயன்தரும் செயல் முறைகளில் இளைஞரை உற்சாகமாக ஈடுபடவைப்பது கம்யூனிச முறையின் நோக்கமாகும். இந்தக் கல்வி முறை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

உலகைப் பற்றிய இளைஞரின் பார்வை, தன்னோக்க ரீதியானதாகும். சூழ்நிலைகளைப் பற்றி அவனுக்கு ஆழ்ந்த பிடிப்பு கிடையாது. சுற்றுப் புறங்களுடன் தொடர்பு கொள்ளும் ஆரம்ப நிலையிலேயே அவன் உள்ளான். சுற்றுச் சார்புகளை அல்லது கருத்துக்களை உணர்ந்திருக்கின்றான் என்பதை உணர ஒரு இளைஞன் அடிக்கடி மறந்து விடுகின்றான் அவனது '' சுதந்திரத்திற்கு '' இது தடையாகும். தன்னைத் தானே மெச்சிக் கொள்வது பொதுவாக தன்னோக்குப் பார்வையாகும். ஒருவன் பெற்றுள்ள வெற்றிகளின் அடிப்படையில் தான் அவனது மனப்பண்பை புறநோக்கில் மதிப்பிட முடியும்தனிப்பட்ட குணநலன்களைச் சோதனை செய்தும் புறநோக்கில் மதிப்பிட முடியும். தனிப்பட்ட குணநலன்களைச் சோதனை செய்வதும் உருவாக்குவதும் யதார்த்த நடைமுறைகளேயாகும் அன்றாட செயல் முறைகளிலிருந்து ஒதுங்கிப் போக என்ன செய்யலாம் என்று ஒருவன் முயற்சிப்பானேயாகில் அவன் மாயப் பொய்கையில் அகப்படுவான் குறைந்த அனுபவம் உள்ளவனும் தன்னைப் பற்றியே தெரிந்திராதவனுமாகிய இளைஞன் ''சுய பரி சீலனையில்'' எந்தளவுக்கு ஈடுபடுகின்றானோ அந்தளவுக்கு அவனது சுய மதிப்பு உயர ஏதுவாகும்.

செல்வி. P. மணிலா
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

WITH BEST COMPLIMENTS
FROM

**M. T. SELVAM**

*Golden Tailoring*

No. 63, Main Street
UDAPUSSELLAWA.

WITH BEST COMPLIMENTS
FROM

*R. V. M. TRADERS & PAWN BROKERS*

**Dealers in Potatoes**

No, 37, Kandy Road,
Nuwara-Eliya

☎ 052 — 2062

**With Best Compliments From**

**22 Kt Sovereign
Gold Jewellery
in**
සෞභාගය



**Scintillating
New
Designs**
செளபாக்யா

# SAUBAAGYA

***Jewellery & Pawnbroker***

**81 1/1, KANDY ROAD'
NUWARA-ELIYA.**

With Best Compliments From

S. S. C. B

SAARA SPORTS CLUB BADULLA

MR. CHANDRAMOHAN J. P. U. M
DUPUTY MAYOR
BADULLA.

President:
Saara Sports Club

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

*Mahindas*

*No. 27, SOuth Lane*
*BADULLA.*

சகல விதமான பாடப் பயிற்சி துணை நூல்கள், பாடசாலை உபகரணங்கள் கதை புத்தகங்கள் பத்திரிகைகள் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

நியூ மகிந்தாஸ்
இல. 31, சுப்பர் மார்கட்,
பதுளை.

☎ 055—2820


With Best Wishes From.

சிறந்த வீடியோ படப்பிடிப்பு தமிழ், சிங்களம், ஹிந்தி, ஆங்கில கெசட்டுக்கள் கிடைக்கும் இடம்.

TELE
ASIA

81 A, Udayarajah
Mawatha,
BADULLA.

With Best Compliments From



# GOLD STEEL

***General Merchants & Importers***

**Exporters, Supplier of Hardware Items,**
**Principal Selling Agents For**

## "LANKA TOR STEEL"

**18, ABDUL JABBAR MAWATHA,**
*COLOMBO - 12.*

☎ 337213
434084

*WITH BEST WISHES*
*FROM*

**ORCHID PLAZA**

27, Gampola Road,
NAWALAPITIYA.
Telephone:0542 - 323

*WITH BEST WISHES*
*FROM*

**SRIABIRAMI STORES**

No. 87, Waughen's
Park Road,
Nawalapitiya.

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**Midland Wine Stores**

Nawalapitjya

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**UNIVERSAL VIDEO**

Colombo Stores Shoping
Complex

1st Floor, No: 40,
Kotmale Road,
NAWALAPITIYA.

# இலக்கியத்தில் என்னைக் கவர்ந்தவர்

மானிட வாழ்க்கையோடு ஒன்றிப்போன ஒன்றான இலக்கியத்தை இரசிப்பது வாழ்க்கையில் இன்பத்தை பெற ஒரு வழியாகும். இலக்கிய கருத்தாக்கள் பலரும் வந்து பல புதுமை கருத்துக்களை உரைக்கின்றனர். மக்கள் மத்தியில் வாழ்கின்றனர். அவ் வகையிலே அப்பலருள் கம்பராமாயணக் காட்சிகளை தந்து என்னைக் கவர்ந்தவர் கம்பனே.

''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்'' என்பதற்கமைய கம்பன் இராமாயணத்தைச் செந்தமிழிழ் விருத்தப் பாவிலே பாடி சபைக்குள் நுழைவதே ஒரு புதுவிதம்தான். அறியாமை நிறைந்த பூனை ஒன்று ஓசையால் உயர்ந்து அதிர்ந்தெழுகின்ற பாற்கடலை நக்கி முடிக்க ஆசைப்பட்டது போலவே ஆசைப் பூனையாகிய நானும் தூய பாற்கடலாகிய இராம சரித்திரத்தை பாடியிருக்கிறேன் எனக் கூறி தாழ்மையாக சபைக்குள் அடங்குகிறார்.. அது மட்டுமா வான்மீகியின் கவிகளே திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையின் இனிய தேவகானம், எனது கவிகளோ சாதாரண ஊமக்குழல். ஒரு ஊமையன் போல அர்த்தமற்ற உரையாக உளறியிருக்கின்றேன் என சபைக்கு அடங்கு முகம் காட்டும் கம்பன் சபையை அடக்கி விடவும் தவறில்லை. வான்மீகியின் இராமாயணத்தில் ஒரு அக்ஷரம் கூட தவறாது கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்புவித்துள்ளேன். இதில் யாதும் பிழை நிகழின் அது என் குற்றமா? இல்லை, இல்லை வான்மீகியின் குற்றமே எனக் கூறி சபையை அடக்கியே விட்டான்.

ஆனால் அவையை அவ்வாறு அடக்கிய கம்பனே நிகழ்த்தி விட்டானே ஒரு வம்பு இராமாயணக் காட்சிகளில் உயிர்த்துடிப்பான ஒரு சந்தர்ப்பமே இராமன் காடேகும் சந்தர்ப்பம் வான்மீகியும் கம்பனும் இரு வேறுபட்ட இராமாயணங்களைக் காட்டுகின்றனர். அதாவது ''நீ காடு செல்ல வேண்டும் இது தந்தையின் கட்டளை'' என சிறிய தாய் கூற அதனை முகத்தெதிரே மறுத்து சொல்ல முடியாது. எனக் கடும் சொற்களை வீசும் இராமனை இப்போதுள்ள வான்மீகம் காட்டுகிறது. ஆனால் தந்தையின் கட்டளை என சிறிய தாய் கூற அதனை தலைமேல் ஏற்று அன்றலர்ந்த செந்தாமரையினை விட முகம் மலர்ந்தது. ''பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ'' என அகமும் முகமும் மலர்ந்து செல்லும் இராமனை கவி சக்கரவர்த்தி கம்பன் செந்தமிழ் கவிகளில் படைத்துக் காட்டும் புதுமையே அதனாலன்றோ

''கம்பநாடன் கவிதையிற் போற் கற்றோர்க்கு இதயங்களியாதே'' என்ற விமர்சனமும் எழுந்திருக்கின்றது. எதனை எந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை பிறப்பிலே தானே அறிந்தவன் கம்பன் அதனால் அவன் அபர பிரம்மன். அவன் ஒன்றைத் தொட்டால் அவன் அறியாமலே அது எவ்வாறு அமைய வேண்டுமோ அது அவ்வாறே அமைந்து விடும். அது அவனுக்கோர் கொடை: தனியுரிமை, அதில் அவன் சக்கரவர்த்தி. இதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நோக்குவோம்.

> ''பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு''

பகைவர்களை கவிரக்கமற்று கொன்று குவிப்பவன் வீரன். அப்பகைவனுக்கு யாதும் துன்பம் நிகழும் இடத்து அவனுக்கு ஊராண்மை செய்வது அந்த வீரத்தின் சிகரம். வள்ளுவர் கண்ட இவ்வீர சிகரத்தினைப் பொருத்தமான ஆரத்தில் பதித்து பிரகாசிக்கச் செய்து வள்ளுவன் அகத்தினையும் குளிர வைத்தவன் கம்பனே. பிறன்மனை நயத்தல் பேதமையிலும் பேதமை என அறிந்தும் இலங்கை வேந்தன் இராவணன் செய்து விடுகிறான். அதனால் நிகழ்ந்தது இராம இராவண யுத்த முனையில்.

> ''வாரணம் பொருத மார்பன்
> வரையினை எடுத்த தோழன்''

ஆகிய இராவணன் தனது சகல படைக்கலங்களையும் இழந்து நிறம் கருத்திட நிலம் விரல் கிளைத்திட இராமன் எதிரே நிராயுதபாணியாக நிற்கின்றான். அச்சமயம் போருக்கு ''இன்று போய் நாளை வா'' என்று இராமனை இயம்ப வைக்கின்றான் கம்பன்.

இவ்வாறு கம்பராமாயணத்தின் மூலம் கவிச் சக்கரவர்த்தியின் கவித்துவத்தை கண்ணுற்ற இலக்கிய கருத்தாக்களில் கம்பன் என்னை கவர்ந்தவனாகின்றான்.

---

செல்வி. மு. விஜயசெல்வி
ஆரம்பப்பிரிவு
(விடுகையாண்டு)

## குரலிருந்தும் ஊமைகள்

கற்பனையில்
சஞ்சரிக்கும் நான்
கவிதையில் வடிக்கின்றேன்
அக்காட்சிதனை
கண்ணெதிரே
தோன்றும் எண்ணங்கள் பல
மணம் பரப்பும் இங்கே
உயர்ந்த மலைகள் அதில்
பச்சை தேயிலை தளிர்கள்
நாளும் பறிக்கும் இவர்கள்
நம் நாட்டு அடிமைகள்
பல ஆண்டு உழைத்தும்
படுகின்ற வேதனைகள்
பல நூறு
இருப்பது ஒரு அறை
இதில் படுப்பது ஒன்பது பேர்
ஒற்றுமையாய் உறங்கும் இவர்கள்
ஏன் ஒன்று படுவதில்லை
கல்வியிலே நாட்டம் இல்லை - ஆனால்
கள்ளுக் கடையிலே நாட்டம்
பட்டினியிலே குடும்பம்
பல நாட்கள் வருந்தும்
இதனால் உண்டான
பசிக் குரல் அங்கே — இவர்களுக்கு
சமைக்கின்ற விரசனைகள் எங்கே?
விடியலுக்கு ஏங்கும் இவர்கள்
விடிவை எதிர்ப்பார்த்து
கலங்குகின்ற கண்கள் தானே
கவிதைக்கு விடியல் எங்கே?
கலியுக மலை நாட்டுக்கு
விடியல் எங்கே?

**வீரப்பன் ஞானராஜ்**
இந்துசமயபிரிவு
விடுகையாண்டு

## அறிவாய் ஆசானே

பள்ளி வரும் பாலகனை
பாசத்தோடு அணைப்பீரே
உளமறிந்து செயற்படும்
உளமருத்துவரும் நீயே!

சில நேரம் எம்மிடம்
சிந்தனை துளிகளாய்
நல்லுறவை வளர்த்திடும்
நண்பனும் நீயே!

நாட்டுக் கேற்ற கல்வியை
நாமும் பெற்றிட
ஆராய்ந்து கூறிடும்
ஆசானும் நீயே!

ஆய்வு செய்தெம் பிரச்சினையை
ஆர்வத்துடன் முன்னின்று
நியாய தீர்ப்பு கூறும்
நீதிபதியும் நீயே!

திட்டமிட்டு கல்விதனை
தீட்டிட வேண்டுமென
ஆயத்தமாக வந்தெமெக்கு
அன்புடன் கற்பித்திடுவாய்!

பட்டம் பதவி பெற
படிப்பினையே வேண்டுமென
நாள்தோறும் எங்கும்
நல்லறிவு புகட்டிடுவாய்!

நாட்டுக் கேற்ற பிரஜையாய்
நம்மையும் ஆக்கிட
ஏற்ற தாழ்வின்றி கல்வியை
ஏழைகளுக்கு அளித்திடுவாய்.

வாழ்க்கையின் வழிகாட்டலுக்கு
வழிமுறைகளை கூறி
எதிர்காலம் சிறப்புற
என்றுமெம்மை வாழ்த்திடுவாய்!

**இ. கண்ணகி**
ஆரம்பக்கல்வி
(விடுகையாண்டு) 94/95.

# இன்றுவரை புகைப்படக்கலை..

இன்று அனேக விதமான தொழில் துறைகளிலும், பொழுதுபோக்காவும் மக்களின் மனதில் அசையாத ஜீவசித்திரமாகவும் முழு உலகையுமே ஆக்கிரமித்து வருவது புகைப்படக்கலை ஆகும். ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் தான் வாழ்ந்த குகைகளிலே தமது எதிரிகளின் படங்களையும் கொடூர சுபாவமுடைய விலங்குகளின் உருவங்களையும் வரைந்து வைத்தான். ஆனால் இன்று மனிதனது பல்வேறு தேவைகளுக்காக கமராக்களின் உதவியினால் புகைப்படக்கலை வளர்ச்சியடைந்துள்ள இவ் வரலாற்றை சற்று ஆராய்ந்து பார்த்தால்,

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் தோன்றிய ஓவியங்கள் பற்றிய கண்ணோட்டத்தில் ''ஒரு சில இரசாயனப் பொருட்களின் மீது சூரிய ஒளியானது'' படுவதன் மூலம் சில கிரியைகள் உண்டாகின்றன. இதனால் ஓவியங்கள் தானே உருவாகின்றன என்ற கருத்துப் பரவலாக இருந்தது பூரண தெளிவில்லாத இக்கருத்தானது கிட்டதட்ட பதினெட்டாம் நூற்றாண்டிலே உருவானது இது பற்றிதி. பெய்னி டிலகரோச் என்ற பிரெஞ்சுக்காரர் எழுதிய நூலில் '' வெள்ளி நைட்ரேட்'' என்ற இரசாயனம் பூசப்பட்டிருக்கக் கூடிய தளத்தின் மேலே வெளிச்சமானது பட்டால் செயற்கை முறையிலே வண்ணத்தினைத் திட்டிவிட முடியும்'' என்ற நம்பிக்கையை தெரிவித்தார்.

அக்காலத்திலே மிகச் சிறந்த விஞ்ஞானியாக இருந்த பேராசிரியர் சார்விஸ் என்பவரே நைட்ரஜன் பலூன்களைக் கண்டறிந்தவர். வெள்ளி உப்புக்களின் உதவியினால் நிழல் வடிவமான பல படங்களைத்தயாரிக்க முயன்றவர்.

ஒளிபட்டவுடனேயே மாறுதல்களை அடையக்கூடிய இரசாயனப் பொருள்கள் சில வற்றினை வைத்துச் சோதனைகள் பலவற்றைச் செய்தவர் விஞ்ஞான ஆராய்ச்சிகள் பலவற்றில் நாட்டம் கொண்டவராக விளங்கிய ''நைசெபோக் நீபிஸ்'' அவர். மாவீரன் நெப்போலியனின் படையில் உயர் அதிகாரியாக இருந்த இவர் செய்த இரண்டு காரியங்களில் முதற்காரியம் என்னவென்றால் நிழற்படக்கலை என்ற சொல்லினை உலகுக்கு அளித்தது. இதுவே இப்போது '' போட்டோகிராபி '' என்னும் புகழ் பெற்றுள்ளது. இரண்டாவது காரியம் தூரத்திலேயே இருக்கக் கூடிய பொருள்களின் உருவங்களைத் தான் ஒன்றிலே படமாகப் பிடிக்கப்படுவதற்கு இருட்டறைப்பெட்டிக்கமெரா என்ற ஒரு சாதனத்தினை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

வியர்னார்டோ டாவின்சி என்ற மிகப்புகழ் பெற்ற ஓவியக்காரர் தம்முடைய கற்பனையில் கண்ட அளவிறந்த அறிவியல் கருவிகளில் ஒன்றான கமரா பற்றியும். கற்பனையிலே தீர்க்க தரிசனமாக உணர்ந்து அதைப்பற்றியும் எழுதி வைத்தார். உட்பக்கம் இருக்கக்கூடிய பெட்டியொன்றில் சிறு துவாரத்தையிட்டு விடவேண்டும் இத்துவாரத்தின் வழியாக ஒளிக்கதிர்களானவை செல்லுகையில் ஒளியானது நுழைவதற்கெதிரே இருக்கக்கூடிய காட்சியுடைய சின்னஞ் சிறிய தலைகீழான விம்பமானது எதிர்ப்புறத்தில் விழுகின்றதென்பது அறியப்பட்டது கமிராவின் அடிப்படைத் தத்துவமாக இது கொள்ளப்பட்டது.

இவ்விதமான இருட்டறைப் பெட்டியிலுள்ள துவாரத்தில் வெறும் துவாரமாக விட்டுவிடாமல் லென்ஸ் ஒன்றினைப் பொருத்திச் சோதனை செய்தவர், ஜேர்மனியைச் சேர்ந்த துறவியான ஜான் ஏன்பவர் இச் சோதனையினால் விம்பமானது நேராகவும் தெளிவாகவும் விழுந்தது.

நை செபோர் என்பவர் கமராவில் ஒளிக்கதிர்களைப் பிடித்து நிறுத்துவதற்கு என்னென்ன முயற்சிகளை செய்யலாமென்று பெரிதும் ஆராய்ந்தார். இவருக்கு ''ஜோக்குவிஸ் மாண்ட்டே டாகெரே'' என்ற ஆராய்ச்சியாளர் ஒருவரின் நட்பு கிடைத்ததும் இருவரும் இணைத்து கடுமையாக உழைத்தனர். கி. பி. 1831-ம் ஆண்டு லூயிஸ் என்பவர் வெள்ளி அயடைட்டே பொருத்தமான பொருள் என்று கண்டறிந்தார் இச் சமயத்தில் ''நைசெபோர்'' பெட்டிக் கமராவினைத் திருத்தியமைத்து பயனுள்ள ஒன்று என்று பிறர் சொல்லும்படி ஆக்கினர்.

மேலும் கடுமையாக உழைத்த தன் பயனாக இவரது முயற்சிக்கு எதிர்பாராத வியப்பூட்டும் விடைகிடைத்தது வெள்ளி அயடைப்பூசப்பட்டுள்ள தட்டொன்றில் ஒரு படத்தினை ஒடுக்கச் சிறிது நேரம் லென்ஸின் மூலம் வெளிச்சம் தந்தார். பின்னர் இருட்டறை ஒன்றிலே பாதரசத்தை ஒரு கிண்ணத்தில் ஊற்றி சூடேற்றினார். இதிலிருந்து பாத ரச ஆவிகிளம்பியது இந்த ஆவியைத் தட்டின் மேல்படும் படியாக செய்தார்.

உடனே அவர் எடுத்தபடம் தெள்ளத் தெளிவாகத் தோன்றியது. இதன்பின் வெள்ளி உப்புக்களை கழுவி ஒடுக்கச் சோடியம் சல்பேற்று என்ற திரவத்தில் அதனை முக்கி எடுத்து விட்டார் அப்போது புகைப்படம் பளிச்சென்று அவர் முன் மின்னியது. இதற்கு டாகெரியோடைப் என்று பெயர் சூட்டப்பட்டது. 1889-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் ஓர் நாளில் விஞ்ஞானக் கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவரது கண்டுபிடிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது தான் கண்டறிந்த புதுமையான ஒளியினை இருட்டுப் பெட்டியிலே பயன்படுத்தி இயற்கைக்காட்சிகளையோ வேறு பொருட்களையோ படமாக்கும் முறையினை அறிமுகப்படுத்தினார்.

மற்றும் புகைப்படக்கலையிலுள்ள நெகடிவ் பாஸிடிவ் முறைகளைக் கண்டறிந்து செயலாற்றியவர் ''வில்லியம் ஹென்றி பாக்ஸ் டால்போட்'' என்ற ஆராய்ச்சி நிபுணராவர் நெகடிவ் என்பது மூலபிரதி பாசிடிவ் என்பது நேர்ப்பிரதியாகும். இதனை வெற்றிகரமாக கையாண்டு புகைப்படக் கலையில் திருப்பத்தினை உருவாக்கினார் இவரின் இக்கண்டு பிடிப்புக்கு ''கோலோடைப்'' என பெயரிட்டார். மூலப் பிரதியான நெகடிவ் வைத்தயாரிப்பதற்கு காகிதத்திற்குப் பதிலாக கண்ணாடித்தகடுகளை உபயோகிக்கலாம் என்ற யோனையின் பின்பே புகைப்படக்கலையானது புத்துயிர் பெற்றது.

புகைப்படக்கலை இவ்விதமாகப் புத்துயிர் பெற்றவுடன் ஓவியர்களும் தங்கள் தொழிலை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. இயற்கைக் காட்சிகளையும் மனிதர்களின் உருவங்களையும் புகைப்படம் எடுக்கப் பயன்படுத்திய புகைப்படக்கலை பின்னர் வானிலையியலுக்கு உதவும் கருவியாகவும் பயன்படுத்தப்பட்டது.

மேலும் புகைப்படத்தினைக் கொண்டு விசிட்டிங்காடுகளைத் தயாரித்து பிரான்ஸில் புதிய பாஷனொன்றை உருவாக்கினார் டிஸ்டேன எனும் பிரெஞ்சுப் புகைப்படக்காரர் இதன் மூலம் அதிவேகமாக புகைப்படக்கலை மக்களிடையே புகழும் செல்வாக்கும் செலுத்தியது. ஆரம்பத்தில் புகைப்படம் எடுப்பதென்பது சிக்கல் நிறைந்த ஒன்றாக இருந்தபோதும் பின் வந்த கண்டுபிடிப்புக்களினூடாக இலகுவானதென அறியப்பட்டது அமெரிக்காவைச் சேர்ந்த ஜாக்ஸ் ஈஸ்ட்மான் என்பவர் செல்லூலைட்டைப் பயன்படுத்தி போட்டோ எடுக்கப்படும் பிலிமைச் செய்ய முடியுமா என்று முயன்றதில் வெற்றி பெற்றார்.

பகலிலுள்ள வெளிச்சத்திலேயே கமெராவுக்குள் இப்பிலிம் சுருளை உபயோகித்து படமெடுக்கும் முறை இதனால் ஆரம்பமானது -செல்லூலைட் பிலிம் வந்த பின்னர் புகைப்படக்கலையானது விரைந்து பரவ ஆரம்பித்தது புகைப்படக்கலை மிகவும் வேகமாகப் பரவ ஆரம்பித்தவுடன் பலவகையான முன்னேற்றங்களும் அதில் ஏற்படத் தொடங்கின பல நவீன வகைக் கமெராக்களும் கண்டு பிடிக்கப்பட்டன வெளிச்சம் போதாத இடங்களில் வெளிச்சத்தினை உண்டாக்கிப் படங்களைப் தெளிவாக எடுக்கப் புதிதாக ப்ளேஷ்லைட்டுகள் தோன்றின. இந்த ப்ளாஷர்கள் உருவானவுடன் புகைப்படத்தொழிலிலும் புகைப்படக்கலையிலும உள்ள பெருவாரியான சிரமங்கள் அகன்றன.

இக்கலை வெற்றிப் பாதையில் முன்னேறிவிட்டதென சான்று பகர்வதாவது ஒரே நொடியிலே புகைப்படத்தை எடுத்தவுடன் அதுவாகவே கழுவி அதுவே பிரிண்ட் போட்டு அதுவே வெளியிலும் தள்ளிவிடக்கூடிய நொடிப்பொழுது புகைப்படக் கமெராக்கள் உருவாகின. இது அந்நாளில் புகைப்படத்துறையிலொரு மாபெரும் சாதனை என்றும் அறிவியல் துறையின் அபார வேகமான வளர்ச்சி என்றும் விஞ்ஞான உலகில் வியக்கவைக்கும் உண்மை என்றும் போற்றி புகழ்ந்துரைக்கப்பட்டது.

காலப் போக்கில் ஆழ்கடலிலும் வானியலிலும் புதுவகை நவீனரகக் கமராக்கள் பயன்படுத்தப் பட்டன புதுமையான புரட்சிகளை போட்டோ கிராபி என்ற புகைப்படத்துறை செய்து அனைவரையும் மூக்கில் விரல் வைத்து வியக்க வைத்து பல்வேறு துறைகளில் இதன் அவசியம் உணரப் பட்டதும் பெரிதும் வரவேற்கப்பட்டது.


இவ்வாறு பல வருடங்களின் ஒரு பரினாம வளர்ச்சியின் ஊடாக கமராக்கள் வளர்ந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது மனிதனது மூளை உழைப்பினால் உண்டான இக்கருவி இன்று மனித வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்கின்றன மனிதனுடைய வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையாகவும் கமராக்கள் விளங்குகின்றன. அரசியல், பொருளாதாரம் சமூகவியல், பலவிதமான ஆய்வுகள் பாதுகாப்பு துப்பறிதல் வாழ்க்கைச் சம்பவங்கள் போன்ற பல தேவைகளுக்கும் கமராக்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. அதனை தீமையான அல்லது பிழையாகப் பயன் படுத்தாமல் மனித குல நன்மைக்காக பயன் படுத்தப்பட வேண்டும்.

சான்றாதாரங்கள் :-

1. போட்டோ கிராஃபி பிறந்தகதை
2. புகைப்படக்கலை.

பெ. வில்லியம் ரூபஸ்
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

# விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள் - 1995.



**முதல் வரிசை (இடமிருந்து வலமாக)**

செல்வி. எஸ். கலைவாணி, திருமதி. வி. யோகராணி, திருமதி. ரீ. வாசுகி
செல்வி. எஸ். கோகிலவாணி, செல்வி. பி. கலையரசி, திரு. எஸ். ஜெயகுமார்
(விரிவுரையாளர்), திரு. எஸ். முரளிதரன் (பதில் முதல்வர்) செல்வி. எஸ். சங்கரசுப்பு
(விரிவுரையாளர்) செல்வி. கே. பரமேஸ்வரி, திரு. எம். கணபதி (விரிவுரையாளர்)
திரு. எஸ் பீ. தேவதீபன் (நூலக பொறுப்பாளர்) திரு. கணேசமூர்த்தி,
திரு. வில்லியம் ரூபஸ், திரு. வீ. இரத்தினவேல்.

**இரண்டாவது வரிசை: (இடமிருந்து வலமாக)**

செல்வி. ரீ. சரோஜாதேவி, திருமதி எம். சுலாவதி, செல்வி. என். வித்யாவதி,
செல்வி. எம், இளையராணி, செல்வி. எம். ஷாந்தி, திருமதி. சி சுசிலா,
திருமதி. ஏ. மகேஸ்வரி, செல்வி. பி. யோகேஸ்வரி, செல்வி ஆர். கண்ணகி,
செல்வி கே. சரஸ்பே செல்வி. வி. புஸ்பவதி, செல்வி. கே. சந்திரவதனி,
செல்வி. ஆர்.இராஜம்மா திரு, ஆர். தருமரெத்தினம், திரு. கே. கிருஸ்ணராஜா,
திரு. பி. பாரிநேசன், திரு. ஆர். அரவிந்தன், திரு. கே. யோகேஸ்வரன்.

**மூன்றாவது வரிசை: (இடமிருந்து வலமாக)**

செல்வி. எம். விஜயசெல்வி, செல்வி. ரி. குகனேஸ்வரி, செல்வி. கே. மேனகா
செல்வி. பி. மணிலா, செல்வி. பி. குமுதினி, செல்வி. எஸ். விசயகுமாரி,
செல்வி. ஜீ. பி. எம். கொறற்றி, திருமதி. ஜீ. கோவிந்தராஜ், செல்வி. எஸ். பத்மாவதி,
செல்வி. எம். சிவசிராணி, செல்வி. எம். பரிமளாதேவி, திரு. வீ. ஞானராஜ்,
திரு. எஸ். சிவபாலசுந்தர், திரு. ஏ. வரதராஜா, திரு. டீ. இராஜ்குமார்,
திரு. எஸ். கே. ஆனந்தராஜா, திரு. கே. பத்மநாதன்

**படத்திற்கு சமூகமளிக்காதோர்:**

திரு. எம், நீலமேகம் திருமதி. ஆர். புஸ்பராணி, திரு. கே. விஜய்குமார்,
திரு. ஜெ; சற்குருநாதன், ஜனாப் எஸ். ஏ. எம். அனீஸ் திருமதி. ஆர் விக்னேஸ்வரி.

# இலங்கையில் விவசாய கல்வி ஒரு நோக்கு

இலங்கை அரசாங்கம் முறைசார்க் கல்வியூடாகவும். முறைசாராக்கல்வியூடாகவும் விவசாயக்கல்வியைப் போதித்து வந்தது ஆண்டு ஐந்து தொடக்கம் க. பொ. த. உயர் தரம், பல்கலைக்கழகம் அத்தோடு க பொ த. சாதாரணதரத்தோடு இடைவிலகிச் செல்வோருக்கு விவசாய சாதனப் பாடசாலையில் ஒரு வருட விவசாயக் கல்வி வழங்கி வந்தது முறைசார்கல்வி நூற்கல்வியை மட்டுமே வழங்குவதாகக் காணப்பட்டது. முறைசார் கல்வியில் ஈடுபட்ட ஒரு வருட சாதனாப் பாடசாலை மாணவர்களும் இரண்டு வருட விவசாயக் கல்லூரி மாணவர்களும் பயிற்சி முடித்தப்பின்னர் அரசாங்க உத்தியோகங்களையே எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை ஒரு விவசாய நாடு எமது நாட்டுக்கு ஏற்றவர்களை உருவாக்கித் தரும் விதத்தில் இக் கல்வி அமைந்திருக்கவில்லை. எனவே அரசாங்கம் ஆண்டு ஆறு தொடக்கம் ஆண்டு எட்டு வரை வாழ்க்கைத்திறன் கல்வியையும் ஆண்டு ஒன்பது தொடக்கம் பதினொராம் ஆண்டு வரை தொழில் முன்னிலைக்கல்வியையும் அறிமுகப்படுத்தியது. ஆண்டு ஒன்பதில் 20 அலகுகளாகப் பிரித்து விரும்பிய மாணவர் தமது பிரதேசத்துக்குப் பொருத்தமான அலகைத் தெரிந்து கற்க வசதியேற்படுத்தப்பட்டது பயிற்சி மதி... கள் ஆசிரியரால் அதிபர் அல்லது முக்கியமான ஒருவரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். 70 புள்ளிகள் ஆசிரியராலும் 30 புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தால் டிசம்பரில் நடாத்தப்படும் பரீட்சையின் அடிப்படையிலும் வழங்கப்படும்.

தமக்கு விரும்பியத் துறையில் பயிலுகின்றப்போது செயன்முறையில் ஈடுபட்டு அறிவு, திறன் மனப்பாங்கு விருத்தி ஏற்படுகின்றது. இருந்தப்போதிலும் எல்லாப் பாடசாலைகளும் இதன் பயனை பெற முடியவில்லை காரணம் போதிய ஆசிரிய வளமின்மை. உபகரண வசதியின்மை, நிலப்பற்றாக்குறை நீர்ப்பற்றாக்குறை, மாணவர்களின் விருப்பக்குறைவு.

ஆண்டு 10, 11, இல் பயிலும் மாணவர்கள் பெறுகின்ற கல்வி வெரும் நூற்கல்வியாகவே இருப்பதை அறியமுடியகிறது இதனால் அவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு மாற்றத்தை எதிர்பார்க்க முடியாதுள்ளது பின்வரும் மாற்றங்களை ஏற்படுத்துவதால் உரிய இலக்கைப் பெற முடியும் என்பது எனது கருத்து.

1. போதிய வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. செயன் முறைக்கல்வியை வலியுறுத்தி மாணவர் முயற்சியில் ஆர்வமோடு ஈடுபட மூலதன வசதிகளை வழங்கல்
3. மாணவர் முயற்சியால் கிடைக்கும் வருமானங்களை அவர்களுக்கே வழங்குதல்.
4. பாடநூல்கள் வழங்குதல்.
5. ஆய்வுகூட வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
6. விவசாய சம்பந்தமான சுற்றுலா, பொருட்காட்சி, வயல்விழாக்களை பாடசாலையில் ஏற்படுத்துதல்.
7. விவசாயக்கழக செயற்பாட்டை கட்டாயமாக்கல்.
8. ஆண்டு 01 தொடக்கம் விவசாயக் கல்வியை அறிமுகப்படுத்துவதுடன் செயன் முறையிலான கல்வியாக அதை மாற்றுதல்,

மேலும் பாடசாலையில் விவசாயம் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

1. போதிய வளமின்மை.
2. பாடநூல்கள், உரியப்பயிற்சிகள் வழங்கப்படாமை.
3. பாடவேளைகள் குறைவாகவுள்ளமை.
4. இறுதிப்பாடவேளைகள் வழங்கப்படுதல்
5. மாணவர்களிடத்தில் தங்கள் உடைகள் அழுக்கடையக்கூடாது என்ற எண்ணம்.
6. உடல் சக்தி விரயமாகும் என்ற அபிப்பிராயம் மாணவர் மனதில் உருவாதல்.
7. தாழ்வு மனப்பான்மை இக்கல்வியைப்பற்றி மாணவர் மனதில் உள்ளமை.

போதிய வளங்கள் இன்மை:-

தொழில் முன்னிலை பாடங்களான வர்த்தகம், விவசாயம், மனையியல் மூன்றும் ஒரே வேளையில் இடம் பெறுவதால் தனித்தனி வகுப்பறைகள் பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வெயிலில் நின்று மாணவர்கள் கற்க வேண்டிய நிலை. இதனால் வெருப்பேற்படல் ஆசிரியரும் உளச்சோர்வடைய வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே போதிய வகுப்பறை வசதிகளையும் நிலவளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்

பாடநூல்கள் இன்மை:-

ஏனையபாடங்களுக்கு நூல்கள் அரசால் வழங்கப்படுகின்றன, விவசாயத்திற்கு வழங்கப்படுவதில்லை எனவே அவ்வசதியை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.

பாடநூல்கள் குறைவாக உள்ளமை:-

பாடவேளைகள் குறைவாக உள்ளதால் செயன் முறைப்பயிற்சி வழங்க போதிய அவகாசமின்மை. பாடவேளையை அதிகரிக்க வேண்டும்.

இறுதிப்பாடவேளை வழங்கப்படல்:-

பாடவேளை இறுதியாக வழங்கப்படுவதால் மாணவர் நாட்டம் குறைந்து காணப்படல் பூரணமாக பாடத்தை இட்டுச்செல்ல முடியாத நிலை ஏற்படல், பாடவேளைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

மாணவர் தாழ்வு மனப்பான்மை:-

இவ்விடயத்தில் மாணவர் இம்மனப்பான்மையை ஏற்படுத்திக்கொள்ள சமுதாயம் ஒரு காரணியாகின்றது. எனவே சமுதாய மட்டத்தில் விவசாயக்கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்த அரசு வழிவகைகளை ஏற்படுத்துதல். உடல் சக்தி விரயமாகுதல் என்ற மாணவர் எண்ணம்.

மாணவர்கள் உபகரணங்களைக்கையாளும் போது சலிப்படைவர் ஆசிரியர் மகிழ்வூட்டக்கூடிய வகையில் இடையிடையே செயற்பாடுகளை ஏற்படுத்துவதால் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

இதுவரைக் கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து விவசாயக்கல்வியின் குறைபாடுகளையும் காரணிகளையும் அதை எவ்வாறு சீர்படுத்தலாம் என்பதையும் தெரிந்து கொண்டோம். இவ்விடயத்தில் அரசும், ஆசிரியர்களும், மாணவர்களும், சமுதாயமும் உரிய இடத்தை அளித்தால் மென்மேலும் விவசாயக்கல்வி சீர்பெற்று விளங்கும் என்பது திண்ணம்.

திரு. கே. கிருஸ்ணராஜ்
விவசாயப்பிரிவு,
விடுகையாண்டு

# தமிழ் இசை இன்பம்

உலகில் மாக்கள் முதல் மக்கள் வரை அனைவரும் விரும்புவது இன்பமே. நாம் உடலால் அனுபவிப்பது சிற்றின்பம். உள்ளத்தால் அனு-பவிப்பது பேரின்பமாகும். நமது ஐம்புலன்களுக்கும் இன்பம் அளித்து நமக்கு பேரின்பத்திற்கு வழிகாட்டுவது இசை. இவ்வுலகிலேயே நம்மைப் பெரிதும் திகைக்கச் செய்யும் வசிய சக்திபடைத்தது இசை, இசை மிகவும் ஏற்றமுடையது. நம் இதயத்துடன் இசைவது நம்மை இறைவிடம் இட்டுச் செல்வது அத்தகைய சிறந்த ஒப்பற்ற இசை பிறந்த கதை என்ன தெரியுமா?

மனிதன் உலகில் பிறந்தான், வாழ்ந்தான் சுவையான உணவை சுவைத்து உண்டான். இயற்கையின் பல்வேறு எழில்களைக்கண்டு களித்தான். ஆனால் அவனது அவா அத்துடன் அடங்கவில்லை. காரணம் வாய்க்கு இன்ப உணவு கிடைத்தது. கண்ணுக்கு இனிய இயற்கை எழில் கிடைத்தது. ஆனால் காதுக்கு இன்பம் எதுவும் கிடைக்கவில்லை. அந்த இன்பம் எங்கே கிடைக்குமெனத் தேடி அலைந்தான். பல இடங்களில் சுற்றித் திரிந்தான். அங்ஙனம் தேடித் திரிந்த போது இயற்கை வளம் நிறைந்த மலைகளின் பக்கம் சென்றான், அங்கே ஓர் ஓசை ஓம் என்ற ஒலி வந்தது. அந்த ஓசை எங்கிருந்து வருகின்றதென்னும் ஆராய்ச்சியில் ஈடுபட்டான். அப்-போது தன் எதிரே உள்ள ஒரு மரத்தில் வண்டு ஒன்று துளை போட்டு, மரத்தின் உள்ளே போவதும் வருவதுமாக இருக்கக் கண்டான். ஓசை வண்டினிடமிருந்து வருகின்றதா அல்லது மரத்-திலிருந்து வருகின்றதா என்று ஐயங் கொண்-டான். மரத்திலிருந்து வண்டு வெளியே சென்று விட்டது. ஓம் என்ற ஓசை மாத்திரம் நிற்காமல் வந்து கொண்டிருந்தது. வண்டு துளைத்த துவாரம் வாயின் வழியாகக் காற்று உள்ளே நுழைந்து வெளியே வருவதினால் தான் அந்த ஓம் என்னும் ஓசை எழுகின்றதென அறிந்தான் இயற்கையில் அமைந்துள்ள ஓசையின் பெருமையைக் கண்டு பிடித்ததும் மனிதன் மிகவும் அக மகிழ்ந்தான்.

எங்கு சென்றாலும் ஓம் ஒன்ற ஓசையே அவனது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஓசை வந்த இடங்களுக்கெல்லாம் சென்றான். சில மரங்களிலிருந்து குறைவான ஓசையும், சில மரங்களிலிருந்து மிகுதியான ஓசையும் ஒலிப்பதை தனது உள்ளுணர்வால் அறிந்தான். அந்த ஓசைகளை எல்லாம் ஓர் முறையாக அமைக்க ஆசை கொண்டான். அவ்வாறு அமைத்தால் தனக்கும், தன்னைப் போன்றவர்க்கும் இன்பம் தரக் கூடியதாக இருக்கும் என்றெண்ணினான். எனவே, எந்த மரத்திலிருந்து ஓசை மிகுதியாய் வந்ததோ அந்த மூங்கில் மரத்தை வெட்டி, எடுத்துச் சிறிதாக்கி வரிசையாகத் துளை செய்து அதில் தன் வாயினாலேயே ஊதி ஓசை உண்டாக்கினான். அதிலிருந்து பல்வகையான ஓசைகள் எழுந்தன. அந்த ஓசைகட்குப் பெயர் கொடுக்க முனைந்தான் எனவே குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் என் ஏழு ஓசைக்கும் பெயர் கொடுத்தான். "ஸ ரி க ம ப த நி" என்ற ஏழுஓசைகளும் அவனது உளக்கத்தினாலும் அறிவினாலும், ஆராய்ச்சித் திறனாலும் கண்டு பிடிக்கப்பட்ட பிற்காலத்து ஏழிசைகளாகும். இந்தத் தொடக்ககால இசையைத் தன் சமுதாய தேவைகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் - கொண்டான்.

வேட்டையாடும் போதும், போருக்குச் செல்லும் போதும், பற்பல தொழில் முயற்சியில் ஈடுபடும் போது, மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடும் போதும், தன் அறிவுக்கு அப்பாற்பட்ட ஆதிசக்தியைத் தொழும் போதும், தனதுச்மூகத்திற்குப் பெரும் இழப்பு நேரும் போதும், தனித்-தனி வகையான இசை வடிவங்களைக் கையாண்டான். இத்தகைய இசை வடிவங்களை எழுப்புவதில் ஒவ்வொரு குடியிலும் வாழ்ந்து வந்த மக்கள் ஆண், பெண், சிறுவர் அனைவரும் பங்கு கொண்டனர். ஒவ்வொரு குடியிலும் வாழ்ந்து வந்த மக்கள் பண்டைக் காலத்தில் மற்ற குடி-களுடன் தொடர்பற்று வாழ்ந்து வந்தனர். அதனால் அவரவர் வாழ்க்கை முறைகளுக்கேற்ப மாறுபட்ட இசை வடிவங்கள் தோன்றின.

உலகில் மனிதர்களும், பறவைகளுமே பாடு மாற்றல் படைத்தவர்கள் பறவைகள் குதூகலத்தால் பாடும் அதேபோல மானிடனாகிய நாமும் மன எழுச்சியாலும், உற்சாகத்தாலும், இசை பாடுகின்றோம். ஆனால் மன எழுச்சியையும், உற்சாகத்தையும் ஒழுங்கற்ற நிலையிலே வளரவிடாமல் முறைப்படுத்தி வெளியிடுவதே உயர்ந்த இன்பத்தைத் தரத்தக்க கலைகளின்

வழியாகும். ஓர் உயர்ந்த கலைப் படைப்பை அமைப்பதற்கு முறையுடன் கூடிய கற்பனா-சக்தியும், மேதைத்தன்மையும் வேண்டும். இசையும் அத்தகைய உயர் கலையே, உரத்த குரலில் முறையற்ற பல தொனிகளை எழுப்பி நமது மகிழ்ச்சியை வெளியிட்டால் அது பாட்டாகாது அதனை ஒரு கலையின் உருவத்தில் ஒழுங்கோடு வெளியிட முயல்வதே இசையாகும். இசை நாமெல்லாம் போற்றும் தூயகலை, ஈடில்லா இனியக்கலை, திருவருளை வழங்கும் தெய்வீகக் கலை அன்று கண்ணனின் குழலிசை கேட்டு அண்டசராசரங்களும் அப்படியே கட்டுண்டு மெய்மறந்து நின்றன. என கேள்விப்பட்டுள்-ளோம். உண்மையில் இசையின் சக்தி எல்லை-யற்றது. இசையில் மாதா, பிதாவாகிய சுருதி-யும், லயமும் ஒருங்கே இணைந்து நாதமெழுந்-தால் நாமெல்லாம் கட்டுண்டு மெய்மறக்க வேண்டியதுதான். இன்னிசை கேட்டால் இரும்பு இதயமும் பாகாய் உருகும் என்பர். கார் மேகமும் திரண்டு கூடி கானமழை பொழியும் என்பர்.

நம் முன்னோர் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாச் செயலிலும், சடங்குகளிலும், இசை-யுடன் ஒன்றித்து வாழ்ந்தனர். பிறந்ததும் தொட்டிலில் தாலாட்டு, திருமணத்தில் நலுங்கு உழைப்பில் தெம்மாங்கு, பக்தியில் சிந்து, காத-லில் கானல்வரி, போரில் பரணி, இறப்பில் ஒப்பாரி, எனப் பலவகைப் பண்பாடி தமிழ் இசையில் இளைத்தனர். நமது வாழ்க்கையில் தமிழ் இசை ஓர் உயிர் சக்தியாகும் அது நம் வாழ்க்கையைச் சீர்படுத்த வல்லது. இதயத்தில் அன்பை தளைக்கச் செய்யக்கூடியது. அத்தகைய அன்பே நமது வாழ்க்கையின் சலிப்பை மாற்றி இறைவனை அணுக உதவி செய்யும். இறுதியில் நாமும் நம்பிறவிப் பயனை அடையலாம். அதுவே நமது அமிழ்தினும் இனிய தமிழ் இசை இன்பத்தின் அரும் தொண்டும், சேவையுமாகும்.

"தமிழுக்கும் அமுது என்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
(பாரதிதாசன்)

சான்றாதாரம்

1. கருநாடக சங்கீதம்
2. தெய்வம் தந்த பரிசு

செல்வி. மெ. ஷாந்தி
ஆரம்பக்கல்வி 94/95.

# ஒற்றுமை என்னும் ஒரு பலத்தாலே

எல்லோரும் ஒன்று கூடி
எல்லோரும் ஒன்று கூடி செல்வோம்
நல்லோர்கள் வாழ்கின்ற நாடு இதுவென்று
நாமம் சூட்டுகின்ற நாள் வரைக்கும்
எல்லோரும் ஒன்று கூடி
எல்லோரும் ஒன்று கூடி செல்வோம்!

அடிமை நிலை தகர்ப்போம்
அடக்கு முறை ஒழிப்போம்
இடியென முன் சொல்வோம் தோழா - இங்கே
அழுது அழுது மக்கள் வாழ்வை போக்குகின்ற
அவலம் அழித்திடுவோம் தோழா - நாம்
அவலம் அழித்திடுவோம் தோழா!

பிணங்கள் மிதக்கின்ற
ஆற்றை நாம் கடப்போம்
பிளவு செய்கின்ற தலைமையை
படுகுழி தோன்றி புதைப்போம்
நிலமையை நாம் உணர்ந்து செல்வோம் - இந்த
நிலையும் கடந்து வெற்றிக் கொள்வோம்!

நாட்டையெரித்து பலர்
நன்மை பெறுவதனை சகியோம்
எங்கள் எலும்புச் சதையினையும்
எடுத்துக் கொள்கின்ற
எவருக்கும் நாம் அடி பணியோம் - நாம்
எவருக்குமே அடி பணியோம் !!

செல்வி. வே. புஸ்பவதி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு. 94/95.

### கலையருவி நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய

## விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள்

### விவசாயப் பிரிவு

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | திரு. க. விஜயகுமார் | ''கலாபதி'' காரைதீவு 05 (கி. மா) |
| 2 | திரு. க. கிருஷ்ணராஜா | 7ம் வட்டாரம், கட்டை பறிச்சான் மூதூர் |
| 3 | திரு. ஜெ. சற்குருநாதன் | நடுக்கணக்குத் தோட்டம், ஹல்கரனோயா |
| 4 | ஜனாப் எஸ். ஏ. எம். அனீஸ் | 17 கொட்டாம்பிட்டிய, பர்ணகமுவ குருநாகல் |
| 5 | திரு. எஸ். கே. ஆனந்தராஜா | ஹரிங்கடன் கொலனி, கொட்டகலை |
| 6 | திரு. டி. ராஜ்குமார் | செல்வகந்தை, ஹல்கரனோயா |
| 7 | திரு. பி. கணேசமூர்த்தி | 4ம் கட்டை ஒழுங்கை, இனுவில் |
| 8 | செல்வி ப. யோகேஸ்வரி | வெளி ஓயா (U. D. K.) டிவிசன் ஹட்டன் |
| 9 | செல்வி பி. குமுதினி | 189 பார் வீதி, பட்டக்களப்பு (கி. மா.) |
| 10 | திருமதி ஆர். விக்னேஸ்வரி | 7ம் வட்டாரம், அனலை தீவு |

## விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள்

## மனையியல்

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | செல்வி. சோ. சுந்தரகலா | மேல் வீதி (Upper Street) ''லக்ஷ்மி விலாஸ்'' உக்குவத்த, இறக்குவானை |
| 2 | செல்வி. ந. வித்யாவதி | 16/18 பண்டார நாயக்க சதுக்கம் தலவாக்கலை |
| 3 | திருமதி. யு. சுகன்யா | ஊவா கட்டவளை த. வி. ஹாலிஎல |

## கலையருவி நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய

# விடுகையாண்டு ஆசிரிய மாணவர்கள்

## இந்து சமயம்

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | திரு. கோ. பத்மநாதன் | 4ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு |
| 2 | திரு. இரா. தர்மரட்ணம் | 14ம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு |
| 3 | திரு. க. யோகேஸ்வரன் | முப்பணைவெளி, மொனராகலை |
| 4 | திரு. சொ. சிவபாலசுந்தர் | 30 ஹட்டன் வீதி, தலவாக்கலை |
| 5 | திரு. அ. வரதராஜா | சென் கிளயர் தோட்டம் தலவாக்கலை |
| 6 | திரு. வி. ஞானராஜ் | தெளிவத்த தோட்டம் கீழ்ப்பிரிவு பதுளை |
| 7 | செல்வி. மு. பரிமளாதேவி | 205 குமாரவத்த வீதி; மொனராகலை |
| 8 | திருமதி. வி. யோகராணி | 12ம் வட்டாரம், புங்குடுதீவு கிழக்கு |
| 9 | திருமதி. க. பத்மகுமாரி | 14ம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு |
| 10. | செல்வி. நா. சரோஜாதேவி | 2ம் வட்டாரம், நெடுந்தீவு |
| 11 | திருமதி. கலாவதி முரளி | 8ம் வட்டாரம், நெடுந்தீவு |
| 12. | செல்வி. க. சந்திரவதனி | 12 வணிகசேகரபுர, கொட்டகலை |
| 13 | செல்வி. கு. மேனகா | சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா |
| 14 | செல்வி. க. கலைவாணி | 18 பாலிநகர், வவுனிக்குளம் |
| 15 | திருமதி. எஸ். வசந்தா | சென்மேரிஸ் த. ம. வி. பொகவந்தலாவ |
| 16 | செல்வி. மு. சிவசிராணி | 122/22 அம்பகமுவ வீதி நாவலப்பிட்டி |
| 17 | திருமதி. சி. சுசிலா | 65 றொசிட்டா ஸ்கீம், கொட்டகலை |
| 18 | செல்வி. கோ. சுரஸ்பெ... | 17ஏ பெயிலி வீதி, நாவலப்பிட்டி. |
| 19 | திருமதி. மகேஸ்வரி கோவிந்தராஜா | 50/11A பஹலவத்த, பஹலகம பதுளை |

# மக்களும் பண்பாடும்

பண்பாடு என்றால் என்ன? "பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினூடாக தோற்றுவித்துக்கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றின் தொகுதியாகும்.' மக்கள் கூட்டத்தினரின் பண்பாடு என்பது அக்கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்

பண்பாடு என்பது ஒரு மக்கட் கூட்டத்தினரின் நடத்தை முறையாகவே தோன்றினாலும், அது அம்மக்கள் கூட்டத்தினரிடையேயுள்ள சகலரும் பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கள் நடைமுறை உத்திகள், நடத்தைகள், வழிநடத்தும் முறைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கும். அதாவது பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினரிடையே அதன் அங்கத்தவர் கொள்ளும் அர்த்தங்களுக்காக சூழமைவுகளையும் கொண்டதாகும்.

நாம் பண்பாட்டை நன்கு விளங்கிக் கொள்வதற்கு பின்வருவன பற்றிய விளக்கத்தை அறிந்திருத்தல் வேண்டும்.

அ) பண்பாடும் மொழியும்

ஆ) பண்பாடும் சடங்கும்

இ) பண்பாடும் சூழலும்

ஈ) பண்பாடும் மதமும்

முதலாவதாக நாம் பண்பாடும் மொழியும் என்பதை நோக்குவோமாயின், மொழி பண்பாட்டின் தளமும், களமும் ஆகும் மொழி என்பது குறித்தவொரு பண்பாட்டின் விளைபொருளும் பெறுபேறும் ஆகும். ஒரு மக்கட் கூட்டத்தினரால் பேசப்படும் மொழி அம்மக்கட் கூட்டத்தின் முழுப் பண்பாட்டினதும் பிரதிபலிப்பாக அமையும். அத்தோடு மொழி பண்பாட்டின் ஒரு பகுதியாகவும் கொள்ளலாம்.

மேலும் ஒரு மொழி பண்பாட்டிற் காரண நிபந்தனையாகவும், நிலைபாடாகவும் உள்ளது. அதாவது ஒரு மொழியிலேயே பண்பாடு நிலைக்க முடியாது. ஆயினும் நாம் மொழியில்லாது பண்பாட்டைப் பற்றி பேச முடியாது. எனவே மொழியானது பண்பாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உதவுகின்றது.

அடுத்ததாக பண்பாடும் சடங்கும் என்பதை நோக்குவோமாயின், சடங்கு என்பது பண்பாட்டிலுள்ள விழுமியங்களை ஏற்றுக்கொள்வதற்கான குறியீட்டு நடவடிக்கை எனலாம் சமூகப் பெறுமானங்களை நிலை நிறுத்தலும், மீள நிலை நாட்டுதலும், சடங்கின் இன்னொரு முக்கிய அம்சம். அது எல்லோர் மனதிலும் ஏற்படுத்தும் திருப்தியுணர்வும், பாதுகாப்புணர்வும் ஆகும் இதன் அடிப்படையில் நோக்குவோமாயின் சடங்கு என்பது பண்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு முறையாகும்.

அடுத்ததாக பண்பாடும் சூழலும் என்பதனை நோக்குவோம். பண்பாட்டுக்கும் அதன் சூழலுக்கும் உள்ள இயைபு தொடர்பும் கூட முக்கியம் வாய்ந்தது. பண்பாட்டின் வளர்ச்சிக்கு சிறந்த சூழல் அவசியம் வேண்டும். பண்பாடு வளர்ச்சியில் சூழல் என்று கூறும்பொழுது சமூகச் சூழல், குடும்பச்சூழல், உணவுச்சூழல், தொழினுட்பச்சூழல் போன்றன முக்கிய இடம் பெறுகின்றது 'இவை பண்பாட்டமைவுக்கான பிரதான காரணிகளாகும்.

இறுதியாக பண்பாடும் மதமும் என்பதனை நோக்குவோமாயின், பண்பாட்டின் மிக பிரதான பின்புலமும், அதன் தளநிலையும் மதமாகும். மதம் என்பது

மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய தாகும். முதலாவதாக மக்களின் நம்பிக்கை, இரண்டாவதாக மதசடங்குகளும்-ஐதீகங்களும், மூன்றாவதாக முதலில் குறிப்பிட்ட இரண்டினையும் வளர்க்கும் சமூகக்கண்ணோட்டம் ஆகும் இவை மூன்றும் ஒருங்கிணையும் போது மதம் தொழிற்படுகின்றது. இவை பாரம்பரியமாக நடைபெற்று வருவதாகும். பாரம்பரியம் என்பது மதம் பேணுகையுடன் மிக தொடர்புபட்ட ஒன்றாகும்.

ஆக்கம். தி. தமிழரசி
முதலாம் வருடம்

With Best Compliments From

# P.J

## PRATHEEPA JEWELLERS

**22 CT. Gold Jewellery Gems and Ever Silver Etc**

No, 1 Hill Street
Kandy Road,
**NUWARA - ELIYA**
**Sri Lanka**

☎ 3512

---

BEST COMPLIMENTS FROM



# WELIMADA STORES

**Dryfish Wholesale Dealers**

## ROOMY TEA CENTRE

No. 7, Ragala Bazaar,
HALGRANOYA

☎ 052/5330

*WITH BEST WISHES*
*FROM*

**P. CHELLIAH ACHARY & SON'S**

No. 19, Wanigasekarapura
KOTAGALA

வாழ்க உங்கள் பணி

*****

**ரட்ணம் மாளிகை**

இல: 225,
மெயின் வீதி,
மாத்தளை.

தொலை பேசி இல: 3159

*WITH BEST COMPLIMENTS FROM*

**SONY VIDEO CENTRE**

170 1/1B, MAIN STREET
**RATNAPURA.**

WITH BEST COMPLIMENTS FROM

**RANMUTHU JEWELLERY**

**Makers of Genuine 22ct GOLD Jewellery**

රන්මුතු ජුවලරි

67/B—1, ස්ටැන්ලි තිලකරත්න මාවත,
(දුම්රිය ස්ථානය ඉදිරිපිට)
නුගේගොඩ.

*67/B—1 Stanley Thilagaratna*
*Mawatha*
*(Opp) Railway Station*
*NUGEGODA.*

BEST COMPLIMENTS
FROM



New

**Jeewa**

**Jewellery**

*For All Your Presentations*
*Ever Silver Wares Etc*

No. 4JA, Kandy Road,
NuwaraEliya.

*BEST WISHES FROM*



**P. P. Selvam**

**NEW SUN**
**RADIO**

No. 14, Main Street
Udapussellawa.

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**AMUTHA**
**JEWELLERS**

අමුද அமுதா

No. (20) 52/4, Daily Fair
Nuwara-Eliya

☎ *052 — 3303*

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**K. V. P** *Seed*

**POTATO**
**CENTRE**

No. 39, Kandy Road,
NUWARA-ELIYA

☎ 052--3068

BEST WISHES FROM

## WESTERN HARDWARES

General Hardware Merchants
Dealers in Electrical goods &
Building Materials

**No. 6, Station Road,**
**KOTAGALA.**

*BEST WISHES FROM*

*****

## MOHAN TAILORS

*No, 14, Main Street,*
*UDAPUSSELLAWA.*

*BEST WISHES FROM*

## *Studio Gangas*

**No 23, Main Street**
UDAPUSSELLAWA.

நல்வாழ்த்துக்கள்

## புஸ்பா ஹாட்வெயார்ஸ்

கட்டிடப் பொருட்கள் விற்பனையும்
போக்குவரத்து சேவையும்

இல. 140, பிரதான வீதி
கொட்டகலை.

# வாழ்வின் குறிக்கோள்

மானிடர்களாய் பிறந்த நாம் எல்லோருமே வாழ்கின்றோமா? ஆம் வாழ்கின்றோம். இலட்சிய மற்ற வாழ்வை குறிக்கோள் இல்லா வாழ்வை ஒருவனுடைய வாழ்வை நிர்ணயிப்பது அவனுடைய இலட்சியம். அவனுடைய குறிக்கோள், இலட்சியம் இவ்விரண்டும் இல்லா வாழ்வு சுக்கானில்லா மரக்கலம் அணையில்லாப் பாலம்

ஆகவே குறிக்கோள் எவ்வித அடிப்படையிலே ஆரம்பமாக வேண்டும் என்பது சிந்திக்கற்பாலது. களவே தொழிலாகக் கொண்டவன் அதுதான் தான் போற்றும் கலை என்கின்றான். ஏன் குடித்து வெறிப்பவன் கூட தனது வாழ்வின் இலட்சியம் என்று தானே கருதுகின்றான். பொய் சொல்பவன் கூட அப்படியேதான் எண்ணுகின்றான் ஆகவே இவைதானா மனித வாழ்க்கையின் குறிக்கோள்கள்? இவற்றையே குறிக்கோள்களாக கொண்டோர் வாழ்க்கை பூரண வாழ்க்கையாகி விட்டதா? இல்லை இவர்கள் வாழ்க்கையில் புயல் உண்டு பூசல் உண்டு இவர்கள் ஊண்மையை உணராது வாழ்வது என்று கருதி வாழ்வை அலட்சியப்படுத்துகின்றார்கள்.

இலட்சிய வாழ்க்கை அன்பின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். அறிவு, ஆற்றல், என்ற கட்டுக் கோப்புகளுடன் அமைய வேண்டும். பணமும், பட்டமும் மனிதனால் மதிக்கப்படுகின்றன, என்பதற்காக அவற்றை தீமையின் துணை கொண்டு தேடிக் கொள்ளாதே வறுமையும் ஏழ்மையும் மனிதனால் இகழப்படுகின்றன என்பதற்காக அவற்றை தீமையின் துணை கொண்டு போக்கிக் கொள்ளாதே என்ற ''கொன்பூசியசின்'' போதனைகள் இங்கு நினைவு கூறத்தக்கவை பிறரை துன்புறுத்தி தமது குறிக்கோள்களை அடைவதல்ல வாழ்வின் நோக்கம் உலகத்தை திருத்திய உத்தமர்கள் என்ற வரிசையில் இன்று போற்றப்படும். அத்தனை சமுதாய சிற்பிகளும் தமது குறிக்கோள்களை அன்பின் அடிப்படையிலேயே தான் ஆரம்பித்தார்கள் இந்தியர்க்கு உயிர் கொடுத்த மகாத்மா காந்தியை நோக்கும் போது அவர் தம் வாழ்க்கையின் குறிக்கோள்களாக கொண்டது. நாட்டின் சுதந்திரமேயாகும். சுதந்திரத்திற்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த உத்தமர் கொலைக் கருவிகள் கொண்டு போராடவில்லை. சத்தியம், அகிம்சை, என்ற இரண்டுமே அவரது போர்க்கருவிகளாகும். ஏழையின் அன்பின் ஆபிராகம் இலிங்கனின் அன்பு மனம் கொதித்தது ஏன்? ஒரு சமுதாயமே மனிதத் தன்மையின்றி மிருகத் தனமாய் நடாத்தப்படுவது கண்டுதான் அடிமைத் தளையை அகற்ற வேண்டும் என்பதே அந்த மனித உள்ளம் படைத்த மாணிக்கத்தின் வாழ்வின் குறிக்கோள். நான் அடிமையாக மாட்டேன். மற்றவர்களையும் அடிமையாக்க மாட்டேன் என்பதே அன்னார் வாழ்வின் இலட்சியம். அதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். அறிவு, ஆற்றல் என்ற ஆயுதங்களின் உதவி கொண்டு அதனால் பலனை அடைந்தார். அடிமைத் தளையை அகற்றினார்

ஆதிகாலத்தில் வாழ்ந்த நமது மூதாதையர் காதலையும் போரையும் தமது குறிக்கோளாக கொண்டணர். இது இலக்கியத்திலிருந்து நாம் அறியக் கூடியது. தென்னாட்டில் வாழ்ந்த தமிழ் அரசரின் வீரத்தை இழித்து உரைத்தான் ''கனகர் விஜயன்'' என்ற வடநாட்டு வேந்தன். அவனைப் போரிலே புறம் காட்டுவித்து நிலை நாட்ட வேண்டும். என்று வடநாட்டின் மீது படை எடுத்தான் ''சேரன் செங்குட்டவன்'' தமிழர்

வீரமுடையவர்கள், மானமுடையவர்கள் என்பதை அறியச் செய்ய வேண்டும் என்பதை தனது குறிக்கோளாக கொண்டான் போர் தொடுத்தான், வெற்றி கண்டான். தனது குறிக்கோள்களை நிலைநாட்டினான். தமிழ் மறையை உலகிற்கு ஈந்த வள்ளுவர் ஒரு பெண்ணானவள். அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு, என்ற நான்கு படைகளாலும் கற்பு எனும் கோட்டையைப் பாதுகாத்து கணவனே தனது செல்வம் என்று எண்ணி வாழ்வு, தாழ்வு, இன்பம், துன்பம் ஆகிய எல்லாவற்றிலும் பங்குகொண்டு வாழ்வதே தனது வாழ்வின் குறிக்கோள்களாக கொள்ள வேண்டும் என்று கூறிப் போந்தார். ஒருவன் வாழ்வில் அவன் தன் குறிக்கோள்களை அடைய விடாதபடி எத்தனையோ எதிர்ப்புகள் ஏற்படும் ஆனால் இவை எல்லாவற்றையும் மன அமைதியோடு எதிர்த்து நிற்கும் ஆற்றல் வேண்டும்.

இப்படியாக பலருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் எதிர்ப்புக்கும் ஆளாகிய தாம் எடுத்துக் கொண்ட சமுதாய சிற்பிகள் அத்தனை பேரும் தமது குறிக்கோள்களை நிறைவேற்றினர். ஆனால் அன்று அவர்களுக்கு கிடைத்த பரிசுகள் எவை? மகாத்மா காந்திக்கு கிடைத்தது வெறி கொண்ட துரோகி ஒருவனின் துப்பாக்கிக் குண்டு பரிசு களியாட்டத்தில் உல்லாசமாக இருந்த மக்களின் மனிதன் இலிங்கனுக்குக் கிடைத்தது துப்பாக்கிக் குண்டு பரிசு தான். ஆனால் இன்று அவர்கள் எல்லோரும் உலகத்தை திருத்திய உத்தமர்கள் ஞானிகள், தீர்க்கதரிசிகள் என்றெல்லாம் போற்றப்படுகிறார்கள், இவைகள் நமக்கு சரித்திரம் படிப்பிக்கும் பாடங்கள் ஆகவே இலட்சியவாதிக்கு கிடைக்கக் கூடிய பரிசுகளைக் கொண்டு பின்னடையாது நேர்மையுடனும் நெஞ்சில் உரத்துடனும் இலட்சியத்தை குறிக்கோளை நோக்கி நாம் ஒவ்வொருவரும் முன்னேறுவோமாக.

❋

---

பெ. கணேசமூர்த்தி
விவசாய விஞ்ஞானப்பிரிவு
விடுகையாண்டு.

---

# கலையும் ரசனையும்

எம். மகேந்திரன்
(விவசாய விஞ்ஞான நெறி) 1-ம் வருடம்

கலை அழகின் பிறப்பிடம் கலை என்பது உள்ளத்தின் உணர்வு இரசனை ஏற்படுத்தி மனித மனங்களை மகிழ்விக்கின்றது தன்னலமும் பழி வாங்கலும் மிக்க உலகை விட்டு எம்மை அழைத்துச் செல்லவல்லது கலை என கலைஞர் ரவீந்திர நாத் தாகூர் கூறுகிறார் கலை என்ற சொல் செயல் திறமையைக் காட்டுவதும் அழகு ஏற்படும் வகையில் செய்வதும் சுவை பயக்க வல்லதும் பற்பலகாரியங்களுக்கு உதவுவதுமான அறிவையும் ஆற்றலையும் குறிக்கின்றது எனவே கலையில் செயல் அறிவு, பயன், திறமை அழகு சுவை என்பன அடங்கியுள்ளது.

அழகு என்ற அம்சத்தை பிரதானமான நோக்கமாக கொண்டு செய்யப்படும் போது அது அழகுக் கலைகள் எனப்படுகிறது கலை என்ற சொல்லின் பொருள் பரந்து பட்டது சே மே ந் தி ர ர் என்ற கவிஞர் தனது கலாவிலாசம் எனும் நூலில் திறமையுடன் செய்யப்படுவது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு கலை என்னும் ஒரு வினைத்திறமையும் வியக்கத்தக்க முறையில் காரியத்தில் ஈடுபடுதல் எனவும் கூறுகிறார்

கலைகள் 64 வகை என இந்திய இலக்கியங்கள் கூறுகின்றன இதை காமசூத்திரம் எனும் நூலில் கலைகள் பற்றிய பூரண விளக்கம் கூறப்பட்டுள்ளது இவைகள் அழகுக்கலைகள், அறிவுக் கலைகள், பயன்படுகலைகள், விளையாட்டுக் கலைகள், பொழுது போக்குக்கலைகள், ஆன்மீகக் கலைகள், என பலவகைகள் உள்ளன.

கண்ட படைப்புக்களைஆக்குபவன் ''கலைஞன்'' ஆகுகின்றான் கலைஞன் தனது சமூகம், சூழல், செயல் பாடுகள் என்பனவற்றை உன்னிப்பாக ஆராய்ந்து ஆழ்ந்த அவதானம், சிந்தனை, கைத்திறன் மிக்கவனே கலைஞன் ஆவான் அவன் கற்பனைகளில் உருவாகும் காட்சியையே கைத்திறனாக மாற்றி கலைப்பொருளாக வெளிப்படுத்துகிறான் அவ்வாறே ஓசை எழுப்புதல் இசை அமைத்தல் போன்றனவும், எனவே கலைஞனர் கலைப்படைப்பு உருவாக்க வேண்டின் அவனிடம் நுட்பமான திறமை இருக்க வேண்டும். இதனால் இந்திய மரபில் கலை ஒரு யோகம் எனக் கூறப்பட்டுள்ளது.

யோகம் என்பது செயலையும் தன்னையும் ஒருமுகப் படுத்தி ஒருமை உணர்வு பெறும் நிலையாகும் வேறுவிதமாகக்கூறின் காண்பவன், கடைசிப் பொருள் என்பவற்றிற்கிடையே பேதம் கடந்து இரண்டையும் ஒன்றாக காணல். அதாவது ஒரு காரியத்தை முழுமனதுடன் திறமையாக செய்யும் போது அது கலையாகிறது இதனையே பகவத் கீதை காரியங்களின் தேர்ச்சி யோகம் என்கிறது.

ஒழுங்கற்ற சிந்தனை முறைகளை பிரபஞ்ச நிலைகளிற் கேற்ப ஒழுங்குபடுத்துதலே கலை என கலைபற்றி தத்துவஞானி பிளாற்றோ கூறுகிறார்.

யோகம் என்பது வெறும் உளப்பயிற்சி, சமய சம்பந்தமான அப்பியாசம் எனக் கூறப்பட்டாலும் எக்காரியத்தையும் திறமையாக செய்ய உறுதுணையான ஆயத்தம் எனவும் கூறலாம் அதாவது சித்தமுள்ள மனதுக்கு எல்லா அறிவுகளும் நேரடியாக கிடைக்கும் என இந்திய சமயங்களில் வலியுறுத்தப் படுகின்றது இன்று இக்கருத்தை விஞ்ஞானிகளும், மேதைகளும், உளவியல்ாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்

யோகத்தினால் ஏற்படும் ஏகாந்திர சிதை நிலைமை எக்காரியத்தையும் ஆரம்பிக்கு முன் அதுமனத்தில் உள் நாட்டப்பட்டுள்ளது பிரச்சினையைப் பார்த்துவிட்டு உள் முகமாகப் பின் வாங்கி தனது சக்தியை அதிகரித்து சிறந்த கலைப் படைப்பை உருவாக்குவது அவசியமாகும்.

மக்கள் தெய்வத்தின் வடிவை எங்ஙனம் மனக்கதை முன் பிரதிஸ்டை செய்கிறார்களோ அவ்வாறே கலைஞனும் தனது படைப்பினை மனதில் முன்னமே நிலைநிறுத்தி பின் ஆக்குகிறான் தான்வரைய உள்ள ஓவியத்தை கற்பனையில் காணாது எந்த ஒரு கிறுதானும் தூரிகையால் கீறான் என குரோசே கூறுகிறார். உள்ளமானது சாந்தமான அமைதியில் இருக்கும் போது உயர்ந்த கலைப்படைப்பு உருவாகிறது என சுவாங்கு என்பவர் கூறுகிறார்.

சிறந்த கலைப்படைப்பை ஆக்க கலைஞனுக்கு எவ்வளவு பயிற்சியும் கற்பனையும் அவசியமோ கலைப்படைப்பை ரசிப்பதற்கும் ரசிகனுக்கும் அதேயளவு கலையுள்ளம் அவசியமாகிறது. படைப்புணர்வில்மட்டுமே கலைஞனும்,

ரசிகனும், வேறுபடுகின்றனர் சிறந்த ரசிகனாலேயே ஒரு கலைச்சிருஷ்டியை கலைஞனின் உள்ளத்தோடு ஒன்றி அனுபவிக்க முடியும். காதலர்க்கு காதல் அனுபவம் எப்படியோ உண்மையின் அனுபவம் தத்துவஞானிக்கு எப்படியோ அவ்வாறே கலையை அனுபவிக்க ரசிகனுக்கு அழகுமுறை அவசியமாகிறது இதை கவிதாகூர் அவர்கள் அழகியலுணர்வானது தன்னைத்தான் உணர வழிவகுப்பதோடு அவரில் உள்ள உயர் பண்புகளை விளக்கவும் உதவுகிறது எனக்கூறியுள்ளனர் நாம் சில குறிப்பிட்ட பொருள்களின் அழகை மட்டும் ரசித்தலைத் தவிர்த்து எல்லாப் பொருட்களின் அழகையும் ரசிக்க பழக வேண்டும் என கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் கூறுகிறார்.

வாழ்க்கை என்பதே ஒரு கலையாகும் வாழ்க்கையின் அடித்தளம் அழகுணரச்சியில் தங்கியுள்ளது இந்த உணர்ந்து ரசித்து வாழ்வதாலே வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது என்பதும் தாகூரின் கருத்தாகும் ''மனிதனின் மனம்'' என்று மனித குலத்துக்கான ஓரேமதம் என வகுத்துக் கூறும் தாகூர் அனைத்து மனிதர்களின் வாழ்க்கையின் உயர்லட்சியத்திற்கு அழகு, கலை, உண்மை, அறிவு, என்பன அடிப்படை என கூறுகிறார் இவற்றை அவர் சாதாரண சொற்பொழிவுகளில் கூறியுள்ளனர்.

கலையும், ரசனையும் மனிதவாழ்வை வளம்படுத்தி மேம்படுத்தி மனிதனை உயர் நிலைக்கு கொண்டு செல்ல எவ்வளவு பயனுள்ளது என சச்சிதானந்த (சத்சித் ஆனந்த) என்பவற்றுடன் ஒப்பிட்டு Creative Unity என்ற நூலில் கூறியுள்ளார் சௌந்தரயத்தை சிருஷ்டிப்பதே மனிதனின் லட்சியமாகும் எனவும் உலகின் உள்ளார்ந்த உண்மையை அறிய அழகு அவசியம் எனவும் வானில் உலவும் ஒவ்வொரு மேகத்தையும் பூமியில் மலரும் ஒவ்வொரு மலரையும். காதலிப்பவர்கள் முத்தியின் சுவையை அனுஷ்டிக்கின்றார் எனவும் கூறியுள்ளார்.

கலையுனூடு கலைஞன், ரசிகன், விமர்சகன் என்போர் உயர் அனுபவங்களைப் பெறுகின்றனர் இவை அவரவர் சொந்த கற்பன முயற்சியும், பயிற்சியையும் பொறுத்ததே உண்மை ரசிகன் கலைஞன் எதை எண்ணி கலைவடிவில் வடிக்கிறானோ அதையே உணர்வான் எதை வெளிக்கொணர நினைக்கிறானோ அதே அனுபவத்தைப் பெறுவான் கலைஞனின் எண்ணக் கருவை ரசிகன் உணரும்போதே கலைப்படைப்பு வெற்றியடைகிறது கலைஞனின் உணர்வை ரசிகர்கள் பெற்றுக் கொள்வதில் விமர்சகர்களின்பணியும் மூழ்கிக்கிடக்கிறது முக்கிய இடம் பெறுகிறது.

1. கலையொளி
2. யோகர் கண்ட கலை



## பதினாறு ஆண்டுகளில்
## பரிணமித்த மாணவர், தலைவர்கள்

| | |
|---|---|
| 1979 | திரு. ஜே. சி. டேவிட்பிள்ளை |
| 1980 | திரு. கே. முத்துவேல் |
| 1981 | திரு. எஸ். கோபிநாத், |
| | திரு. எஸ். விநாயக மூர்த்தி |
| 1982 | திரு. கே. கிருஷ்ணன் |
| 1983 | திரு. வீ. குருஸ் |
| 1984 | திரு. பி. எம் ராமையா |
| 1985 | திரு. கே. குமரரவேல் |
| 1986/87 | திரு. டி. வடிவேல் |
| 1988/89 | திரு. கே. யசோதரன் |
| 1990 | திரு. டீ. பென்சமின் |
| 1991 | திரு. பீ. விஷ்வநாதன் |
| 1992 | திரு. ஜீ. ராஜரட்னம் |
| 1993 | |
| 1994 | திரு. ஆர். அரியராமர் |
| 1995 | திரு. எஸ். கே. ஆனந்தராஜா |

கலையருவி நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய

## விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களின் பெயர்

### ஆரம்பக்கல்வி

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | திரு. ஆர். அரவிந்தன் | இல. 20, எளுதலுவ வீதி, பதுளை. |
| 02 | திரு. பி. பாரிநேசன் | இல. 10, 7ம் கட்டை பசறை வீதி, பசறை |
| 03 | திரு. டபிள்யு. ரூபஸ் | சின் எஸ்டேட், பூண்டுலோயா. |
| 04 | திரு. எம். நீலமேகம் | ஸ்டாவ் போர்ட் தோட்டம், ராகலை. |
| 05 | வே. இரத்தினவேல் | கொண்டகொல லக்கிலேண்ட், உடபுசல்லாவ |
| 06 | செல்வி. பி. கலையரசி | தரவளை, எஸ்டேட், டிக்கோயா. |
| 07 | செல்வி. எம் சாந்தி | 214, ஏ/ கினிகம வீதி, பண்டாரவளை. |
| 08 | வி. புஸ்பவதி | ஹியூகுலேண்ட், ஊுணுவத்தை பதுளை. |
| 09 | செல்வி. பி. மணிலா | போ ஹமடத்தை, ஹாலிஎல. |
| 10 | செல்வி. எஸ் விசயகுமாரி | 183, 3ங் கட்டை பசறை வீதி, பதுளை. |
| 11 | செல்வி. எம். விஜயசெல்வி | டெல்வின் எஸ்டேட், இறக்குவானை. |
| 12 | செல்வி. இ. கண்ணகி | மாதம்ப எஸ்டேட், இறக்குவானை. |
| 13 | செல்வி. எஸ். பத்மாவதி | சென்மைக்கல் எஸ்டேட், பலாங்கொடை. |
| 14 | திருமதி. மகேஸ்வரி அன்ரன்ராஜ் | இல, 14, ஹெம்டன் லேன், கொழும்பு - 06. |
| 15 | திருமதி. வாசுகி தியாகராஜா | 43, புகையிரத வீதி, கொட்டகலை. |
| 16 | செல்வி. டி. குகனேஸ்வரி | 70, பாமஸ்டன், லிந்துல, |
| 17 | செல்வி. எஸ். கோகிலவாணி | 49, பிரதான வீதி, நானு ஓயா. |
| 18 | செல்வி., இரா இராஜம்மா | 46, பிரதான வீதி, நானு ஓயா. |
| 19 | செல்வி. எம். இளையராணி | விக்லிய எஸ்டேட், பலாங்கொட. |
| 20 | திருமதி. ஆர். புஸ்பராணி | குசலை, பங்கதெனிய. |
| 21 | செல்வி. ஜீ. பி. எம். கொறற்றி | குருமன் காடு, யாழ்வீதி, வவுனியா. |

# மீண்டும் உங்களுடன்...

''சொல்பவருக்கு வாய்ச்சொல் செய்பவருக்கு தலைச்சுமை'' என்பார்கள். எனினும் இம்மலர் மணம் வீச எவ்வித சுமைகளையும் நாம் உணராதிருக்க எமக்கு பல வழிகளிலும் உதவி நல்கியோர் பலர். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைபட்டிருக்கும் இவ் வேளையில்.

- ★ இம்மலர் மலர அனுமதி தந்து ஆக்கபூர்வமான உதவிகளை அளித்த அதிபர் உட்பட நிருவாகத்தினருக்கும்.
- ★ பெருமனதுடன் ஆசிச் செய்தி வழங்கிய கல்வி, உயர்கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. றிச்சர்ட் பத்திரன அவர்களுக்கும்.
- ★ தனது இதயபூர்வமான வாழ்த்துச் செய்தியை எமக்களித்த இம் மலருக்கு மகுடம் சூட்டிய கிராமிய கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு திரு சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களுக்கும்,
- ★ மேலும் ஆசிச் செய்தி வழங்கிய கல்விக்கல்லூரிகள் ஆசிரியர் கலாசாலைகளுக்கான ஆணையாளர் திரு. டி. எஸ் மெத்தானந்த அவர்களுக்கும்,
- ★ மற்றும் ஆசிச் செய்தியை வழங்கிய கல்விக்கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகளுக்கான உதவி கல்விப்பணிப்பாளர் M. A. உமறு லெப்பை அவர்களுக்கும்,
- ★ இன்னும் ஆசிச் செய்தியை வழங்கிய கல்லூரி முதல்வர், பதில் முதல்வர், மற்றும் பொறுப்புவிரிவுரையாளர் கல்விக்கழக தலைவர், பத்திராதிபர் அனைவருக்கும்,
- ★ அட்டைப்படத்தை அழகுற அமைத்து தந்த இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களான T குகனேஸ்வரி, திருமதி. M. கோவிந்தராஜ் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களான M. மகேந்திரன், M. பன்னீர் செல்வம் போன்றோருக்கும்,
- ★ மனமுவந்து விளம்பரங்களை தந்துதவிய வர்த்தக பிரமுகர்கட்கும்,
- ★ உதவி தேவைப்படும் போதெல்லாம் மனம் தளராது நேசக்கரம் நீட்டிய கல்விக்கழக உறுப்பினர்களுக்கும்,
- ★ மலரின் இதழ்களை அழகுற அமைத்து தந்த பதுளை ஊவா பிரின்ட் ஹவுஸ் உரிமையாளர் N. இரவீந்திரன், மற்றும் முகாமையாளர் ஊழியர்கள் அனைவருக்கும்,
- ★ இம்மலர் சிறப்புறுவதற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தந்துதவிய, வழிநடத்திய விரிவுரையாளர்கட்கும்,
- ★ நூலை நுகர்ந்து ஆய்வினைச் செய்த நூலாய்வாளர்களுக்கும், விழாவை சிறப்பிக்க வந்த பிரதம அதிதி, சிறப்பு விருந்தினர், மற்றும் சிறப்பு பிரதியை பெற்றுக் கொண்டோருக்கும்,
- ★ அருவியின் ஊற்றுக்களான ஆக்கங்களை அளித்த விரிவுரையாளர் சக ஆசிரியமாணவ சகோதர சகோதரிகளுக்கும்,
- ★ விளம்பரங்களை சேகரித்து தந்து எம் இதயத்தில் நீங்காத இடத்தினைப் பெற்றுக் கொண்ட ஆசிரிய மாணவ சகோதர சகோதரிகளுக்கும்,
- ★ நூல் வெளியீட்டு விழா இனிதாக நடைபெற கலை நிகழ்ச்சிகளை தந்த கலைஞர்களுக்கும்,
- ★ புகைப்படங்களை எடுத்து உதவியளித்த புகைப்படகலைஞர் அவர்களுக்கும்,

★ அச்சிடுவதில் ஏற்பட்ட எழுத்துப்பிழைகளை திருத்தி எமக்குதவி அளித்த கலாசாலையின் பழைய ஆசிரிய மாணவி உ. யோகேஸ்வரிக்கும், பழைய மாணவன் திரு M. வசந்தகுமார் போன்றோருக்கும்,

★ எமது கல்விக்கழக செயற்பாட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாணவர் பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர் மற்றும் கல்விக்கழக பொருளாளர், போன்றோருக்கும்,

★ இன்னும் மறைகரமாய் இருந்து எமக்கு உதவியளித்த பெருந்தகைகளுக்கும்,


எமது கலாசாலையின் கல்விக்கழகம் தனது ஆழ் மனதின் அடித்தளத்திலிருந்து உணர்வு பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. வருடவரும் பூங்காற்றை வடிகட்டி அனுப்பியது போல் இம்மலர் சம்பந்தப்பட்ட விமர்சனங்களை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி, விடைபெறுகின்றோம் உங்களின் தூயவிழிகளின் பார்வைக்காக இம்மலர் என்றும் உங்களின் கரங்களில் நறுமணம் வீசிய வண்ணமிருக்கட்டும்.

நவில்கின்றேன் நன்றிதனை

வேலு. இரத்தினவேல்
செயலாளர்—கல்விக்கழகம்

BEST WISHES FROM



*Harischandra*

BAKE HOUSE

TALAWAKELLE.

*BEST WISHES FROM*

New

LUXMY SALOON

*Gents, Ladies and Baby's Hair Dressing Hair Tonic*

No. II, Rosita Bazaar,

KOTAGALA.

*BEST WISHES FROM*

THIYAGAMS

32, Rosita Bazaar,

KOTAGALA.

*BEST WISHES FROM*

**Techno Service**

**&**

RECORDING

CENTRE

64 A, New Shoping

Complex

BADULLA.

WI TH BEST COMPLI MENTS FROM

Shanthy Mahals

Dealers in 22 Karat Gold & Ever Silver

105, MAIN STREET, BANDARAWELA.

WITH BEST COMPLIMENTS FROM

NEW VENUS STUDIO

257, Passara Road, BADULLA

BEST COMPLIMENTS FROM

NARMADHA JEWELLERS BANKERS

*Dealers in Genuine Quality Reliable and Durable 22ct Jewellers.*

No. 146. Lower Street. BADULLA

:055-3200